பக்கங்கள்: இருபத்து நான்கு

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 16 வியாழக்கிழமை (01.12.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 348

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

# இன நல்லிணக்கத்தைப் பற்றி பேசினால் வாக்குகுறைந்து விடும் என தடுத்தார்கள்

## சவால்களுக்கு முகம் கொடுத்தேன் என்கிறார்-சந்திரிகா



(கொழும்பு)

இலங்கையில் கடந்த காலத்தில் எந்த அரசாங்கமும் செய்யாத இன நல்லிணக்க செயற்திட்டத்தினை இந்த அரசாங்கம் கடந்த இரண்டு வருடங்களாகசெய்துவருவதாக முன்னாள ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் தேசிய நல்லிணக்க செயற்திட்டமான சகோதர பாசல எனும் செயற்திட்ட முகாம் மட்டக்களப்பில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற நிலையில் அதன் நிறைவு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்புசத்துருக்கொண்டான் சர்வோதய நிலைய வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் தொடர்ந்துரையாற்றிய அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடையே நல்லிணக்கம் இல்லாதன் காரணம் தான் கடந்த முப்பது வருட யுத்தமாகும் என்பதை நாம் அடையாளம் கண்டோம்.

யுத்தத்திற்கு முகம் கொடுத்தவர் அந்த பிரச்சினைகளுடன் வாழ்ந்தவர் என்ற வகையில் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்தவர் என்ற ரீதியில் இந்த இன ரீதியான பிரச்சினைக்கான காரணத்தை அறிந்து அதற்கு தீர்வு காணவேண்டுமென நினைத்தேன்.

இலங்கை சுதந்திரமடைந்தது முதல் எனக்கு தெரிந்த வகையில் இலங்கை ஆட்சி செய்த ஒரு அரசாங்

23ஆம் பக்கம் பார்க்க....

# போர் வெற்றியை பயன்படுத்தி ராஜபக்ஷவினர் ஊழல் மோசடி

## அமைச்சர் மங்கள சபையில் குற்றச்சாட்டு



(கொழும்பு)

**போர் வெற்றியை பயன்படுத்தி மகிந்த ராஜபக்ஷவும் அவரது குடும்பத்தினரும் தமது ஊழல் மோசடிகள் மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகங்களை மூடி மறைத்துக்கொண்டதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர குற்றம் சாட்டியுள்ளார்.**

நாடாளுமன்றில் நடைபெற்று வரும் 2017ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு குறித்த குழுநிலை விவாதத்தில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே மங்கள் சமரவீர இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்

04ஆம் பக்கம் பார்க்க....

## நாடா புயல்

### கடும் காற்றும் மழையும் பெய்யும்

(கொழும்பு)

வங்கக் கடலில் உருவாகியுள்ள நாடா எனப் பெயரிடப்பட்டுள்ள புயலினால், வடக்கில் கடும் காற்றும் மழையும் பெய்யும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. திருகோணமலையிலிருந்து

04ஆம் பக்கம் பார்க்க....

# ரணில், கருணாவுடன் இணைந்து புலிகளைப் பிளவுபடுத்தினார்!

## தோல்விக்கு அதுவே காரணம்-அஸாத்சாலி



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனுடன் இணைந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை இரண்டாகப் பிளவுபடுத்தியதாக தெரிவித்த தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான அஸாத்சாலி,

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் கருணா அம்மானை வைத்தே விடுதலைப் புலிகள் அமைப்பை தோற்கடித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்

23ஆம் பக்கம் பார்க்க....

# விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இலங்கை

## ஒன்றிணைந்த எதிரணி சந்தேகம்




(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களை கைப்பற்றுவதே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரது நோக்கமாக இருந்த போதிலும், இன்று முழு

23ஆம் பக்கம் பார்க்க....

## நட்டஈடு வழங்குமாறு மேர்வினுக்கு உத்தரவு

(கம்பகா)

சாதாரண பிரஜை ஒருவரின் மனித உரிமையை மீறியதாகத் தெரிவித்து நான்கு இலட்சம் ரூபாய் நஷ்டஈடு வழங்குமாறு உச்ச நீதிமன்றம் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு உத்தரவிட்டுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

# ஆயுதகுழு உறுப்பினர்கள் 13 பேருக்கு கடும் நிபந்தனையுடன் பிணை அனுமதி

## பணச்சலவை சட்டத்தின் கீழ் குற்றப் பதிவு மாற்றம்

(கொழும்பு)

வடமாகாணத்தில் இயங்கும் சட்டவிரோத ஆயுத குழுக்களின் உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 13 பேரும் நேற்று புதன்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மேலதிக நீதிவான் அருணி ஆட்டிக்கல முன்னிலையில் இந்த வழக்கின விசாரணைகள நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட போதே, அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இவ்விசாரணையின் போது, சந்தேக நபர்களுக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் குற்றச்

23ஆம் பக்கம் பார்க்க....

## தப்பித்த 'குடு பேபி' மீளவும் கைது!

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்காக அழைத்து வரப்பட்ட சந்தேக நபரொருவர் பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பி ஓடியுள்ளார். பொலிஸார் வலைவீசி தேடுதல் நடத்திய வேளையில் யாழ்.நகரப் பகுதியிலிருந்து மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில்

## வழிபடுநர் பேரவை உறுப்புரிமை விண்ணப்பம் கோரல் - 2017

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எனவே விண்ணப்பிக்க விரும்புபவர்கள் ஆலய முகாமைத் திட்டத்தில் கூறப்பட்ட தகைமைகளை உடையவர்கள் முகாமைத்திட்டத்திற்கு அமைய விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்களை செயலாளர், நயினாதீவு, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் எனும் முகவரிக்கு தபாலிலோ அல்லது ஆலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள தபாற்பெட்டியிலோ நேரடியாகவோ செலுத்த இயலும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 2016.12.01 தொடக்கம் 2016.12.31 பிற்பகல் 5 மணி வரை ஆகும்.

விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய காசுக்கட்டளை, தபாற்கட்டளை விபரங்கள் தேவைப்படுமாயின் 021 321 3024, 021 320 7785 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதற்கு அமைவாகத் தயாரித்துக் கொள்ளலாம்.

2016 ஆம் ஆண்டு வழிபடுநர் பேரவை அங்கத்தவர்களாக இருப்பவர்கள் விண்ணப்பத்தை விண்ணப்பிக்க விரும்பின் வழிபடுநர் பேரவையின் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்திலும் (2 ஆவது அட்டவணை) அவ்வாறு இல்லாது புதிதாக விண்ணப்பிக்க விரும்புபவர்கள் வழிபடுநர் பேரவை புதிய உறுப்புரிமைக்கான விண்ணப்பம் (முதலாவது அட்டவணை) விண்ணப்பிக்க வேண்டும்

குறிப்பு: விண்ணப்பங்கள் பின்வருவோர்களில் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டும்.

- சமாதான நீதவான்
- இந்து மத குரு
- இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்
- கிராமசேவை உத்தியோகத்தர்
- அரசாங்க பாடசாலை அதிபர்

அத்தாட்சிப்படுத்துபவரின் பெயருடன் கூடிய இறப்பர் முத்திரை பொறிக்கப்பட வேண்டும்.

பொ.அன்பரசன், செயலாளர், அறங்காவலர் சபை

---

முதலாம் அட்டவணை

### நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் வழிபடுநர் பேரவை உறுப்புரிமைக்கான விண்ணப்பம்

1.விண்ணப்பதாரரின் முழுப்பெயர்

2.பிறந்தநாள்

3.இந்து சமயத்தவரா?

4.நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோவிலில் வழிபடுபவரா?

5.நீங்கள் உறுப்புரிமை 3 (2) (ஏ) அல்லது 3 (2) (பீ) யின் கீழ் உறுப்புரிமைக்குத் தகுதி பெறுபவராயின் இந்த ஆண்டு கோவிலுக்குச் செலுத்திய கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்களைத் தருக.

| பற்றுச்சீட்டு வழங்கிய நாள் | பற்றுச்சீட்டின் தொடர் எண் | செலுத்திய தொகை | எந்தத் திருவிழா அல்லது பூசை தொடர்பில் இக்கொடுப்பனவு செய்யப்பட்டது என்ற விபரம் |
|---|---|---|---|
| | | | |

6.இலங்கை முகவரி

7.விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள காசுக்கட்டளை / தபாற்கட்டளையின் விபரம்

காசுக்கட்டளை/ த.க. எண் — அலுவலகமும் வழங்கிய நாளும் — தொகை

8.நீங்கள் ஏதாயினும் குற்றத்திற்காக நீதிமன்றம் எதிலாவது எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டீர்களா? அப்படியாயின் வழக்கு இலக்கத்துடன் முழு விபரங்களையும் தருக.

9.இக்கோவிலுடன் ஏதேனும் ஒப்பந்தம் செய்துள்ளீர்களா? அப்படியாயின் முழு விபரங்களையும் தருக.

மேற்கூறிய விபரங்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் வெளிப்படுத்துகிறேன். வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

..............................................................

விண்ணப்பதாரர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு என் முன்னிலையில் ......... ஆம் ஆண்டு............. மாதம்........... நாளன்று ................... எனுமிடத்தில் கையொப்பத்தையுமிட்டார்.

..............................................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

குறிப்பு: விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதவான், இந்து மதகுரு, இலங்கைநிர்வாக சேவை அலுவலர், கிராமசேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படவேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான "றபர் ஸ்டாம்ப்" இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2016.12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

---

இரண்டாம் அட்டவணை

### நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் வழிபடுநர் பேரவையின் உறுப்புரிமையைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம்

நயினாதீவு
ஸ்ரீநாகபூசணி அம்மன் கோவிலின்
அறங்காவலர் சபைச் செயலாளருக்கு,

அன்பார்ந்த ஐயா,

வழிபடுநர் பேரவைக்கான சந்தா புதுப்பித்தல்

............... ஆம் ஆண்டு சனவரி முதலாம் நாள் தொடக்கம் ஓராண்டுக்கு வழிபடுநர் பேரவைக்கான எனது சந்தாவை புதுப்பித்துக்கொள்ள இத்தால் விண்ணப்பிக்கின்றேன். ...................... அஞ்சலகத்தால்............ ரூபாய் பெறுமதிக்கு வழங்கப்பட்ட ............... ஆம் இலக்கங் கொண்ட காசுக்கட்டளை/ தபாற்கட்டளையொன்றை இத்துடன் இணைத்துள்ளேன். வழிபடுநர் பேரவையில் ஓர் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்வதற்கு வேண்டிய தகைமைகள் அனைத்தையும் நான் தொடர்ந்தும் கொண்டிருக்கின்றேன் என்று வெளிப்படுத்துகின்றேன்.

முழுப்பெயர் :- ...............................

முகவரி :- ...............................

.......................................

உறுப்பினர் ஒப்பம்

இந்த விண்ணப்பத்தின் உள்ளடக்கம் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவரான இதில் கூறப்பட்ட விண்ணப்பதாரருக்கு என்னால் முறைப்படி வாசித்து விளங்கப்படுத்தப்பட்டது. அவர் இவ் உள்ளடக்கத்தைப் புரிந்து கொண்டதாகத் தென்பட்டதோடு என் முன்னிலையில்............ ஆம் ஆண்டு........... மாதம்............... நாளன்று........... எனுமிடத்தில் தமது கையெழுத்தையுமிட்டார்.

..............................................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

குறிப்பு :- விண்ணப்பதாரரின் ஒப்பம் சமாதான நீதவான், இந்து மதகுரு, இலங்கைநிர்வாக சேவை அலுவலர், கிராமசேவை அலுவலர், அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படவேண்டும். உறுதிப்படுத்துபவரின் பெயர் பதவிக்கான றபர் ஸ்டாம்ப் இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2016.12.31 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். (C-2835)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகளைப் பெற்று எமது பாடசாலைக்குப் பெருமை சேர்த்த **செல்வி அபிசாயினி புண்ணியமூர்த்தி** அவர்களையும், ஆசிரியர் திரு. தே.துஸ்யந்தன் அவர்களையும், சித்தியடைந்த ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர் :- பாடசாலைச் சமூகம், மு/இரணைப்பாலை றோ.க.ம.வி.**

(C-6525)



---

# மரண அறிவித்தல்



மண்ணில் 28.09.1950 — விண்ணில் 29.11.2016

## திருமதி கனகரத்தினம் செல்வராணி (ரஞ்சி)

திருநெல்வேலி, தாளையடியைப் பிறப்பிடமாகவும், தலங்காவல் பிள்ளையார் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் செல்வராணி 29.11.2016 செவ்வாய்க்கிழமையன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி தங்கமணி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அரியகுட்டி நல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவரான கனகரத்தினத்தின் அன்பு மனைவியும் தர்மஜா (ஜேர்மனி), கதீஸ்வரன் (கணபதி பிறிண்டேர்ஸ்), தர்ஜினி (கனடா), சர்மிளா, நாகநந்தன் (Super Shoes DSI Rep), துளசி ஆகியோரின் அன்புத் தாயும், சிவகுமார் (ஜேர்மனி), தர்ஷினி, சசிகுமார் (கனடா), சிவானந்தன், தினுபன் ஆகியோரின் அன்பு மாமியும், இவானா, எபிசனா, கேமாஜினி, சிவலோஜினி, கர்யுன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சிவலோகநாயகி, மாசிலாமணி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.12.2016) வியாழக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

54/2, தலங்காவல் பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி.
தொடர்பு: 021-321 5077, 0775597754

(6771)

தகவல்
**குடும்பத்தினர்**

# யாழ்.பல்கலையில் விவசாய ஆராய்ச்சி பயிற்சி கட்டடத்தொகுதி அமைக்கப்படும்

## அமைச்சரவை அங்கீகாரம்–கயந்த தகவல்

(கொழும்பு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கட்டடத்தொகுதி அமைக்கப்படவுள்ளதாக பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.



அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நடைபெற்றது.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், JICA அமைப்பினால் இதற்கான நிதியுதவி வழங்கப்படவுள்ளது. அதற்கான வேலைத்திட்டத்தின் ஆலோசனை சேவையினை பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தத்தை அமைச்சரவையின் மூலம் நியமிக்கப்பட்ட ஆலோசனை கொள்முதல் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் வழங்குவதற்கு உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார். (இ-7-10)

## இலங்கையில் நடைபெற்ற சர்வதேச பாலஸ்தீன ஒருமைப்பாட்டு தினம்

(கொழும்பு)

பாலஸ்தீன ஒருமைப்பாட்டுக்கான இலங்கை ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள ஐக்கிய நாடுகளின் பாலஸ்தீன ஒருமைப்பாட்டு தின நிகழ்வு நேற்று முன்தினம் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.15 மணிக்கு கொழும்பிலுள்ள விளையாட்டுத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சுகாதார அமைச்சரும் இலங்கை, பாலஸ்தீன பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் இலங்கைக்கான தலைவருமான டாக்டர் ராஜித சேனாரட்ன பிரதம விருந்தினராக சங்கத்தின் இலங்கைக்கான செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்க கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்தனர்.

சிரேஷ்ட ஊடகவியலாளரும் சமூக நீதிக்கான செயற்பாட்டாளருமான மகிந்த ஹத்தக இந்நிகழ்வில் விசேட உரை நிகழ்த்தினார்.

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பிரபலங்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## சந்திரிகா மற்றும் மகிந்தவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ள பிரதமர்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு விவகாரம் மற்றும் இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விரைவில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

புதிய அரசியலமைப்பை தயாரிக்கும் அரசியலமைப்பு நிர்ணய சபையின் பிரதான வழி நடத்தல் குழுவின் தலைவர் என்ற வகையிலேயே பிரதமர் முன்னாள் ஜனாதிபதிகளை சந்திக்கவுள்ளார்.

இந்தக் குழுவின் முக்கிய அமர்வு நேற்று முன்தினம் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் சுமார் இரண்டு மணிநேரம் நடைபெற்றது.

இதன்போதே முன்னாள் ஜனாதிபதிகளுடன் கலந்தாலோசனை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## இரண்டு ஆண்டுகளில் மட்டும் மகிந்தவின் வெளிநாட்டு பயணச் செலவு 230 கோடிகள்

இரண்டு ஆண்டுகளில் மட்டும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெளிநாட்டுப் பயணச் செலவுகள் சுமார் 230 கோடி ரூபா என தெரிவிக்கப்படுகிறது. வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் நேற்று பங்கேற்று உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

2012ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராபஜக்ஷ உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள் வெளிநாட்டு விஜயங்களுக்காக 2.3 பில்லியன் ரூபா பணத்தை செலவிட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் இளைய புதல்வர் ரோஹித ராஜபக்ஷ ஜப்பானுக்கான விஜயத்தை மேற்கொள்ள வெளிவிவகார அமைச்சு 20 இலட்சம் ரூபா பணத்தை வழங்கியுள்ளதாகவும் எந்த அடிப்படையில் ரோஹித ஜப்பானுக்கு விஜயம் செய்தார் என்பது பற்றிய விபரங்கள் எதுவும் வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் கொன்சோல் அதிகாரியொருவர் இல்லாத காலத்தில் வீடு ஒன்றை வாடகைக்கு அமர்த்தி அந்த வீட்டில் அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் புதல்வர் தங்கியிருந்தார் எனவும் கோத்தபாயவின் புதல்வர் 21 மாதங்கள் குறித்த வீட்டில் தங்கியிருந்தார் எனவும் அதற்கான செலவுகளை வெளிவிவகார அமைச்சு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2013ஆம் ஆண்டில் வீடு வாடகைக்கு அமர்த்தப்பட்டதாகவும் இதற்காக 27 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் அமைப்பில் ஆற்றிய உரைகளை இங்கிலாந்து நிறுவனமொன்று தயாரித்துள்ளதாகவும் அதற்காக 300 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சில் மோசடிகள் இடம்பெற்ற காலத்தில் அப்போதைய வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆபிரிக்காவில் காணப்படும் வனவிலங்கு சரணாலயங்களில் காலத்தை கழித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.(இ-7-10)

## பாடசாலைகள் தொடர்பான ஆய்வறிக்கை வெளியீடு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 10,973 ஆகும். இதில் ஆரம்பப் பாடசாலைகளின் எண்ணிக்கை 3,559 ஆகும் என்று முகாமைத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் ஆய்வுப் பிரிவு மேற்கொண்ட ஆய்வறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த ஆய்வறிக்கையின் முதல் பிரதியை முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் பேராசிரியர் அஜந்த எஸ்.தர்மசிறியினால் வெளியிடப்பட கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த வைபவம், முகாமைததுவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்றது. குறித்த ஆய்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையிலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை 10,973 ஆகும். இதில், தனியார் மற்றும் விசேட பாடசாலைகள் 103 உள்ளன. ஆரம்பப் பாடசாலைகளின் எண்ணிக்கை 3.559 ஆகும். இந்தப் பாடசாலைகளில் எல்லாம் மொத்தமாக 43 இலட்சம் மாணவர்கள் பயிலுகின்றனர். 249,024 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

## இ.போ.ச.சாரதிகளின் விடுமுறைகள் இரத்து

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகளில் பணியாற்றும் அனைத்து சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கான விடுமுறைகள் அனைத்தும் இரத்து செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

அரசாங்கத்தால் முன் வைக்கப்பட்டுள்ள 7 போக்குவரத்து குற்றச்சாட்டுக்களுக்கு 25,000 ரூபாய் அபராதம் விதிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, தனியார் பேருந்து ஊழியர்கள் இன்று முதலாம் திகதி முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே, இந்த விடுமுறை இரத்து செய்யப்பட்டுள்ளது.

டிசெம்பர் மாதம் 6ஆம் திகதி, கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ளமையால், அவர்களது பரீட்சைக்கு தடையாக இருக்க வேண்டாம் என்றும் இதற்கு அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் என்றும் இலங்கை அதிபர்கள் சங்கம் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## வடக்கில் ராணுவ முகாம்களுக்கு வெளியே புத்தர் சிலைகளை அமைக்க வேண்டாம்

### பாதுகாப்புச் செயலாளர் பணிப்பு

(கொழும்பு)

வடக்கில் இராணுவ முகாம்களுக்கு வெளியே எந்தவொரு புத்த சிலைகளையும் அமைக்க வேண்டாம் என பாதுகாப்புச் செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

வடக்கின் முப்படை பிரதானிகளுக்கு இவ்வாறு தாம் பணிப்புரை விடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் ஊடக நிலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய் கேள்விகளுக்கு பதிலளித்த போது இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் இலங்கையில் செயற்பட்டு வருவதாக எனக்குத் தெரியாது. எனினும் அந்த அமைப்பின் செயற்பாடுகள் நாட்டில் இடம்பெற்று வருகின்றனவா? என்பது குறித்து உன்னிப்பாக கண்காணிக்கப்படுகின்றது.

சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களை வைத்திருப்போருக்கு எதிராக கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப்படும். அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்காது துப்பாக்கிகளை சட்டவிரோதமாக வைத்திருப்போருக்கான அபராதம் அதிகரிக்கப்படும்.

12 ஆண்டுகளுக்கு குறைவாக சேவையில் ஈடுபட்டு ஊனமுற்ற படைவீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

தேசிய வனவிலங்கு பூங்காக்களில் இராணுவப் பயிற்சி போன்ற நடவடிக்கைகளினால் விலங்குகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலேயே படையினர் பயிற்சியில் ஈடுபடுகின்றனர் என தாம் கருதுவதாக பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## வீடு வாடகைக்கு

நல்லூர் பகுதியில் 3 அறைகள் மற்றும் சமையல் அறையுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு

தொடர்புகளுக்கு: இ

071 851 3913


### கடும் காற்றும்...

450 கிலோ மீற்றர் தூரத்தில் நேற்று நள்ளிரவு நிலை கொண்டிருந்த நாடா புயல், யாழ்.குடா நாட்டின் வடமேற்காக நகரும் சாத்தியக் கூறுகள் காணப்படுவதாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகு அறிவித்துள்ளது. இன்று முதலாம் திகதி நள்ளிரவு புயல் சின்னம், தமிழ் நாட்டின் வட பகுதியூடாக நகருமெனவும் மறு நாள் 2ஆம் திகதி வரை நாடு முழுவதும் காற்றுடன் கூடிய பரவலான மழை காணப்படுமெனவும் வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. (செ-11)


## மரண அறிவித்தல்

### திருமதி தவபாலசிங்கம் ஞானேஸ்வரி (குஞ்சு)



அளவெட்டியை பிறப்பிடமாகவும் நல்லூர் முருகேசர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட தவபாலசிங்கம் ஞானேஸ்வரி 30.11.216 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தவபாலசிங்கத்தின் அன்பு மனைவியாரும் செல்லத்துரை இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வன்னியசிங்கம் மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மருமகளும் வாசுகி (ஜேர்மனி), பிரகாசன் (ஜேர்மனி), சாளினி (பிரான்ஸ்), பிரசாத் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத்தாயும் சுரேந்திரன் (ஜேர்மனி), கேதாரணி (ஜேர்மனி), நவநீதன் (பிரான்ஸ்), லக்சிகா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் செல்லத்துரை தங்கம்மா, பாலசுப்பிரமணியம் கோசலாதேவி ஆகியோரின் அன்பு பெறாமகளும், அருந்தவநாதன் (அ.ம.ப.நோ.கூட்டுறவு சங்க முன்னாள் கிளை முகாமையாளர்), பாலகௌரி (ஜேர்மனி), பாலயோகினி (அவுஸ்திரேலியா), பாலவிஜிதா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகேந்திராதேவி, ஜீவராஜா (ஜேர்மனி), காலஞ்சென்ற பாலசந்திரன் (அவுஸ்திரேலியா), முரளிதரன் (லண்டன்), காலஞ் சென்றவர்களான சிவாநந்தசிங்கம் தேவராணி, சுவர்ணராணி, மற்றும் கிருஸ்ணசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் யதுஷா, யர்சிகன், மதுஷா, கவிஷா (ஜேர்மனி), றக்ஸன், லஷிஜா, கன்ஷிஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பேத்தியாருமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (01.12.2016) வியாழக்கிழமை அவரின் சகோதரனான அருந்தவநாதன் (அப்பன்) இன் செட்டிவளவு அளவெட்டி இல்லத்தில் இருந்து நண்பகல் 12.00மணிக்கு அளவெட்டி வடக்கு கேணிபிட்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரிகைக்காக எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செட்டிவளவு
அளவெட்டி கிழக்கு. (6770)

தகவல்
அருந்தவநாதன்
சகோதரன்.


### போர்...

வைத்திருக்கின்றார்.

இதுகுறித்து மங்கள சமரவீர மேலும் தெரிவிக்கையில், யுத்தத்துக்கு பின்னர் இந்த நாடு ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டிருந்தது. 2009 ஆம் ஆண்டு இராணுவம் வெற்றி கொண்ட யுத்தத்தை ராஜபக்ஷ குடும்பத்தினர் ஊழல், படுகொலை களை மூடிமறைப்பதற்கு பயன்படுத்திக் கொண்டதோடு, பொய்யான தேசப்பற்றுத் திரையை ஏற்படுத்தி சர்வதேச ரீதியாக நாட்டிற்கு இருந்த நற்பெயரை கெடுத்தனர்.

தெளிவாக கூறவேண்டுமாயின், எமக்கு சார்பாக இருந்த சர்வதேச உறவு அந்த காலத்தில் இல்லாமல்போனது. எனினும் குறுகிய காலத்தில் அந்த உறவைக் கட்டியெழுப்ப எம்மால் முடிந்தது. வெளிநாட்டு பயணங்களுக்காக 2.3 பில்லியன் ரூபாய் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் செலவு செய்யப்பட்டுள்ளது. முன்னைய ஆட்சி காலத்தில் வெளிநாட்டு இராஜதந்திரிகள் ராஜபக்ஷவின் அடிமைகளைப்போல் காணப்பட்டனர். வெளிவிவகார அமைச்சின் கன்சியூலர் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படாத நிலையில் கடந்த 2013 ஆம் ஆண்டு அவருக்கென்று உத்தியோகபூர்வ இல்லம் ஒன்று வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டது.

கடந்த வருடம் ஜூலை மாதம் வரை அந்த வீட்டிற்கான வாடகை உள்ளிட்ட செலவு 27.6 மில்லியனுக்கும் அதிகமான நிதி செலவிடப்பட்டுள்ளது. அதிகாரி ஒருவர் இல்லாத நிலையில் வெறுமனே வீடு ஒன்றுக்கு இவ்வளவு நிதி செலவிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மங்கள தெரிவித்தார். (செ-11)


## யாழ்ப்பாணம் மாநகர சபை

சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்கள், சிற்றுண்டிச்சாலை என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

### கேள்வி, மீள்கேள்வி அறிவித்தல் - 2017

யாழ்.மாநகர சபையினால் 18.10.2016, 19.10.2016 ஆகிய திகதிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கு அமைவாக, இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2017ஆம் திகதிமுதல் 31.12.2017ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப்படிவக்கட்டணம் -ரூபா 500.00 (VAT, NBT நீங்கலாக)
கேள்விப்படிவம் விநியோகித்தல்-02.12.2016-15.12.2016 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல் -16.12.2016 மு.ப 9.30 மணிவரை
கேள்வி திறத்தல் -16.12.2016 மு.ப. 10.00 மணிக்கு

மாநகர சபை யாழ்ப்பாணம்
கேள்வி, மீள்கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ. இல | விபரம் | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்தகேள்வித் தொகை (15% பெறுமதி சேர் வரியும் 2% தே.க.எ.வரியும் நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | குருநகர் பன்றி இறைச்சிக் கடை (மேல்மாடி) | இல.35 | 5,000.00 | 20,000.00 |
| 2 | நாவாந்துறை கருவாட்டுக் கடை | இல.12 | 5,000.00 | 11,542.50 |
| 3 | பெரியகடை மரக்கறிச்சந்தை | | 10,000.00 | 2,213,500.00 |
| 4 | நாவாந்துறை மீன்சந்தை | | 10,000.00 | 548,150.00 |
| 5 | பண்ணைமீன் சந்தை சிற்றுண்டிச்சாலை | | 1,000.00 | 179,122.50 |
| 6 | பூங்கன்குளம்உள்ளூர்உணவு உற்பத்தியாளரின் சந்தை | | 2,000.00 | 8,122.50 |
| 7 | இந்துவிடுதிக்கு தெற்குப் பக்கமாகவுள்ள வாகனத் தரிப்பிடபாதுகாப்புநிலையம் | | 1,000.00 | 49,975.00 |
| 8 | துரையப்பா விளையாட்டு அரங்கத்தில்நிகழ்வுகளின் போதுநடத்தப்படும் சிற்றுண்டிச்சாலை (01.01.2017 -30.06.2017) | | 5,000.00 | 128,250.00 |
| 9 | சுப்பிரமணியம் பூங்காவளாகத்திலுள்ள சிற்றுண்டிச்சாலை | | 1,000.00 | 65,700.00 |
| 10 | யாழ்.கச்சேரியடி சிறுவர் பூங்கா சிற்றுண்டிச்சாலை | | 1,000.00 | 332,340.00 |

மாநகரசபை அலுவலகம் யாழ்ப்பாணம்.
01.12.2016 (சி-6535)

பொ.வாகீசன்
ஆணையாளர், யாழ்.மாநகர சபை.



## துயர் பகிர்கின்றோம்



திருமதி

### சின்னையா சறோஜினி

எமது பாடசாலையின் ஆசிரியை செல்வி டயனேஸ்வரி மார்க்கண்டு அவர்களின் அன்புச் சகோதரி திருமதி சின்னையா சறோஜினி அவர்களின் திடீர் மறைவின் நிமித்தம் துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தவருடன் நாமும் இணைந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் (6773)

பாடசாலைச் சமூகம், யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்



யாழ்.நகரின்...
தரம் குன்றாத கல்விச் சேவையில்
29 வது ஆண்டில் காலடி பதிக்கும்
புதிய
நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி சந்தி,
யாழ்ப்பாணம்.

கல்வியாண்டு - 2017
தரம் 1 முதல்
O/L வரை
■ தமிழ் மொழி மூலம்
■ English Medium
(C-6536)



புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

03.12.2016
சனிக்கிழமை
பிற்பகல் 4.00 மணி



## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலையின் ஆசிரியர் சகோதரத்துவ உறுப்பினரும் கலை, வர்த்தக பிரிவு பகுதித் தலைவரான திரு. இ. நித்தியானந்தன் அவர்களின் அன்பு மாமியார்

திருமதி
### சிவக்கொழுந்து விநாயகமூர்த்தி



அவர்களின்
பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
(C-6537)



2017ஆம் ஆண்டில் காலடி வைக்கும் மாணவர்களே!

சேல் SALE

மாபெரும்
## மலிவு விற்பனை

10 % தொடக்கம் 50 % வரையான
விலைக் கழிவு

டிசம்பர் 01 முதல்
ஜனவரி 15 வரை

அப்பியாசக் கொப்பிகளுக்கு 30% வரை விலைக்கழிவு

எங்கள் சேவை ஞாயிற்றுக்கிழமைகளிலும் உங்களுக்காக காலை 8.30 மணி தொடக்கம் 6.30 மணிவரை

விரையுங்கள்...

- பாலர் முதல் பல்கலை வரையான நூல்கள்
- சிங்கள, தமிழ், ஆங்கில அகராதிகள்
- பிரபலம் வாய்ந்த எழுத்தாளர்களின் நாவல்கள்
- புராண இதிகாச நூல்கள்

அனைத்து தர காகிதாதிகள், எழுதுபொருட்கள், அலுவலக உபகரணங்கள் மலிவு விலையில்

எம்மால் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட வவுச்சர்களுக்கான கொள்வனவுகளை 05.12.2016 முதல் பெற்றுக் கொள்ளலாம்.
அதற்கு மேலாக கொள்வனவு செய்யும் மாணவர்களுக்கு விசேட விலைக்கழிவு

பிரதான காட்சியறை
### ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, 214, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5542, 021 567 1527 E-mail: acdil@ymail.com
(C-6532)







யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிற்கு உட்பட்ட பொலிஸ் நிலையங்களில் குற்றங்களை கட்டுப்படுத்துவதில் சிறப்பாக செயற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களை கௌரவிக்கும் நிகழ்வு யாழ்.தலைமை பொலிஸ் நிலையத்தில் நேற்றைய தினம் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றது. இந்தநிகழ்வில் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்ஜீவ தர்மரத்ன, யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்கர் ஸ்ரெலஸ்ரின்லாஸ் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# பயங்கரவாதத்தடைச்சட்டத்திலிருந்து ஆவாகுழு சந்தேக நபர்கள் விடுவிப்பு

## நான் அளித்த வாக்குறுதி நிறைவேறியது—மனோ

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு கொழும்புக்கு கொண்டுவரப் பட்ட ஆவா குழு சந்தேகநபர்களான 11 யாழ். இளைஞர்களின் வழக்குகள், நேற்று பயங்கர வாதத் தடைச் சட்டத்தில் இருந்து அகற்றப் பட்டுள்ளன. அதன்படி 11 இளைஞர்களும், கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விடயத்தில் தலையிட்டிருந்த அமை ச்சர் மனோ கணேசன் இது தொடர்பில் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளதாவது.

ஆவா குழு உறுப்பினர்கள் என அண்மை யில் கைது செய்யப்பட்டு, கொழும்புக்கு கொண்டு வரப்பட்டு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணத்தை சார்ந்த இளைஞர்களின் விவகாரம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழிருந்து அகற்றப்பட்டு, சாதாரண சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன்மூலம் இவர்களுக்கு நேற்றுப் பிணை வழங்கப் பட்டு, கைப்பற்றப்பட்ட வாகனங்களும் மீள ளிக்கப்பட்டு, இது தொடர்பில் கடந்த வாரம் என்னைச் சந்தித்து உருக்கமாக வேண்டு கோள் விடுத்த சம்பந்தப்பட்ட இளைஞர்க ளின் குடும்ப உறுப்பினர்களுக்கு நான் அளித்திருந்த உறுதிமொழி நிறைவேறி யுள்ளது.

சம்பந்தப்பட்ட இளைஞர்கள் தொடர்ந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழேயே வைக்கப்பட்டிருப்பார்களாயின் இவர்களது எதிர்காலம் ஒரேயடியாக பாழாகியிருக்கும். இவர்களின் இளம் வயது விபரங்களை அறிந்த பிறகே நான் இந்த விவகாரத்தில் தலையிட் டேன். அத்துடன் மீண்டும் பயங்கரவாதச' சட்டம் பயன்படுத்தப்பட்டு எவரும் இந்த நாட்டில் கைது செய்யப்படக்கூடாது என்பது எனது கொள்கை நிலைப்பாடாகும். இதன் அடிப்படையிலேயே இந்த விவகாரத்தை பிரதமரின் கவனத்துக்கு கொண்டு சென்று கொள்கை நிலைப்பாட்டு முடிவுக்கு கொண்டு வந்துள்ளேன்.

ஆனால், இந்த வழக்குகள் முடியவில்லை என்பதை சந்தேக நபர்களும், யாழ் .மக்களும் அறிந்துகொள்ள வேண்டும். குற்றவியல் சட்டத்தின் கீழ் இவர்கள் விசாரிக்கப்படுவார்கள். குற்றங்கள் நிரூபிக்கப்படுமானால், இவர்களுக்கு குற்றவியல் சட்டங்களின் அடிப்படையில் தண்டனை வழங்கப்படும். அதில் எந்தவித மாற்றமும் இல்லை. விரைவில் இந்த வழக்குகளை யாழ்ப்பாண நீதிமன்ற ங்களுக்கு மாற்றி தருகிறேன். அதன்பிறகு இந்த வழக்குகள் யாழ். நீதிமன்றங்களுக்கு வரும்போது, உரிய தீர்ப்புகள் வழங்கப்பட்டு இவர்கள் சமூகத்தில் உள்வாங்கப்படவேண்டும். அது தொடர்பில் யாழ். மாவட்ட நீதிமன்றங்கள் முறைப்படி கவனத்தில் எடுக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

யாழ்.மக்களுக்கு தொல்லை தரும் வண்ணம், மீண்டும் வடக்கில் ஆவா குழு நடவடிக்கைகள் தலை தூக்குமானால், எந்தவித தயக்கமும் இல்லாமல் மிகக் கடுமையான பொலிஸ் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்பதையும் இங்கே கூறி வைக்க விரும்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# சாதாரண தர மாணவர்களுக்கு வகுப்புகள் நடத்துவதற்கு தடை

கல்வித் பொதுத்தராதர சாதாரண தர மாணவ, மாணவியருக்கு வகுப்புகள், கருத்தரங்குகள் நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவ, மாணவியர்களுக்கு இவ்வாறு கருத்தரங்குகள், வகுப்புக்கள் நடத்துவதற்கு அனுமதிக்கப் படாது என இலங்கை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. நேற்று நள்ளிரவு முதல் இவ்வாறான கருத்தரங்குகள், வகுப்புகள் நடத்துவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவு பரீட்சைகள் நிறைவடையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரையில் அமுலில் இருக்கும் என பரீட்சைகள் ஆணை யாளர் எம்.என். ஜே.புஸ்பகுமார் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு எங்கேனும் கருத்தரங்குகள், வகுப்புகள் சாதாரண தர மாண வர்களுக்கு நடத்தப்பட்டால் 119 என்ற பொலிஸ் அவசர அழைப்பு பிரிவு அல்லது 1911 என்ற பரீட்சைத் திணைக்கள அவசர அழைப்புப் பிரிவிற்கு அறிவிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)


SILVER SHIELD SOCKS

கடந்த 30 வருடங்களாக யாழ்.நகர் மக்களின் நன்மதிப் பைப் பெற்ற தரமான நீடித்த பாவனை மலிவு விலை சிறந்த தயாரிப்பு

SILVER SHIELD SOCKS
காலுறைகள்

பாடசாலைகளுக்கு தேவையான சொக்ஸ் வகைகள் பாடசாலைக்கு ஏற்ற வர்ணங்களில் மிக மலிவு விலை யில் தயாரித்து பெற்றுக்கொள்ள முன்கூட்டி பதிவு செய்துகொள்ளலாம்.

தொடர்பு :

ஸ்ரீ முருகன்
தொலைத்தொடர்பு நிலையம்
303, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 5392


# இராசி பலன்

01.12.2016

(கார்த்திகை 16, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு

துதியை முன்னிரவு 9.35 மணிவரை

மூலம் பின்னிரவு 4.55 மணிவரை

சுபநேரம் 7.44-9.14 மணிவரை

இராகுகாலம் 1.44-3.14 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை | | |
| செவ் | சந்திராஷ்டமம் மிருகசீரிடம் | | ராகு |
| புத சுக் சந் | சூரி சனி | | குரு |

**மீனம்:** தொழில் வளர்ச்சி மேலோங் கும், நண்பர்கள் உதவ முன் வரலாம், ஆரோக்கியமான நாள், புதிய பொருட் சேர்க் கையுண்டு, போசன சுகமு ண்டு.

**மேடம்:** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், பயணங்களால் பலனுண்டு, ஆன்றோர் சந்திப்புண்டு.

**இடபம்:** வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், தேகநல னில் கவனம் தேவை, குடும் பப் பெரியவர்களின் ஆலோ சனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**மிதுனம்:** நண்பர்களால் ஒருசில நன் மைகள் ஏற்படும், ஆசைப் பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள், குடும் பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும்.

**கும்பம்:** காரிய அனுகூலமுண்டு, சம யோசிதப் புத்தியால் பலரை யும் கவர்வீர்கள், தொலை பேசி வழியில் சுப தகவல் கள் வந்து சேரலாம், வருமா னம் திருப்தி தரும்.

**கடகம்:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பழைய கடன்களை அடை க்க புதிய வழியைக் கையா ள்வீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும்.

**மகரம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், வழி பாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தனவிரய முண்டு.

**சிம்மம்:** எண்ணங்கள் எளிதில் கைகூ டும், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், புதிய நபர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**தனுசு:** சிந்தனை மிகுதியான நாள், சொன்ன சொல்லைக் காப் பாற்ற துடிப்போடு செயற் படுவீர்கள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழி பட வேண்டிய நாள்.

**விருச்சிகம்:** வருங்கால நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், திடீர் பயணங்கள் தித்திக்க வைக் கும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், வாக்கு மேன் மையுண்டு.

**துலாம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், பழைய பாக்கிகள் திடீரென வசூலாகலாம், செய்தொழில் மேன்மை யுண்டு, போசன சுகமுண்டு.

**கன்னி:** குடும்பத்தினர் உங்களின் சொற்களைக் கேட்டு நடக்க முன்வருவர், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள் வர், சுப செலவுகள் கூடும்.

# ஆவா குழு தற்போது யாழில் இல்லை

## யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

*(யாழ்ப்பாணம்)*

***ஆவா குழு தற்போது யாழ்ப்பாணத்தில் இல்லை என யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன தெரிவித்துள்ளார்.***

யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிற்கு உட்பட்ட பொலிஸ் நிலையங்களில் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதில் சிறப்பாக செயற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களை கௌரவிக்கும் நிகழ்வு யாழ். தலைமை பொலிஸ் நிலையத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது. இந்நிகழ்வின் முடிவில் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழில் கடந்த காலங்களில் ஆவா குழுவின் ரவுடிசத்தால் அமைதியின்மை காணப்பட்டிருந்தது.

இதன் காரணமாக கொழும்பிலிருந்து வந்த பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் ஆவா குழு என்ற சந்தேகத்தில் 11 பேர் கைது செய்யப்பட்டு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்கள் அனைவருக்கும் விளக்கமறியல் விதித்த நீதிமன்றம் நேற்றையதினம் பிணையில் விடுவித்திருந்தது.

மேலும் நேற்று முன்தினமும் ஆவா குழு என்ற சந்தேகத்தில் 4பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் ஆவா குழு தற்போது என்ன நிலை யில் உள்ளது எனக் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆவா இப்போது போய் விட்டது.ஒன்றும் இல்லை எனப் பதிலளித்துச் சென்றார்.

இதேவேளை ஆவாகுழுவின் பிரதான சந்தேக நபர்கள் ஒரு சிலரை பொலிஸார் தற்போதும் தேடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(இ-4)



டெங்கு நுளம்புகள் பெருகுவதைத் தடுக்கும் நோக்கில் கடந்த 25 ஆம் திகதி கொடிகாமப் பொலிஸார், பொதுமக்கள் ஆகியோர் இணைந்து சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.



இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டிலும் யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், மட்டக்களப்பு சர்வமதக்குழுவின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற வடமாகாண உண்மையைக் கூறும் குழுமத்தின் அமர்வு நேற்று முன்தினம் யாழ்.சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. இந்த அமர்வில் பல மாவட்டங்களில் இருந்தும் பல்வேறு சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்கள் வருகை தந்திருந்து தமது துயர சம்பவங்களை வெளிப்படுத்தியதுடன் தமது தேவைகள் குறித்தும் தெரியப்படுத்தியிருந்தனர். இதில் தெரிவு செய்யப்பட்ட சிலருடைய துயர சம்பவங்களை உள்ளடக்கிய தொகுப்பு நூல் ஒன்றும் வெளியிடப்பட்டிருந்தது. (படங்கள்:பொ.சோபிகா)

## தீவகக்கல்வி வலயம் நடத்தும் மாற்றுவலுவுடையோர் தினம்

(யாழ்ப்பாணம்)

தீவகக்கல்வி வலய விசேட கல்விப்பிரிவு நடத்தும் சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினம் இன்று வியாழக்கிழமை காலை 8 மணியளவில் யாழ். வேலணை மத்திய கல் லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

தீவகக்கல்வி வலய கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வித் திணைக்கள விசேட கல்வி முறைசாராக் கல்விப்பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.கமலராஜன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக தீவக வலய கல்வி அபிவிருத்திப் பிரிவின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன், ஊர்காவற்றுறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் மு.சத்தியசீலன், கௌரவ விருந்தினர்களாக தீவக வலய முறைசாராக் கல்வி ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் ப. ஆரூரன், யாழ். வேலணை மத்திய கல்லூரி அதிபர் சி.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)



## கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன

தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவில் அமைக்கப்பட இருக்கும் கலாசார மத்திய நிலையத்தில் இசை, நடனம், நாடகம், சித்திரம், சிங்களம், ஆங்கிலம் ஆகிய பாடநெறிகள் கற்பிக்கப்படவுள்ளன.

உள்ளக அலுவல்கள், வட மேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் தெல்லிப் பழை கலாசார மத்திய நிலையம் 2017 ஆம் ஆண்டிற்கான திறமை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இக்கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்காக தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் குறித்த பாடங்களைக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கற்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுய விபரங்களை எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர் நிலையப் பொறுப்பதிகாரி கலாசார மத்திய நிலையம், காடிவளை, இளவாலை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலக ஸ்ரீமோகன் அறிவித்துள்ளார். (இ-7)

# வெட்டுங்கள்; கொல்லுங்கள்!

## எங்களைக் காப்பாற்றுங்கள் என்று கதறும் சத்தம் பலமாகக் கேட்டது

## முன்னாள் எம்.பி.சுரேஷ் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

இவர்களை கொல்லுங்கள், வெட்டுங்கள் என்ற ஆக்ரோசமான சத்தத்துடன் எங்களை காப்பாற்றுங்கள் என்று கதறும் சத்தமும் பலமாக கேட்டது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் மன்றில் சாட்சியமளித்துள்ளார்.

ஊர்காவற்றுறை பகுதியில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பான வழக்கின் சாட்சியங்களுக்கான பதிவு விசாரணை 7 ஆம் நாளாக யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று முன்தினம் யாழ்.மேல் நீதிமன்றில் நடைபெற்றது.

அந்த வழக்கில் கண்கண்ட சாட்சியங்களில் ஒருவரான சுரேஷ் பிரேமச்சந்திரன் மன்றில் ஆஜராகி சாட்சியம் அளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் சாட்சியமளிக்கையில்,

இந்த தாக்குதல் சம்பவம் என் வாழ்வில் நடந்த மிக முக்கியமான சம்பவமாகும். எனவே அங்கு நடந்தவை அனைத்தும் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. நாங்கள் தேர்தல் பரப்புரைக்காக ஊர்காவற்றுறையை நோக்கி சென்று கொண்டிருந்த வழியில் நாரந்தனை என்னும் இடத்தில் எமது வாகனங்களை வழிமறித்து தக்கினார்கள்.

வெள்ளை நிற கன்டர் வாகனத்தில் நின்றவர்கள் நான் சென்ற வாகனத் தொடரணியில் முன்னால் சென்ற வாகனங்களை தாக்கியதை என்னால் காணக்கூடியதாக இருந்தது.

அந்த சம்பவம் நடந்த இடத்தில் பெருமளவிலான துப்பாக்கி வேட்டுக்களும், வாகனங்களை அடித்து நொருக்கும் சத்தமும் கேட்டது.

அத்துடன் இவர்களை கொல்லுங்கள், வெட்டுங்கள், அடியுங்கள் விடாதையுங்கோ என சத்தங்கள் கேட்டதுடன் காப்பாற்றுங்கள் என்று கத்தும் சத்தமும் பலமாக கேட்டது.

அந்த இடத்தில் மதனராசா நின்றது எனக்கு நன்கு தெரியும். அவர் ஈபிஆர்எல்எப் இல் என்னுடன் இருந்தே பின்னர் ஈபிடிபியில் இல் இணைந்தவர் என்பதால் அவரை இலகுவில் என்னால் அடையாளம் காண முடிந்தது. மதனராசா தகாத வார்த்தைகளால் பேசியபடி கையில் வைத்திருந்த கொட்டனால் ஆக்ரோசமாக தாக்கினார்.

இந்த சம்பவத்தில் சம்பவ இடத்தில் காயத்துக்கு இலக்கான மாவை சேனாதிராசாவை முன்னாள் மாநகர சபை மேஜர் ரவிராஜின் வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றோம்.

நான் வந்த கார் தாக்கப்படாத போதும் அதனை திருப்பி கொண்டுவர முடியாத காரணத்தால் ரவிராஜின் வாகனத்தில் யாழ் நோக்கி வந்தோம். சம்பவ இடத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த முதல் வாகனம் அதுதான்.

அந்த வாகனத்தில் மாவை, நான், ஏரம்பு உட்பட காயப்பட்ட வேறு சிலரும் இருந்தனர் என அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்தார்.

வழக்கின் கண்கண்ட சாட்சியில் 25 ஆவது சாட்சியான நவரட்ணம் கணேஸ்வரன் என்பவரும் நேற்று முன்தினம் சாட்சியம் அளித்திருந்தார். (இ-9)

# யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

# தரம் ஐந்து மாணவர் கௌரவிப்பு விழா - 2016

## சித்தி பெற்று வரலாற்றுச் சாதனைபடைத்த மாணவச் செல்வங்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்


கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 178 மாணவர்கள் தோற்றினர். இதில் வெட்டுப்புள்ளிகளிற்கு மேல் சித்தியடைந்த 62 மாணவர்களையும், 70 புள்ளிகளிற்கு மேல் சித்திபெற்ற 116 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்களின் வெற்றிக்கு தம்மை அர்ப்பணித்துச் சேவையாற்றிய அதிபர் திரு.பே.தனபாலசிங்கம், தரம் 5இல் கற்பித்த ஆசிரியர்களான திருமதி.சு.தயாளினி, திருமதி.ஜெ.தவநாதன், திருமதி.ச.தேவதாஸ், திருமதி.நி.நந்தினி, திருமதி.வ.தர்மராஜா, செல்வி.ஐ.வனஜமலர், திரு.வே.அன்பழகன் ஆகியோரினதும் தரம் 1 இலிருந்து 4 வரை கற்பித்த ஏனைய ஆசிரியர்களினதும் பணி என்றும் சிறப்புறவும் மற்றும் பல்வேறு வகையிலும் உதவி புரிந்த பாடசாலைச் சமூகத்தினர் அனைவரையும் அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதுடன் எமது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.



| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | இ.கஸ்வினி | 182 | 16. | வி.ஜதுமிலன் | 170 | 31. | சி.ஆதவன் | 161 | 46. | ம.லேமிதா | 157 |
| 02. | வி.அனந்தனேஷ் | 180 | 17. | வி.கிருசிகா | 169 | 32. | சு.வேணகை | 161 | 47. | வ.தேனுஜன் | 156 |
| 03. | கெ.தனோஜன் | 179 | 18. | ஜெ.சனுஜன் | 166 | 33. | பி.சேருகன் | 161 | 48. | ச.சாத்வீகன் | 156 |
| 04. | மு.திவ்ஜன் | 179 | 19. | ரா.அக்சயா | 165 | 34. | ற.விதுசா | 160 | 49. | யோ.சந்தோஸ் | 156 |
| 05. | சி.கிசாந்தன் | 178 | 20. | சு.பவிசாந்த் | 165 | 35. | சி.சினுஜன் | 160 | 50. | பி.அபினயன் | 156 |
| 06. | இ.சாஜித் | 175 | 21. | க.கதிர்சன் | 165 | 36. | சி.பவனுஜா | 160 | 51. | உ.வேணுகாசினி | 156 |
| 07. | க.கரீஸ்வரன் | 175 | 22. | க.ஆதித்தியா | 165 | 37. | அ.கர்ணிகா | 160 | 52. | ரா.பிரியங்கா | 155 |
| 08. | ச.அபினாஸ் | 174 | 23. | ச.தர்சிகா | 164 | 38. | க.அட்சயா | 160 | 53. | ஜெ.கிஷானி | 155 |
| 09. | ச.கஜானன் | 174 | 24. | ச.சிவசங்கர் | 163 | 39. | வி.சதுஸ்ரிகா | 159 | 54. | பி.கேதவராகி | 155 |
| 10. | ம.காருண்யா | 174 | 25. | இ.பிருந்தா | 162 | 40. | றெ.மதுரிகா | 159 | 55. | பா.லாவண்யா | 155 |
| 11. | கே.கரிகரன் | 173 | 26. | ஸ்ரீ.கஜந்தினி | 162 | 41. | ர.ராகவி | 158 | 56. | ர.பூஜா | 154 |
| 12. | சு.தருண்ஜன் | 172 | 27. | சி.கவீணா | 162 | 42. | வி.யசஸ்வின் | 158 | 57. | ச.சதுரங்கசர்மா | 154 |
| 13. | கு.மிதுராஜ் | 172 | 28. | த.துளசிதரன் | 162 | 43. | ச.இமிழிசை | 158 | 58. | பா.தனுஷன் | 154 |
| 14. | த.அபிஷா | 171 | 29. | க.சதுர்த்திகன் | 162 | 44. | ரா.ஆரணியா | 157 | 59. | ர.ஜிதுஷா | 153 |
| 15. | பி.திவ்ஜன் | 171 | 30. | க.சஞ்சீவன் | 162 | 45. | சி.கெரின் மாதுஷ் | 157 | 60. | ப.தரங்கினி | 153 |
| | | | | | | | | | 61. | சு.டினோஜன் | 152 |
| | | | | | | | | | 62. | ஜெ.சர்னுயா | 152 |

(சி-6531)





| | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | வி.நிருசிகா | 151 | 21 | சோ.தர்ஷி | 146 | 41 | க.திலக்ஷன் | 140 | 61 | ம.டினுஜா | 132 | 81 | சி.சர்ஜிந் | 122 | 101 | ர.சாக்சிதசர்மா | 99 |
| 02 | ர.சசிந்தன் | 151 | 22 | யோ.கபில்ராஜ் | 146 | 42 | நி.சாகித்யன் | 140 | 62 | உ.விஸ்னுசன் | 132 | 82 | மோ.தாமிலபன் | 122 | 102 | லெ.சனுராஜ் | 98 |
| 03 | ப.கஜசரவணன் | 151 | 23 | ஆ.சேயோன் | 146 | 43 | நா.தர்ஷ்வின் | 140 | 63 | பே.கஜமுகன் | 131 | 83 | கி.சுஜீவன் | 120 | 103 | சு.முகேஸ்ராம் | 97 |
| 04 | ப.குரபரன் | 151 | 24 | த.மதுஷன் | 146 | 44 | ல.சரணியா | 139 | 64 | கே.சகானா | 131 | 84 | லி.லைசந் | 117 | 104 | கோ.கலைக்கீரன் | 96 |
| 05 | ய.யசாகன் | 151 | 25 | தி.றியாஸ்கான் | 145 | 45 | வி.அக்ஷயா | 139 | 65 | ரா.துளசிகா | 130 | 85 | கு.கிருஷாலினி | 117 | 105 | ச.சகானா | 94 |
| 06 | ச.கிரிஷாந் | 150 | 26 | கி.கஜானி | 145 | 46 | சு.மதுஷா | 139 | 66 | ஜெ.சிரோசன் | 130 | 86 | மோ.யதுனஜன் | 116 | 106 | ஜெ.சாருகா | 94 |
| 07 | க.தினுஷ் | 150 | 27 | நி.யாதவி | 145 | 47 | தெ.டினோஜா | 139 | 67 | பா.தனுசன் | 130 | 87 | வி.வனுஜா | 115 | 107 | சு.திவாகரன் | 90 |
| 08 | உ.சந்தோஸ் | 150 | 28 | ந.சன்சயன் | 145 | 48 | அ.திவ்ஜா | 139 | 68 | ரா.சானுஷா | 129 | 88 | ர.சுஜித் | 114 | 108 | சு.சௌபரணிகா | 90 |
| 09 | சி.யோபினா | 149 | 29 | ர.சரண் | 144 | 49 | உ.புகழ்நேயன் | 139 | 69 | வி.விபிஷனா | 129 | 89 | நி.யதுர்ஷன் | 114 | 109 | உ.அவினோஸ் | 90 |
| 10 | செ.வியாபகி | 149 | 30 | சி.பிராமினி | 144 | 50 | பா.டிஷாலினி | 138 | 70 | ச.கிஷோர் | 129 | 90 | சி.சிறினகரி | 112 | 110 | பு.பிரகர்சிகா | 88 |
| 11 | க.விஷாகன் | 149 | 31 | ந.சயந்தவி | 144 | 51 | ரா.அபிராகவி | 136 | 71 | து.சஜிலயன் | 129 | 91 | தி.திவ்வியாங்கசர்மா | 112 | 111 | ச.மிதுஷாலினி | 87 |
| 12 | ஜெ.யுவன் | 149 | 32 | ஜெ.அனோஜன் | 143 | 52 | கு.அஸ்வினி | 135 | 72 | வி.ஆர்த்திகன் | 128 | 92 | ஆ.அபினயா | 110 | 112 | நி.பிரணவன் | 86 |
| 13 | ச.தனுவர்ஷன் | 148 | 33 | பா.நிகிதா | 143 | 53 | கோ.தரணிகா | 134 | 73 | சி.விதுஷன் | 128 | 93 | ஜெ.அபிஜா | 109 | 113 | சு.பவிஷா | 82 |
| 14 | ப.டர்சன் | 148 | 34 | உ.சதுர்த்திகா | 143 | 54 | த.சாயித்தியா | 134 | 74 | சி.வாகீசன் | 128 | 94 | அ.டனுசிகா | 109 | 114 | பா.திலக்சனா | 80 |
| 15 | ப.டனிஸ்டன் | 148 | 35 | ஜெ.பவீனா | 142 | 55 | சு.சந்தோஸ் | 133 | 75 | அ.அபூசனா | 128 | 95 | ம.கீதப்பிரியா | 106 | 115 | அ.பியூட்சன் | 76 |
| 16 | த.சாருஜன் | 147 | 36 | அ.விதுஷா | 142 | 56 | ம.ரிஷாலினி | 133 | 76 | த.சாகித்தியன் | 127 | 96 | வி.அக்சயன் | 103 | 116 | ம.டிவாகர் | 75 |
| 17 | க.லதுஷன் | 147 | 37 | சு.தனுசிகா | 141 | 57 | தி.ஜதுர்ஷன் | 133 | 77 | ர.லோஜிகன் | 126 | 97 | சி.நிதுஷா | 103 | | | |
| 18 | க.சாமிரா | 147 | 38 | கு.கிருஸ்ணகா | 141 | 58 | பி.சஞ்சீவ் | 133 | 78 | சி.விபூசன் | 126 | 98 | தி.அபர்ணா | 102 | | | |
| 19 | கு.ஆருஷியன் | 147 | 39 | ம.இலக்கியா | 140 | 59 | தே.அஜஆரணி | 132 | 79 | நி.திருக்குமரன் | 126 | 99 | ஜெ.கிஷோத் | 101 | | | |
| 20 | ச.எழிலிசை | 146 | 40 | ப.பிரித்திவிராஜ் | 140 | 60 | ஜெ.சஜந்தன் | 132 | 80 | உ.சம்பத்மேனன் | 126 | 100 | கு.தாமிரா | 100 | | | |

**வாழ்த்துவோர் : தரம் ஐந்து மாணவர்களின் பெற்றோர்கள்.**

# உதயநகரில் மரக்காலை சுற்றிவளைப்பு மரக்குற்றிகள், தீராந்திகள் கைப்பற்று

## சந்தேகத்தில் ஒருவர் கைதானார்





கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பிரதி பொலிஸ்மா அதிபர் பனிமனைக்குட்பட்ட கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயப் பிரிவிற்குட்பட்ட கிளிநொச்சி பொலிஸ் நிலையப்பகுதியில் உள்ள உதயநகர் கிராமத்தில் மரக்காலை ஒன்றில் இருந்து அனுமதிப்பத்திரமின்றி சுமார் 25 இலட்சம் ரூபா பெறுமதியான பாலை, முதிரை, தேக்கு ஆகியவற்றின் மரக்குற்றிகள் அரிவு செய்யப்பட்ட தீராந்திகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்டத்திற்கான உடனடி தீர்வு காணும் விசேட பொலிஸ் படை அணியினால் சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று புதன்கிழமை அதிகாலை நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சிமாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயப் பிரிவிற்குட்பட்ட உடனடித் தீர்வு காணும் விசேட பொலிஸ் படை அணிக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் நேரடி உத்தரவிற்கு அமைய உடனடித் தீர்வு காணும் விசேட பொலிஸ் படையணியின் பொறுப்பதிகாரி உப-பொலிஸ் பரிசோதகர் கருணாரத்தினம் ஜெசிந்தன் தலைமையிலான பொலிஸ் அணியினரின் சுற்றிவளைப்பின் போதே சட்டவிரோதமான முறையில் கடத்தி வரப்பட்டு பதுக்கி வைக்கப்பட்டிருந்த மரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது 17 முதிரை மரக்குற்றிகள், 24 பாலை மரக்குற்றிகள், 21 தேக்கு, மரக்குற்றிகள் உட்பட அரிவு செய்யப்பட்ட 221 பாலை மரத் தீராந்திகள், 32 தேக்குமரத் தீராந்திகள், 10 முதிரைமரத் தீராந்திகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சம்பவ இடத்தில் வைத்து சந்தேக நபர் ஒருவரும் கைதானார்.

இக்கடத்தலுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ள நிலையில் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படுள்ளன.

அத்துடன் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களும் கைதான சந்தேக நபரும் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கை களுக்குமாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக உடனடித்தீர்வு காணும் விசேட பொலிஸ் படைப் பிரிவின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# வவுனியா வர்த்தகர்களுக்கு அடையாள அட்டை வழங்கல்

(குருமன்காடு)

வவுனியா வர்த்தகர் சங்கம் ஏற்பாட்டில் வவுனியாவிலுள்ள வர்த்தகர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் நிகழ்வும் அவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த நிகழ்வானது நாளை வெள்ளிக்கிழமை மாலை ஓவியா விருந்தினர் விடுதியில் வர்த்தகர் சங்கத்தலைவர் ரி.கே.இராஜலிங்கத்தின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வைத்து 40 வருடங்களாக தொடர்ந்து வர்த்தகம் செய்யும் வர்த்தகர்களை கௌரவப்படுத்தவுள்ளதுடன், 30 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்தும் ஒரே வர்த்தக நிலையத்தில் பணிபுரியும் ஊழியர்களை கௌரவிப்பு செய்யும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர, சிறப்பு விருந்தினராக வன்னி பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.என்.சிசிரகுமார, வவுனியா உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி, வவுனியா பிரதேச செயலாளர், வவுனியா நகரசபை செயலாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும், கௌரவ விருந்தினர்களாக வவுனியா நகர கிராம சேவையாளர் ச.செல்வராசா, வவுனியா முன்னாள் கிராம சேவையாளர் வீ.ஜெகநோதிநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக வவுனியா வர்த்தகர் சங்க செயலாளர் தெரிவித்தார். (2-250)

# பரிசளிப்பு விழா


வவுனியா வடக்கு தவசியாகுளம் அ.த.க. பாடசாலை பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ச.நித்தியானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.ஸ்ரீஸ்கந்தராஜா, சிறப்பு விருந்தினராக வடமராட்சி ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரீகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (2

## கிளி., முல்லை., வவுனியா, மன்னார் மாவட்ட வைத்தியசாலைகளின்

# அரச வைத்திய அதிகாரிகள் நேற்று வேலை நிறுத்தப் போராட்டம்





### நோயாளர்கள் சிகிச்சையின்றி பெரும் அவதி

வரவு - செலவுத்திட்டத்தில் தமக்கு பாதகமான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து அரச வைத்திய அதிகாரிகள் மேற்கொண்டுவரும் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக, நாட்டின் பல பகுதிகளில் நோயாளர்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாகவவுனியா பொது வைத்தியசாலையின் வெளிநோயாளர் பகுதி முழுமையாக நேற்று ஸ்தம்பித்திருந்த நிலையில் தூர இடங்களிலிருந்து வந்துள்ள நோயாளிகள் பாரிய சிரமத்திற்கு முகங்கொடுத்தனர்.

அத்தோடு, மலையகத்தின் பல்வேறு பகுதிகளில் காணப்படும் வைத்தியசாலைகளின் வைத்தியர்களும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் நோயாளர்கள் நேற்றுக்காலை முதல் வைத்தியசாலைகளில் சிகிச்சையின்றி காத்திருந்தனர். இதேவேளை நேற்று கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் வைத்தியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், நோயாளிகள் சிகிச்சையின்றி திரும்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் நிதியாண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள ஓய்வூதிய இரத்து, அரச வைத்தியர்கள் மேலதிகமாக செய்யும் தொழில்களுக்கு வரிவிதித்தல் மற்றும் அரச வைத்தியசாலைகளை தனியாருக்கு வழங்குதல் உள்ளிட்ட பல யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இவ் வேலை நிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-250)

## செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளரை தாக்க முயன்றார்

### வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்

வவுனியாவில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் மீது வவுனியா பொது வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் தாக்க முயன்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரால் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டத்தைப் படம் பிடிக்கவும் செய்திகள் சேகரிக்கவும் சென்ற தமிழ், சிங்கள ஊடகவியலாளர்களை படம்பிடிக்கும் கருவியுடன் மேற்படி வைத்தியசாலைக்குள் உட்செல்ல அனுமதிக்காது தகாத வார்த்தைகளால் பேசியதுடன் ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தர் ஊடகவியலாளர் மீது தாக்கவும் முயன்றதாக தெரிவிக்கப்படுகின்றது. முன்மொழியப்பட்ட 2017 ஆம் ஆண்டுக்குரிய வரவு- செலவுத்திட்டத்திற்கு அமைய அரச சுகாதாரத்துறைக்கு ஏற்படும் பாதிப்புக்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் நாடு தழுவியரீதியில் நேற்றுக்காலை 8 மணி தொடக்கம் இன்று காலை 8 மணி வரையில் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்நிலையில் செய்தி சேகரிப்பதற்காக வவுனியா பொது வைத்தியசாலைக்குச் சென்ற ஊடகவியலாளர்களுக்கு மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் வவுனியா பொது வைத்தியசாலையில் இடம்பெற்ற சம்பவம் குறித்து மத்திய சுகாதார அமைச்சர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஆகியோருக்கு முறைப்பாடொன்றை அறிக்கையிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (2-250)

### 33 இலட்சம் ரூபா நிதியுதவியில்

# தெரிவு செய்யப்பட்ட 15 குடும்பங்களுக்கு தோட்டக்கிணறுகள் அமைக்கப்படவுள்ளது

### மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் தெரிவிப்பு

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான செயலகத்தின் 33 இலட்சம் ரூபா நிதி அனுசரணையில் மாந்தை கிழக்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட 10 கிராம சேவையாளர் அலுவலகப் பிரிவுகளில் வசிக்கும் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 15 குடும்பங்களுக்கு தோட்டக்கிணறுகள் அமைப்பதற்கு தலா 2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபா படி நிதி வழங்கப்படவுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் இ.ரமேஷ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்துக்குமான செயலகத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 33 இலட்சம் ரூபா நிதியுதவியில் பாண்டியன்குளம் 3, சொல்லவிளான் குளம் ஒன்று, ஒட்டறுத்தகுளம் ஒன்று, நட்டாங்கண்டல் ஒன்று, மூன்று முறிப்பு 2, செல்வபுரம் 2, கரும்புள்ளியான் ஒன்று, பாலிநகர் 2, வன்னிவிளாங்குளம் ஒன்று, அம்பாள்புரம் ஒன்று என 10 கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து 15 குடும்பங்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கான கிணறு தோண்டுவதற்குரிய நிதி எதிர்வரும் வாரமளவில் வழங்கி வைக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் மூன்று பேர் சமூகத்துடன் இணைக்கப்பட்டனர்

(குருமன்காடு)

வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் ஒருவருட புனர்வாழ்வு பயிற்சியினை நிறைவு செய்த மூவர் நேற்று முன்தினம் முற்பகல் 10மணியளவில் சமூகத்துடன் இணைத்து வைக்கப்பட்டனர்.



பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் கடந்தகாலங்களில் புனர்வாழ்வு பெற்று பன்னிரண்டாயிரம் பேர் சமூகத்துடன் இணைத்து வைக்கப்பட்டுள்ளனர். புனர்வாழ்வு நிலையத்தில் பல கைத்தொழில் பயிற்சிகளை நிறைவு செய்த 15 முன்னாள் போராளிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் அஜித் குமார (மோதர-கொழும்பு), சிங்கராசா எட்மன் (நிலாவெளி- திருகோணமலை), செல்வரட்ணம் சிறீதரன் (கூமாங்குளம்-வவுனியா) ஆகிய மூவரே சமூகத்துடன் இணைத்து வைக்கப்பட்டவராவர்.

சிங்கள இளைஞர் ஒருவரும் முன்னாள் விடுதலைப்புலிகளில் இணைந்து செயற்பட்டிருந்ததினால் ஆறுமாதகால புனர்வாழ்வின் பின்னர் நேற்று முன்தினம் சமூகத்துடன் இணைத்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் புனர்வாழ்வு பெற்றுவரும் முன்னாள் போராளியான கஜதீபன் பாடலொன்றை பாடியிருந்தார்.

இந்நிகழ்வில் சர்வமதத்தலைவர்கள், பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையப் பணிப்பாளர் லெப்.கேணல். எம். ஏ.ஆர். கமில் டோன், நிலையப் பொறுப்பதிகாரி கப்டன் குணசேகர, பின்னாய்வு நிலைய பொறுப்பதிகாரி, சிறைச்சாலை அமைச்சின் அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், முன்னாள் போராளிகளின் பெற்றோர்கள், உறவினர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (2-250)




# ஆடைத்தொழிற்சாலையின் குடும்பதினம்

ஆடைத்தொழிற்சாலையின் குடும்பதினம் நாளை மறுதினம் 3 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணியில் இருந்து பிற்பகல் 1.30 மணிவரை இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் இலவச வெளிநோயாளர் பிரிவு, மூக்குக்கண்ணாடி வழங்கல், ஆரோக்கிய வாழ்வுக்கான ஆலோசனைகள், இலவச பற்சிகிச்சை முகாம் உட்பட மருத்துவ முகாமும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை பிறப்பு மற்றும் இறப்புப் பதிவு தொடர்பான நடமாடும் சேவையும் விவசாய பொருள் கண்காட்சியும் விற்பனையும் நடைபெறவுள்ளதுடன் குழந்தைகளுக்கான விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (2-250)

# 157.6 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் மன்னாரில் வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

(மன்னார்)

நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சினூடாக வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு 157.6 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு மன்னார் மாவட்டத்தின் பல வீதிகளை புனரமைக்கும் திட்டம் கடந்த 28 ஆம் திகதி முற்பகல் 10:30 மணிமுதல் அங்குரார்ப்பண நிகழ்வுகள் மன்னார் பிரதேச செயலக பகுதிக்குள்ளும் முசலி பிரதேச செயலக பகுதிக்குள்ளும் நடைபெற்றது.

குறித்த திட்டங்கள் நடைமுறைப்படுத்தும் இடங்களுக்கு நேரடியாக விஜயம் மேற்கொண்டு உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கும் நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் எச்.எம்.ரயீஸ், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முதலியா பாருக், வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மன்னார், வவுனியா பிரதம பொறியியலாளர் எஸ்.ரகுநாதன்,மன்னார் மாவட்ட நிறைவேற்று பொறியியலாளர் துஸ்யந்தன், இலங்கை போக்குவரத்து சபையின் மன்னார் சாலை முகாமையாளர் சாகிர், தொழில்நுட்ப உதவியாளர்கள், பிரதேச மக்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படும் வீதிகளின் விபரம்.

மன்னார் பிரதேச செயலக பிரிவில் 08 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கமைய,

பேசாலை கடற்கரை வீதி - 200 மீற்றர் 03 மில்லியன், சின்னக்கரிசல் ஓலைதொடுவாய் வீதி - 350 மீற்றர் 4.5 மில்லியன், தாழ்வுபாடு கடற்கரை வீதி - 200 மீற்றர் 03 மில்லியன், கோணார்ப் பண்ணை புதுக்குடியிருப்பு வீதி - 500 மீற்றர் 6.5 மில்லியன், எருக்கலம்பிட்டி மதராஸா வீதி - 1 கிலோ மீற்றர் 13.3 மில்லியன், எருக்கலம்பிட்டி பள்ளிவாசல் வீதி - 360 மீற்றர் 5.4 மில்லியன், மன்னார் நகர கடைத்தெரு வீதி - 550 மீற்றர் 7.3 மில்லியன்,மன்னார் சிறிய தருமட வீதி - 680 மீற்றர் 09 மில்லியன் செலவில் புனரமைக்கப்படும்.

முசலி பிரதேச செயலக பிரிவில் 10 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன. இதன் பிரகாரம்,

பண்டாரவெளி, வாரிவெளி வீதி - 1.2 கிலோமீற்றர் 14.4 மில்லியன், முள்ளிக்குளம் உள்ளக வீதி - 01 கிலோ மீற்றர் 12 மில்லியன், கொண்டச்சி உள்ளக வீதி - 500 மீற்றர் 06 மில்லியன்,வெள்ளி மலை உள்ளக வீதி - 01 கிலோ மீற்றர் 12 மில்லியன், சிலாவத்துறை நகர பள்ளிவாசல் வீதி - 600 மீற்றர் 7.2 மில்லியன், பண்டாரவெளி ஏ எஸ் குளம் உள்ளக வீதி - 200 மீற்றர் 2.4 மில்லியன், முசலி குள்க்கட்டு உள்ளக வீதி - 1.3 கிலோ மீற்றர் 15.6 மில்லியன், அகத்திமுறிப்பு உள்ளக வீதி - 01 கிலோ மீற்றர் 12 மில்லியன், பெரிய புள்ளச்சி பொற்கேணி உள்ளக வீதி (01)-01 கிலோ மீற்றர் 12 மில்லியன், பெரிய புள்ளச்சி பொற்கேணி உள்ளக வீதி ( 02 )- 01 கிலோ மீற்றர் 12 மில்லியன் செலவில் புனரமைக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (2-15)

# அடிப்படை வசதிகள் இன்றியுள்ள சண்முகபுரம் கிராம மக்களுக்கு வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டும்

## ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் வலியுறுத்து

(வவுனியா)

வவுனியா சண்முகபுரம் கிராம மக்களுக்கு நிரந்தர வீட்டுத் திட்டம் மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டுமென ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா மீள்குடியேற்ற, புனர்வாழ்வு, புனரமைப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் இந்து மத விவகாரங்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனிடம் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர், வடக்கில் யுத்தம் நிலவிய காலகட்டங்களில் மடு, முல்லைதீவு, காங்கேசன்துறை, இரணை இலுப்பைக்குளம், புங்குடுதீவு ஆகிய பகுதிகளிலிருந்து 1990 ஆம் ஆண்டு பல்வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்த நிலையில், இறுதியாக பூந்தோட்டம் மற்றும் வாரிக்குட்டியூர் முகாம்களில் அகதிகளாக தங்கியிருந்த 83 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட, கங்கன்குளம் கிராம சேவையாளர் பிரிவின் கீழுள்ள சண்முகபுரம் கிராமத்தில் 2007ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டு, அடிப்படை வசதிகள் முழுமையாக மேற்கொள்ளப்படாத நிலையிலேயே இம் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர். இவர்களது வாழ்வாதாரத்தை மேற்கொள்வதற்காக குடும்பத்திற்கு ஒரு ஏக்கர் பயிர்ச் செய்கைக்கான நிலம் தரப்படுமெனக் கூறப்பட்ட நிலையில், உவர்த் தன்மையும் கற்பாறைகளும் கொண்டதான கால் ஏக்கர் நிலம் வீதமே ஒரு குடும்பத்திற்கு வழங்கப்பட்டதாகவும் வடக்கில் ஏனைய பகுதிகளில் வீட்டுத் திட்டங்கள் பல வழங்கப்பட்ட போதிலும் இம் மக்களுக்கு இதுவரையில் எவ்வித வீட்டுத் திட்டங்களும் வழங்கப்படவில்லை. இங்குள்ள பாதைகள் மிகவும் பாதிப்படைந்துள்ள நிலையில் மழைக் காலங்களில் போக்குவரத்து செய்வதில் மாணவர்கள், நோயாளிகள், கர்ப்பிணிகள் போன்றோர் பாரிய சிரமங்களுக்கு உள்ளாகி வருவதாகவும் சுத்தமான குடிநீர் இன்மை காரணமாக பலரும் சிறுநீரகப் பாதிப்புகளுக்கு உள்ளாகி வருவதாகவும் இம் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, தற்போது மழைக் காலம் ஆரம்பமாகி இருப்பதால் இக் கிராமத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகளை உடனடியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், இவர்களுக்கான நிரந்தர வீடமைப்புத் திட்டங்களும் வழங்கப்பட வேண்டும்.

மேலும், இம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளில் விவசாய செய்கையை மேற்கொள்ள முடியாதுள்ள நிலையில், வாழ்வாதாரம் கருதி மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் தர்மரத்தினம் 28.10.2016 அன்று வவுனியா மேல் நீதிமன்றில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் இலங்கை கல்வி வெளியீட்டு திணைக்களத்தின் தரம் - 7 சைவ சமயம் நூலின் பிரதான ஆசிரியரும் தேடலும் தெளிவும் எனும் நூலின் ஆசிரியருமாவார். அகில இலங்கை இந்துமாமன்றம் போன்ற அமைப்புக்களினூடாக செயற்படுகின்ற சிறந்த சமூக சேவையாளருமாவார். (2)

# வட்டுவாகல் பிரதேசத்தில் மீண்டும் காணி சுவீகரிப்பு

முல்லைத்தீவு மாவட்டம் வட்டுவாகல் கடற்படைத்தளம் அமைந்துள்ள நிலப்பகுதியை புதிய சரத்தின் கீழ் அபகரிக்கும் பொது அறிவித்தல் பிரதேச செயலாளரினால் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் வட்டுவாகல் பகுதியில் உள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான 617 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள கடற்படை முகாம் பகுதியை முழுமையாக அபகரிக்க இதுவரை காலமும் காணி சுவீகரிப்பின் 38 ஏ யின் கீழ் நடவடிக்கைகள் இடம்பெற்றன.

இவ்வாறு பலமுறை இடம்பெற்ற முயற்சிகள் அனைத்தும் மக்களின் போராட்டங்கள் காரணமாக தடுக்கப்பட்டிருந்தன.

இருப்பினும் குறித்த பிரதேசத்தை சுவீகரிக்கும் முயற்சியை மட்டும் கடற்படையினரும் பாதுகாப்பு அமைச்சும் தொடர்ந்த வண்ணமே உள்ளனர். இதன் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவிற்கமைய பிரதேச செயலாளரினால் மீண்டும் சுவீகரித்தல் உத்தரவு பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள அதேவேளை முகாமைச் சூழவுள்ள பாதுகாப்பு அரண்கள் அனைத்தும் சீமெந்து காப்பரண்களாகவும் மாற்றப்படுகின்றன. இவ்வாறு கடற்படையுள்ள பிரதேசத்தை கடற்படையினரின் பாவனைக்கு வழங்குவது குறித்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் விவாதிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் குறித்த 617 ஏக்கர் நிலத்தினையும் எக்காரணம் கொண்டும் கடற்படையினருக்கு வழங்க முடியாது என்றே தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும் தற்போது ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு முரணாக மீண்டும் சுவீகரிக்கும் முயற்சி இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-281)

அக்கராயன் முக்கொம்பன் கிராமத்தில் வசிக்கும் சிறுவன் ஒருவன் சாதாரண காய்ச்சல் காரணமாக சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற பின்னர் தற்போது உடல் முழுவதும் செயலிழந்த நிலையில் காணப்படுகின்றான். இச் சிறுவனின் தேவை கருதி ஜெனிவா நண்பர்களின் உதவியுடன் சக்கரநாற்காலி, தண்ணீர்ப்படுக்கை, ஊட்டச்சத்து உணவுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.



# விளைதிறன் விருத்திக்கான வெளிநாட்டுப் பயிற்சி

இலங்கையின் கல்வி முறைமையினை 21 ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ற வகையில் முகாமை செய்து விருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த தற்கால நல்லாட்சி அரசாங்கத்தின் எண்ணக்கருவில் அமைந்த ஒரு விடயம். பாடசாலை மட்டத்தின் உச்ச மட்ட முகாமையாளர்களாக காணப்பட இருக்கின்ற அண்மையில் தெரிவு செய்யப்பட்ட தரம் III அதிபர்களுக்கான வெளிநாட்டு பயிற்சி ஆகும். இதன் மூலம் மென்திறன் விருத்தி மற்றும் பாடசாலை மட்ட முகாமைத்துவத்தை வினைத்திறனாக மேம்படுத்துவதற்கான உத்திகள், 21 ஆம் நூற்றாண்டிற்கான கல்வி முகாமைத்துவ மறுசீரமைப்பு.அதற்காக அபிவிருத்தி அடைந்த கல்வி முறைமையைப் பின்பற்றும் பாடசாலைத் தரிப்பின் ஊடான அனுபவ பகிர்வு போன்றவற்றை உருவாக்கும் நோக்கில் மத்திய கல்வி அமைச்சு ஆசிய அபிவிருத்தி வங்கி. உலக வங்கி என்பவற்றின் நிதி அனுசரணையுடன் மேற்படி செயற்றிட்டத்தினை வடிவமைத்திருந்தது. புதிதாக தெரிவு செய்யப்பட்ட அதிபர்களுக்கான திசைமுகப் பயிற்சியின் பின்னர் நடைபெற்ற வாய்மொழி விடய முன்வைப்பு, எழுத்துப் பரீட்சை என்பவற்றின் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் உச்ச புள்ளிகளைப் பெற்ற 400 அதிபர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கான நேர்முகத் தேர்வினை மேற்கொண்டு அவற்றில் 150 பேருக்கான பயிற்சியினை மலேசியாவில் அமைந்துள்ள Nottingham campus மூலம் பயிற்றுவிக்கத் தீர்மானிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் வடமாகாணத்தில் இருந்து 15 அதிபர்கள் தெரிவு செய்யப்பட்டனர். ஐந்து தொகுதிகளாக அவர்களுக்கான பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.ஒரு தொகுதியில் 30 பேர் பங்குபற்றியிருந்தனர். வடமாகாணத்தில் இருந்து ஒவ்வொரு தொகுதியிலும் மூன்று பேர் பங்கு கொண்டனர்.இவற்றுள் ஒரு தொகுதியினர் தேசிய பாடசாலை அதிபர்களுமாக அமைந்துள்ளனர்.

அதன் அடிப்படையில் மூன்றாவது தொகுதி அணியில் இப்பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டவர் என்ற வகையில் இப்பயிற்சி பற்றிய அனுபவ பகிர்வை இக்கட்டுரையின் ஊடாக பகிர்ந்து கொள்வதே எனது நோக்காகும். அந்தவகையில் பின்வரும் விடய தானங்களில் என்னுடைய பார்வையை பதிவு செய்கின்றேன்.

1.வெளிநாட்டுப் பயிற்சியின் நோக்கம்

2.பயிற்சிக்குரிய பல்கலைக்கழகம் பற்றிய விடயம்

3.பயிற்சியின் விடயத் தலைப்புக்கள்

4.மலேசிய நாட்டின் கல்வி முறைமையின் பாடசாலைக் கட்டமைப்பு

5. 21 ஆம் நூற்றாண்டில் கல்வி முகாமைத்துவ மாற்றம்

**வெளிநாட்டுப் பயிற்சியின் நோக்கம்**

இலங்கையின் கல்விக் கலைத்திட்டத்திலே ஆசிரியர், அதிபர்களுக்கான வாண்மைத்துவப் பயிற்சிகள் குறுகிய காலத்திலும் தொடரும் முறையிலும் வலய, மாகாண, தேசிய ரீதியில் நடத்தப்படுவது வழமையானதொன்று. அதன் அடுத்த படிநிலையாக உலக ரீதியான கல்விக் கொள்கைகள் கல்வி மறுசீரமைப்புக்கள், பாடசாலைக் கட்டமைப்புக்கள், பரீட்சை முறைமைகள், உயர் கல்விக்கான சந்தர்ப்பங்கள், தொழில்பயிற்சிக்கான சந்தர்ப்பங்கள், வேலை உலகினுள் இலகுவில் பிரவேசிக்கக் கூடியதான வாய்ப்புக்கள் என்பன மாறுபட்டுக் காணப்படுகின்றமை பொதுவானதாகும். அவ்வாறான விடயங்கள்வெளிநாட்டுப் பயிற்சியின் ஊடாக பயிற்றுவிக்கப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்த வரையில் காலத்திற்குக் காலம் மாற்றமடைகின்ற கல்விச் சீர்திருத்தங்களில் இருந்து 21 ஆம் நூற்றாண்டுக்குரிய உலக ஒழுங்கிற்கேற்ற மாணவர் பரம்பலை உருவாக்க வேண்டியதன் நோக்கம் உணரப்பட்டுள்ளது. அது தொடர்பான அனுபவங்களை நேரடியாகவும் துறைசார்ந்த நிபுணர்கள் ஊடாகவும் பெற்று எமது பாடசாலைகளில் பிரயோகிப்பதற்கேற்ற வகையில் இக்குறுங் காலப் பயிற்சி வடிவமைக்கப்பட்டிருந்தது.

அதன் மூலம் பாடசாலை ஒன்றின் மாற்று முகவராக இருக்கின்ற அதிபர்களுக்கான திறன் விருத்தி மற்றும் பாடசாலை சமூக மட்ட முகாமை, கற்றல் இணைபாடவிதான செயற்பாடுகள், விழுமிய விருத்தி, நடத்தை சார் நோக்கம், மனித பௌதிக வள முகாமைத்துவம் என்பவற்றை வினைத்திறனாக கைக்கொண்டு உச்ச விளைதிறனை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு பாடசாலை அதிபர்களிடம் காணப்பட வேண்டிய அவசியம் உணரப்பட்டதனால் இப்பயிற்சியினை இலங்கையின் மத்திய கல்வி அமைச்சு ஒழுங்குபடுத்தியிருந்தது. 2020 ஆம் ஆண்டில் கல்விக் கொள்கைகளில் ஏற்படுத்த வேண்டிய உச்ச மட்ட முகாமைத்துவ மாற்றத்தின் தொடக்கமாக இது அமைகின்றது.

**பயிற்சிக்குரிய பல்கலைக்கழகம் பற்றிய பார்வை**

லண்டனில் தலைமையகமாகக் கொண்டு மலேசியாவில் அமைந்துள்ள Univ illage என்னும் பகுதியில் பாரிய நிலப்பரப்பில் மிகப் பிரமாண்டமான 25 கட்டடத் தொகுதிகளைக் கொண்ட Nottingham campus உலகத் தரத்தில் 40 ஆவது இடத்தினைப் பெற்றுள்ளது. சீனாவிலும் மலேசியாவிலும் வளாகங்களாக இது செயற்படுகின்றது. உலக ரீதியில் பல்வேறு பிரதேசங்களில் இருந்து வருகை தருகின்ற சுமார் 4000 மாணவர்கள் இங்கு கற்கின்றனர். விளையாட்டு, அழகியல், ஆக்கத்திறன், தொடர்பாடல் போன்ற அலகுகளை தனியே பாரிய அளவில் கொண்டு 1000 அறைகளைக் கொண்ட தங்குமிட வசதிகளைக் கொண்டு 5S திட்டமுறையை உச்சமாகப் பயன்படுத்தி செயற்பட்டு வருகின்றது. எதிர்கால சமூகத்திற்கு சிறந்த மனித வெளியீடுகளை உருவாக்கிவிடும் வர்த்த நோக்கிலேயே இங்கு கல்வி முறைமை நடைபெறுகின்றது. குறிப்பாக போட்டிச் சந்தை முறையில் சிறந்த அறிவுடன் திறன்விருத்தி கூடிய மாணவ பரம்பலை வேலை உலகிற்கு கையளிக்கும் பாரிய பணியை இந்நிறுவனம் சிறப்பாக மேற்கொள்கின்றது. இங்கு கற்பிக்கும் துறைகளாக கணக்கியல், பிரயோக உளவியல், உயிரியல் விஞ்ஞானம், உயிரியல் தொழில்நுட்பம், வணிகம், இரசாயன எந்திரவியல், குடிசார் எந்திரவியல், கணனி பொறியல் தொழில்நுட்பம் தொடர்பாடல் கற்கை, பொருளியல் போன்ற 46 துறைகள் காணப்படுகின்றன. இந் நிறுவனத்தின் கல்விப் பீடத்திற்கான துறைத்தலைவராக யாழ்ப்பாணத்தை பூர்வகமாகச் சேர்ந்த சு.ஞானகுமாரன் என்பவர் கடமையாற்றி வருகினறார். இது எமது இனத்திற்குரிய பெருமையாகவும் காணப்படுகின்றது. மாணவர்களுடைய ஒழுங்கு. நேர முகாமைத்துவம், கூட்டு முயற்சி, அர்ப்பணிப்பு உணர்வு,அணி உணர்வு என்பன இந்நிறுவனத்தினுடைய வெற்றிக்கான சுட்டிகளாக அமைகின்றன. இன, மத, மொழி கடந்து மனிதர்கள் என்ற உணர்வோடு எதிர்கால உலகத்திற்கு நல்ல அறிவு ஜீவிகளை உருவாக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளை மாத்திரம் சுமந்து செயற்பட்டு வருவது இந்நிறுவனத்தின் உயர்ச்சிக்கான காரணியாகும்.






**பயிற்சியின் விடயத் தலைப்புக்கள்**

இங்கே நடைபெற்ற குறுகிய கால பயிற்சியின் போது பின்வரும் ஒன்பது விடயத் தலைப்புக்களிலான செயலமர்வுகள் துறைசார்ந்த நிபுணர்களினால் மேற்கொள்ளப்பட்டது. அவையாவன,

1. 21 ஆம் நூற்றாண்டில் பாடசாலைத் தலைமைத்துவத்தின் அறிமுகம்

2.கல்வி முறையியலும் பிள்ளை நேயக் கல்வியும் வளர்ந்தோர் கல்வியும்

3.தகைமைசார் திறன்களை வளர்த்தலும் அதற்குப் பயிற்சி அளித்தலும்

4.கல்வித் தொழில்நுட்பத்தை பாடசாலை முகாமைத்துவத்தில் பயன்படுத்துதல்

5.தொழில் தகைமை முகாமைத்துவமும் மதிப்பிடலும்

6.மூளைசார் செயற்பாடுகளும் அவை கற்றல், கற்பித்தலில் மற்றும் முகாமைத்துவத்தில் செல்வாக்குச் செலுத்தும் விதமும்.

7.மாற்ற முகாமைத்துவம்

8.ஆசிரியர் தரங்கணிப்பும் அதன் விளைதிறனும்

9.பல்பரிமாண தலைமைத்துவம்

- 21 ஆம் நூற்றாண்டின் பாடசாலைத் தலைமைத்துவத்தை கட்டியெழுப்புவதற்குரிய காரணிகளாக பாடசாலை, வகுப்பறை, தலைமைத்துவப் போக்கு, நடத்தை மாற்றம், பண்புத் தரம்,அணி உணர்வு, பங்குபற்றுதல் முகாமைத்துவம், முன்வருதல் போன்றன எதிர்பார்க்கப்படுகின்றன. பாடசாலையில் விருத்தி செய்யப்பட வேண்டிய தலைமைத்துவ நுட்பங்களாக மாணவர் ஆசிரியர்களின் மென்திறன் விருத்தி ஆரோக்கியமான தொடர்பாடல், பொறுப்புக்களை ஏற்கின்ற மனப்பாங்கு என்பன அத்தியாவசியமாகின்றன. அத்துடன் வகுப்பறைச் சூழலை உயிர்ப்புடன் இருக்கச் செய்தல் வலுவூட்டல், விருது வழங்கல், தவறுகளில் இருந்து கற்றல், ஊக்கத்தைச் செலுத்துதல், நேர் மனப்பாங்கு, அணி உணர்வு, பொறுப்புக் கூறும் தன்மை என்பனவும் விருத்தி செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் 21 ஆம் நூற்றாண்டில் கற்கும் சமூகத்தை வழிநடத்தப்போகின்ற தலைவர்களாகிய நாம் அதற்குரிய தயார் நிலையில் உள்ளோமா என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். அதற்கேற்றாற் போல் வினைத்திறனான தந்திரோபாயங்கள் மற்றும் உத்திகளைக் கொண்டிருப்பதுடன் முன்னணியில் கற்றுக் கொண்டிருப்பவராகவும் தொழில்நுட்பப் பிரயோகம் ஊழியர் அபிவிருத்தி வளமான தொலைநோக்கு புத்தாக்கமான தீர்மானங்கள் மாணவர்களை மையப்படுத்திய தொழில்நுட்பம், தாய்நாட்டையும் மக்களையும் நேசிக்கும் பண்பு என்பவற்றை உருவாக்க உழைக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- இரண்டாவதாக கல்வி முறையியலில் பிள்ளைநேயக் கல்விக்கும் வளர்ந்தோர் கல்விக்கும் முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. அதன் அடிப்படையில் பிள்ளைநேயக் கல்வியில் உடல், உள ரீதியான தண்டனைகளுக்கு உட்படுத்தப்படாத வகையிலும் கற்கின்றோம் என்கின்ற நெருக்கீடுகளை உணர்ந்து கொள்ளாத வகையிலும் நாட்டிற்கு எதிர்காலத்தில் பற்றுடன் சேவையாற்ற வேண்டும் என்கின்ற உணர்வு ரீதியான உந்துதலோடு கல்வியை வழங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதுமட்டுமன்றி வளர்ந்தோர் கல்வியில அக்கல்விக்கான கொள்கை தத்துவம், சுயமாகக கற்கக் கூடிய ஏது நிலை பற்றி கூறப்படுகின்றது. இதன்மூலம வளர்ந்தோரிடம் மாற்ற முடியாது என்ற கொள்கைகள் அல்லது தவறுகள் சீர்செய்யப் படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- மூன்றாவதாக தகைமைசார் திறன்களை வளர்த்தலும் அதற்கு பயிற்சியளித்தல் தொடர்பாக தொழில் வழிப்படுத்துநர் ஊடாக பயிற்சி, தொழில் வழிகாட்டல் ஆலோசனை என்பன முக்கியத்துவப்படுத்தப்படுகினறது. தகைமைசார் திறன்களை வளர்ப்பதற்கான விடயங்களாக ஆராய்ச்சிக் கட்டுரைகள் விடய ஆய்வுகள், முன்மாதிரியான செயற்பாடுகள், மாதிரிகளை அடையாளப்படுத்தல், திறன் விருத்திச் செயற்பாடுகள் என்பன காணப்படுகின்றது.

- நான்காவது விடயமாகிய கல்வி தொழில்நுட்பத்தை பாடசாலை முகாமைத்துவத்தில் பயன்படுத்தல் தொடர்பாக தகவல் தொடர்பாடல் விருத்தி கணனி தொடர்பாடல் விருத்தி, தகவல் தொடர்பாடலை நிர்வாகத்தில் அதிபர் மட்டத்தில், வகுப்பறை மட்டத்தில் பயன்படுத்துதல் என்பன பற்றியும் தகவல் தொடர்பாடலை மேம்படுத்துதல் உள்ள தடைகளாக வளப்பற்றாக்குறை பயிற்சி இன்மை கடுமையான கலைத்திட்டம், நேரப் பற்றாக் குறை, தகவல் தொடர்பாடல் தொடர்பான மனப்பாங்கு என்பன காணப்படுகின்றன.

- அடுத்ததாக தொழில் தகைமை முகாமைத்துவம் மதிப்பிடல் என்னும் விடயத்தில் கலைத்திட்ட முகாமைதுவமுறைமைகள், ஆளணி முகாமைத்துவ முறைமைகள், கூட்ட முகாமைத்துவ முறைமைகள், பாடசாலை தலைவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் அவற்றுக்கான தீர்வுகள், தீர்மானம் எடுத்தல் செயன்முறை தொடர்பான முறைமைகள், வேலைத் திருப்தி, ஊக்குவிப்பு, பின்னூட்டல் என்பன காணப்படுகின்றன.

- மூளைசார் கற்பித்தல், கற்றல் விடயம் தொடர்பாக மூளை பற்றிய ஆய்வின்வரலாறுகள் உளவியல் ரீதியான குணாதிசயங்கள் ஏற்கனவே உருவாக்கப்பட்ட கருத்துருவாக்கங்கள், சமூக முன்னுரிமை பற்றி கூறப்படுகின்ற அதேவேளை ஞாபகப்படுத்தல், உணர்வுகளைக் கட்டுப்படுத்தலில், கருத்துக்களை வெளிப்படுத்த விரும்புவதில் வலது, இடது பக்க மூளைகளின் செயற்பாடுகள் பற்றி விபரிக்கப்படுகின்றது.

(தொடரும்...)

தி.அபராஜிதன்,
அதிபர்.

# திருகோணமலையில் நீர் வழங்கல் திட்டத்தினை ஆரம்பித்தல்

## பட்ஜெட் - 2017

(தொடர்ச்சி)

263.மேலும் நாட்டில் பாதுகாப்பான குடிநீருக்கான பிரவேசத்திற்கு ஆதரவளிக்கும் நோக்குடனும் துரிதப்படுத்தும் நோக்குடனும் தனியார் துறையானது, நீர் தொடர்பான கருத்திட்டங்களைச் சொந்தமாக ஆரம்பித்துச் செயற்படுத்தும் அடிப்படையில் (DBOO) வசதிகள் அளிக்கப்படும். இப்பொறிமுறைக்கு குறைந்தது ரூபா 150 பில்லியன் முதலீடு எதிர்பார்க்கப்படுவதோடு, இம்முதலீடானது 2017 இல் திரட்டப்படும்.

264.திருகோணமலையில் கைத்தொழில் அபிவிருத்திக்கு உள்ள குறிப்பிடத்தக்க வாய்ப்புக்களைக் கருத்திற் கொண்டு அரசாங்கமானது, நீர் மற்றும் மின்சாரம் போன்ற தேவையான பயன்பாடுகளை துரிதமாக அபிவிருத்தி செய்வதில் மிக ஆர்வத்துடன் இருக்கின்றது.

ஆகவே, திருகோணமலை நீர் வழங்கல் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு ரூபா 600 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

265.அரச,தனியார் பங்கேற்பின் அடிப்படையில் யாழ்ப்பாணம் மற்றும் புத்தளம் பிரதேசங்களில் நீர் சுத்திகரிப்புப் பொறிகளை ஸ்தாபிபதற்கான வாய்ப்புக்களை ஆராய்ச்சி செய்யுமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினையும் மற்றும் தனியார் துறையினையும் ஊக்குவிப்பதோடு, அதற்காக ரூபா 250 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் முன்மொழிகின்றேன்.

### எரிசக்தித் துறை

266. சபாநாயகர் அவர்களே, அரசாங்கத்தின் கொள்கையானது, நிலைபேறான அபிவிருத்தி வேலைச்சட்டகமொன்றிற்குள், எரிசக்தியின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதாகும். ஆயினும், எண்ணெய் விலைகளின் அதிகரிப்பு மற்றும் சூழல் கரிசனைகளுக்கு மத்தியிலும் உள்ளூர் தேவையின் அதிகரிப்பினால் தோன்றும் சவால்களுக்கு மாற்றுபாயங்களைத் தொடருவதற்கான தேவையொன்றினைத் தெளிவாக உருவாக்குகின்றது.

அவ்வாறான உபாயங்கள் புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாடு, பிரதியீட்டு எரிசக்தி மூலங்களின் பயன்பாடு மற்றும் புதிய நிதியீட்ட மாதிரிகளின் பயன்பாடு போன்றவற்றை உள்ளடக்கலாம்.

267.நாட்டின் தற்போதைய மின்சக்தியின் உருவாக்கத்தின் கொள்ளளவு சுமார் 4,000 மெ.வோல்ட்களாக உள்ளதோடு, சுற்றுலாத் துறை, தயாரிப்பு, வர்த்தக ரீதியான கமத்தொழில் போன்றனவற்றின் அதிகரிப்பிலிருந்து மின்சக்திக்கான கேள்வியின் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியுடன் நாட்டின் மின்சக்தி உருவாக்கத்தின் கொள்ளளவை, 2020 ஆம் ஆண்டளவில் குறைந்தது 5,300 மெ.வோல்ட்களாகவும், 2025ஆண்டளவில்7,500மெ.வோல்ட்களாகவும் அதிகரிக்க வேண்டியுள்ளது. நிலைபேறான சூழல் வேலைச்சட்டகமொன்றிற்குள் குறைந்த செலவொன்றில் தடையற்ற மின் சக்தி வழங்கலொன்றை உறுதிப்படுத்துவதற்கு நாம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளோம்.

268. இப்பின்னணியின் கீழ் அரசாங்கம், LNGமற்றும் பச்சை சக்திமூலங்களை உள்ளடக்குவதற்காக, அதன் எரிசக்தி மூலங்களை பன்முகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது. கடந்த ஆண்டுகளில் மின் சக்தித் துறையில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் அதிக அளவில் உருவாக்கங்களை மையமாகக் கொண்டதாக அமைந்துள்ளன.

எனவே, பரிமாற்றம் மற்றும் விநியோகம் போன்றனவற்றில் போதிய அளவிலான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவது மிக முக்கியமாகும்.

மேலும், ஒவ்வொரு மாகாணத்திற்குள்ளும் பரிமாற்ற வசதிகளை வழங்குவதில் பங்கேற்குமாறு தனியார் துறையை நான் ஊக்குவிக்கின்றேன்.

269.அதேவேளை, உத்தேச நாட்டிற்குள் உருவாக்கப்பட்டுள்ள குழாய்களையும் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் களஞ்சிய வசதிகளையும் விருத்தி செய்வதற்கான உட்கட்டமைப்புகளையும் விரிவடையச் செய்வோம். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டர்மினல்ஸ் லிமிட்டட்டும் ஒன்றிணைந்து வட மாகாணத்தில் எரிபொருள் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதன் மூலம் காங்கேசன்துறையில் பிராந்திய ரீதியான எண்ணெய்க் களஞ்சியங்களைக் கொள்வனவு செய்யவுள்ளதோடு, அவற்றை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

அதேபோல, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் லங்கா இந்திய எண்ணெய்க் கம்பனியுடன் ஒன்றிணைந்து திருகோணமலையில் உயர் எண்ணெய்த் தாங்கிப் பண்ணையை புனருத்தாரணம் செய்து அபிவிருத்தி செய்யும்.

270. சபாநாயகர் அவர்களே, தற்போது நாட்டில் கிட்டத்தட்ட 5,200 தொலைத்தொடர்புக் கோபுரங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு தொலைத்தொடர்புச் சேவை வழங்குநரும் அவ்வாறான தொலைத்தொடர்புக் கோபுரங்களை பொருத்துவதற்கான செலவினை மேற்கொள்ள வேண்டும்.


ஆகவே, தொலைத் தொடர்புக் கோபுரங்களுக்குச் சொந்தமானவர்களுக்குக் கம்பனியொன்றினை அரச, தனியார் பங்கேற்புடன் ஸ்தாபிக்குமாறு நான் முன்மொழிகின்றேன்.

இந்நிலைமையானது, தொலைத் தொடர்புக் கைத்தொழிலானது, சொத்துக்களை பகிர்ந்துகொள்வதிலிருந்து எழக்கூடிய ஒருங்கிணைப்புக்களின் ஊடாக அதன் செயற்பாட்டுச் செலவுகளைக் குறைத்துக் கொள்ளக் கூடியதாக உள்ளதோடு, நிபுணத்துவமும் அபிவிருத்தி செய்யப்படும்.

### நிதித்துறை

271. சபாநாயகர் அவர்களே, இந்நாட்டினை நிதிக் கேந்திரம் ஒன்றாக உருவாக்குவதற்கு உள்ள வாய்ப்புக்களைக் கருத்திற் கொண்டு,

நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு - செலவுத் திட்டம் **அனைவருக்கும் நன்மைதரும் விரைவான அபிவிருத்தியை நோக்கி** என்ற தொனிப்பொருளில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் 10.11.2016 அன்று நாடாளுமன்றில் முன் வைக்கப்பட்டது. நிதி அமைச்சரின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட வாசிப்பின் போது...



அரசாங்கம் ஏற்கனவே, கொழும்பு சர்வதேச நிதிநிலையத்தினை (CIFC) ஸ்தாபிப்பதற்கு அவசியமான பூர்வாங்க வேலைகளை ஆரம்பித்துள்ளதோடு, இந்நிலையத்தினை மிக விரைவில் ஸ்தாபிப்பதற்கு அவசியமான சட்டம் வெகு விரைவில் இப்பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

மேலும், இத் துறையின் வளர்ச்சியையும் ஸ்திரத்தன்மையினையும உறுதிப்படுத்துவதற்கான ஒழுங்குமுறைப்படுத்தும் பொறிமுறையொன்றினைப் பலப்படுத்துவது தொடர்பாகவும் நாம் கவனம் செலுத்துவோம். எனவே.இப்பின்னணியின் கீழ் நாம் பின்வருவனவற்றை முன்மொழிகின்றோம்.

272.தற்போது, நிதிசார் வாடிக்கையாளர்களின் அக்கறையினைப் பாதுகாத்தல், நுகர்வோர் நிதித் திட்டங்களினதும் சேவைகளினதும் நம்பகத்தன்மையினையும் வெளிப்படைத் தன்மையினையும் மேற்கொள்வதற்கான கடப்பாடுடைய அதிகார சபையொன்று தற்போது எமது நாட்டில் இல்லை. ஆகவே, நான் வாடிக்கையாளர் நிதிப்பாதுகாப்பு அதிகார சபையொன்றினை (CFPA) ஸ்தாபிப்பதற்கு முன்மொழிகின்றேன்.

நுகர்வோர் நிதிப்பாதுகாப்பு அதிகார சபையானது, நிதிசார் வாடிக்கையாளரின் உரிமைகளை விருத்தி செய்வதன் மூலமும் நிதி தொடர்பான அறிவினை மேம்படுத்தல் மற்றும் நிதிச்சந்தைகளினதும் நிறுவனங்களினதும் போட்டித் தன்மையினையும் உறுதிப்படுதுவதன் மூலம் வாடிக்கையாளரைப் பாதுகாப்பதற்கான இயலளவைப் பெற்றுக் கொள்வதோடு, அதன் மூலம் நாட்டின் அனைத்து நிதி முறைமைகளினதும் நம்பகத் தன்மையினையும் மேம்படுத்தக் கூடியதாகவும் இருக்கும்.

273.தடை செய்யப்பட்ட திட்டங்கள் தொடர்பாக தற்போது நடைமுறையிலுள்ள சட்ட ஏற்பாடுகள் 1988ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கீழ் வருகின்றன. இச்சட்டமானது, பிரமிட் திட்டம் போன்ற தடை செய்யப்பட்ட திட்டங்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் போதிய அளவிலான அதிகாரத்தினை இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கவில்லை.

ஆகவே, நிதித் துறையின் ஸ்திரத்தன்மையின் மீது தடை செய்யப்பட்ட திட்டங்களினால் ஏற்படுத்தப்படக்கூடிய எதிர்மறையான தாக்கங்களைக் கருத்திற் கொண்டு, இலங்கை மத்திய வங்கியானது, சிறந்த ஒரு நிதித்துறை ஒழுங்குமுறைப்படுத்தும் நிறுவனமாக மாற்றுவதற்கு பிரமிட் திட்டத்தினை உள்ளடக்குவதற்கு உறுதியான அமுல்படுத்துகை ஏற்பாடுகளுடன் கூடிய புதிய நியதிச் சட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

274. சபாநாயகர் அவர்களே, 1990 ஆம் ஆண்டின், 2 ஆம் இலக்க படுகடன் மீட்பு (விசேட) ஏற்பாடுகள் சட்டமானது, தற்போது அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட வர்த்தக வங்கிகள் மற்றும் அனுமதிபத்திரம் வழங்கப்பட்ட ஒரு சில விசேட வங்கிகளுக்கும் மாத்திரமே ஏற்புடையதாக உள்ளது.

ஆகவே, வங்கிகளினதும் மற்றும் நிதி நிறுவனங்களினதும் படுகடன் மீட்புச் செயன்முறைகளை விருத்தி செய்யும் நோக்குடன் சகல அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட விசேட வங்கிகளுக்கும் மற்றும் சகல அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கும் 1990 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க படுகடன் மீட்பு (விசேட) ஏற்பாடுகள் சட்டத்தில் திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்கும் ஏற்புடைமையினை விரிவடையச் செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

275. சபாநாயகர் அவர்களே, நாம் ஆட்சிக்கு வந்த போது, கோல்டன் கீ கம்பனியின் வைப்பாளர்களின் அவலநிலையானது, ஒரு சிலர் தற்கொலை முயற்சிகளை மேற்கொண்டிருந்ததோடு, பெரும்பாலானோர் சொல்லொணாத் துயரங்களுக்கும் முகங்கொடுத்திருந்தனர். நாம் பொறுப்புடைய அரசாங்கமொன்று என்றவகையில் ஏற்கனவே, ரூபா 8,000 மில்லியன் தொகையின் மூலம் சிறிய வைப்பாளர்களின் கோரிக்கைகளைத் தீர்ப்பனவு செய்துள்ளதோடு, எஞ்சிய கொடுப்பனவுகளை வருங்காலத்தில் மேற்கொள்ளப்படும். இந்நோக்கத்திற்காக ரூபா 3,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன். கோல்டன் கீ கம்பனியின் சொத்துக்கள் அரசாங்கத்திடம் அளிக்கப்படும்.

276.சபாநாயகர் அவர்களே, பெருமளவிலான நிதிக் கம்பனிகள் உயர்ந்த அளவிலான செயற்பாடற்ற கடன் விகிதாசாரங்களைக் கொண்டிருப்பதனால், மொத்த நிதித்துறையில் நிதிக் கம்பனிகள் உருவாக்கக் கூடிய பாதிப்புக்களை இனங்கண்டு தோல்வியுறும் நிதிக் கம்பனிகளுக்கு உதவி செய்யும் நோக்குடன் நிதிச் சொத்துக்களின் முகாமைத்துவ நிறுவனமொன்றினை (FAMA) உருவாக்குவதற்கு கடந்த ஆண்டில் நான் முன்மொழிந்திருந்தேன். தோல்விக்குள்ளாகிய நிதிக் கம்பனிகளை மீள்கட்டமைப்பதற்காக நிதிச் சொத்துக்களின் முகாமைத்துவ நிறுவனமொன்றினை ஸ்தாபிக்கும் நோக்குடன், பங்காக ரூபா 10 மல்லியன் ஆரம்ப மூலதனத்தினை ஒதுக்கீடு செய்வதற்கும் நிதிச் சொத்துக்களின் முகாமைத்துவ நிறுவனத்திற்கு அத்தொகையினை மீளச் செலுத்துவதற்கான 7 வருட காலப்பிரிவுடன் திறைசேரி முறியொன்றினை வழங்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

277.சுற்றுலாத்துறையின் துரித வளர்ச்சிக்கேற்ப நாணய மாற்றுத்துறையினை விருத்தி செய்யும் நோக்குடன் நாணய மாற்றுநர் களுக்கு 200 அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

### வங்கியியற் துறை

278. சபாநாயகர் அவர்களே, வங்கித்துறையானது, நாட்டிலுள்ள 34 வங்கிகளில் 6 வங்கிகளை மையப்படுத்தியாக உள்ளதோடு, இவை ரூபா 5,600 பில்லியன் பெறுமதியான மொத்தச் சொத்துக்களில் கிட்டத்தட்ட 65 சதவீதத் தினைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அதேவேளை, எஞ்சிய 28 வங்கிகள் சொத்து அடிப்படையில் 35 சதவீதத்திற்கு மாத்திரமே பங்களிப்புச் செலுத்துகின்றன. 2019 ஆம் ஆண்டில், வங்கிகள் Basel III இனைப் பூர்த்தி செய்யவேண்டும் என்ற நிபந்தனையினைக் கருத்திற் கொண்டு, நிதி நிறுவனங்களின் ஒருங்கிணைப்பானது நீண்டகாலத் தில் நன்மை பயக்கக்கூடும் என் பதே அரசாங்கத்தின் அபிப்பிராய மாக உள்ளதோடு, விசேடமாக தனியார் துறைக்கு அவ்வாறான தன்னார்வ ஒருங்கிணைப்பினை யும் ஊக்குவிக்கின்றேன்.

(தொடரும்)

# இந்திய இராணுவ முகாம் மீது பயங்கரவாதிகள் தாக்குதல்

## 7 பேர் உயிரிழப்பு; 16 பணயக் கைதிகள் மீட்பு

காஷ்மீரில் இராணுவ முகாம் மீது பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 2 அதிகாரிகள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர். பயங்கரவாதிகள் பிடித்து வைத்திருந்த 16 பணயக் கைதிகள் மீட்கப்பட்டனர்.

இந்தியாவில் நாச வேலைகளில் ஈடுபடுவதற்காக பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் காஷ்மீர் வழியாக ஊடுருவி தாக்குதல் நடத்துவதை வாடிக்கையாக கொண்டுள்ளனர்.

இதனால் காஷ்மீரில் சர்வதேச எல்லை மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டு கோடு பகுதிகளில் இந்திய இராணுவத்தினர் 24 மணி நேரமும் விழிப்புடன் ரோந்து, கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் பயங்கரவாதிகள் சிலர் ஜம்மு புறநகர் பகுதியான 'நக்ரோட்டா'வில் உள்ள இராணுவத்தின் 16ஆவது படைப்பிரிவு முகாம் மீது நேற்று முன்தினம் திடீர் தாக்குதல் நடத்தினர்.

நேற்று முன்தினம் காலை 5.30 மணியளவில் அந்த முகாமிற்குள் நுழையும் முயற்சியாக பயங்கரவாதிகள் சிலர் பொலிஸ் சீருடையில் அங்கு வந்தனர்.

அவர்கள் கையெறி குண்டுகளை வீசியதுடன் அங்கு பாதுகாப்புப் பணியில் இருந்த இராணுவத்தினர் மீது சரமாரியாக துப்பாக்கிகளாலும் சுட்டனர்.

பின்னர் அப்பகுதியில் இருந்த 12 வீரர்கள், 2 பெண்கள், 2 குழந்தைகள் என 16 பேரை அவர்கள் பணயக் கைதிகளாக பிடித்தும் வைத்துக் கொண்டனர்.

இதனால் இராணுவத்தினர் பயங்கரவாதிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்துவதில் முதலில் சற்று தாமதம் ஏற்பட்டது.

எனினும் பின்னர் வீரர்கள் தக்க பதிலடி கொடுத்தனர். இதையடுத்து இரு தரபினருக்கும் இடையே பயங்கர துப்பாக்கிச் சண்டை நடந்தது.

பயங்கரவாதிகள் பிணைக கைதிகளாக இராணுவத்தினர் உட்பட 16 பேரை பிடித்து வைத்து இருந்ததால் அவர்களை மீட்க இராணுவத்தினர் சாதுர்யமாக செயற்பட்டனர்.

சுமார் 13 மணி நேரம் இருதரப்பினருக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நீடித்தது. மாலை 6.30 மணியளவில் சண்டை முடிவுக்கு வந்தது.

பயங்கரவாதிகளின் தாக்குதலில் இராணுவ அதிகாரிகள் இருவர் உட்பட 7 பேரும் உயிரிழந்தனர்.

தாக்குதலில் ஈடுபட்ட 3 பயங்கரவாதிகளும் கொல்லப்பட்டனர். பணயக் கைதிகளாக பிடிபட்ட அத்தனை பேரையும் இராணுவத்தினர் வெற்றிகரமாக மீட்டனர்.

பயங்கரவாதிகள் இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அப்பகுதியில் உள்ள ஜம்மு-ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலை உடனடியாக மூடப்பட்டது.

அதேபோல் ஜம்மு மாவட்டத்தின் அனைத்து பாடசாலைகளும் மூடப்பட்டன. (இ-7)

# ஏமனில் ஜனாதிபதி ஆட்சியை வீழ்த்தி புதிய அரசை அறிவித்த போராளிகள்



சவுதி அரேபியாவில் தஞ்சம அடைந்துள்ள ஏமன் ஜனாதிபதிக்கு எதிராக புதிய அரசை அமைத்துள்ளதாக ஹவுதிப் போராளிகள் அறிவித்துள்ளனர்.

மத்திய கிழக்கில் உள்ள அரபுநாடுகளில் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள ஏமன் நாட்டில் சுமார் இரண்டரைக் கோடி மக்கள் வாழ்கின்றனர். இங்கு அபெட்ரபோ மன்சோர் ஹாடி தலைமையிலான ஜனாதிபதி ஆட்சி நடைபெற்று வருகின்றது.

அல் - கொய்தா தீவிரவாத இயக்கத்தின் ஆதரவு பெற்ற ஷியா இனத்தின் ஒரு பிரிவான ஹவுதி இன மக்கள், ஈரான் அரசின் மறைமுக ஆதரவுடன் சன்னிப் பிரிவைச் சேர்ந்த ஜனாதிபதியின் ஆட்சிக்கு எதிராக புரட்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த புரட்சியை முறியடிக்க ஜனாதிபதியின் படைகளுக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பியப் படைகள் ஆலோசனை வழங்கி வருகின்றன.

இந்தப் புரட்சியை முற்றிலுமாக முறியடிக்க ஐக்கிய நாடுகள் சபை தலைமையிலான பன்னாட்டு படைகளை அனுப்பி உதவி புரிய வேண்டும் என அபெட்ரபோ மன்சோர் ஹாடி வேண்டுகோள் விடுத்தார்.

இந்நிலையில், ஏமனில் உள்ள துறைமுக நகரான ஏடெனில் இருந்து சுமார் 60 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள விமானப்படைத் தளத்தை புரட்சியாளர்கள் படை கடந்த மார்ச் மாதத்தில் கைப்பற்றியது. இதுபற்றிய செய்திகள் வெளியானதும் ஜனாதிபதி அபெட்ரபோ மன்சோர் ஹாடி தனது பாதுகாவலர்களுடன் அரண்மனையை விட்டு வெளியேறினார். சிலநாட்கள் ஏடெனில் தலைமறைவாக இருந்து வந்த அவர் சவுதி அரேபியா நாட்டில் தஞ்சம் அடைந்துள்ளார்.

ஏமன் தலைநகரான சனா உள்ளிட்ட நாட்டின் சில பகுதிகளைக் கைப்பற்றி தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் கிளர்ச்சியாளர்களை ஒடுக்க சவுதி அரேபியா அரசின் உதவியை ஜனாதிபதி மன்சூர் ஹாதி நாடினார். இதையடுத்து, கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து சவுதி அரேபியா தலைமையிலான கூட்டு விமானப்படைகள் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளின்மீது குண்டுமழை பொழிந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

இருதரப்பினருக்கும் இடையில் நடைபெற்ற தாக்குதல்களில் இதுவரை சுமார் 7 ஆயிரம் பேர் பலியாகியுள்ளனர். சுமார் 40 ஆயிரம் பேர் படுகாயம் அடைந்துள்ளனர். அரசுப் படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் நடைபெற்று வரும் உள்நாட்டு சண்டையால் அந்நாட்டில் வசிக்கும் பெரும்பாலான மக்கள் குடிநீர், உணவு, மருந்துப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகள் கிடைக்காமல் அவதிப்படுகின்றனர்.

உணவு மற்றும் பாதுகாப்பான உறைவிடம் தேடி உள்நாட்டில் புலம்பெயர்ந்த அகதிகளாக சுமார் 2 இலட்சம் பேரும், வெளிநாடுகளுக்கு புகலிடம் தேடி சுமார் 2 இலட்சம் மக்களும் புலம்பெயர்ந்துள்ளனர்.

அரசு தரப்புக்கும் ஹவுதி போராளிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போர் மீண்டும் உச்சக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில் நாட்டின் சரிபாதி பகுதி போராளிகளின் வசம் சிக்கியுள்ளது. மீதிப் பகுதியில் சிறுசிறு புரட்சிப் படையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

சுமார் 20 மாதங்களாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் இந்த குழுவினரிடம் சமாதான பேச்சுவார்த்தை நடத்தி, பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, சர்வதேச நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட ஜனாதிபதி அபெட்ரபோ மன்சோர் ஹாடியிடம் ஆட்சியை ஒப்படைக்கவும் சவுதி அரேபியாவில் தஞ்சம் அடைந்துள்ள அவர் மீண்டும் நாடு திரும்பவும் தேவையான சமரச ஏற்பாடுகளை ஐக்கிய நாடுகள் சபை முழுமூச்சாக செய்து வருகிறது.

இந்நிலையில், ஹவுதிப் போராளிகளும் அவர்களுக்கு ஆதரவான சில அரசியல் பிரமுகர்களும் இணைந்து ஏமன் நாட்டில் புதிய அரசை அமைத்துள்ளதாக நேற்று அறிவித்துள்ளனர். ஈராக் நாட்டின் ஆதரவுடன் போராடிவரும் ஷியா போராளிகள் அமைப்பு இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இந்த அறிவிப்பு வெளியானதும் பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்த ஜனாதிபதி மாளிகையின் செய்தித் தொடர்பாளர் ராஜே பாட்டி, ஹவுதி போராளிகளின் இந்த அத்துமீறல் ஏமன் மக்களுக்கு மட்டுமல்லாமல் ஐக்கிய நாடுகள் சபைக்கும் செய்யப்படும் அவமரியாதையாகும் என்று தெரிவித்தார்.

கடந்த ஒன்றரை ஆண்டுக்கும் மேலாக இந்த போராளிக் குழுக்கள் நடத்திவரும் ஆயுதப் போராட்டத்தை இதுவரை சர்வதேச சமுதாயத்தில் யாரும் அங்கீகரிக்காத நிலையில் புதிய அரசை அமைத்துள்ளதாக இவர்கள் அறிவிப்பது அபத்தமான செயலாகும் என்று தெரிவித்தார்.

முன்னதாக, புதிய அரசு அமைக்கவிருப்பதாக முன்னர் ஹவுதி போராளிகள் தெரிவித்திருந்தபோது, 'உள்நாட்டு அரசியல் பிரமுகர்களின் ஆதரவுடன் நாட்டில் புதிய ஆட்சி அமைக்கவுள்ள எங்கள் நடவடிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் சமாதான முயற்சிக்கான முட்டுக்கட்டையாக பார்க்கக்கூடாது என்று தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தாய்லாந்தின் புதிய மன்னராக மகா வஜிரலோங் கோர்ன் தேர்வு

(பாங்காங்)



தாய்லாந்தின் புதிய மன்னராக மகா வஜிரலோங் கோர்ன் (வயது-63) தேர்வு செய்யப்பட்டுள்ளார். மன்னராட்சி நடைமுறையில் உள்ள நாடுகளில் தாய்லாந்தும் ஒன்று. இங்கு 9ஆவது மன்னராக இருந்தவர் பூமிபால் அதுல்யதேஜ்.

88 வயதான இவர் கடந்த ஒக்டோபர் மாதம் 13ஆம் திகதி உடல் நலக் குறைவால் மரணமடைந்தார். இதையடுத்து புதிய மன்னர் தேர்வு செய்யும் பணி தொடங்கியது.

நேற்று முன்தினம் பாராளுமன்றம் கூடியது. இதில் அமைச்சரவையின் தீர்மானத்தை ஏற்று தாய்லாந்தின் புதிய மன்னராக இளவரசர் மகா வஜிரலோங் கோர்ன் தேர்வு செய்யப்பட்டார்.

இவர் மறைந்த மன்னரின் மகன் ஆவார். ஒரு சில நாளில் பாராளுமன்றத் தலைவர், இளவரசரை நேரில் சந்தித்து அதிகாரப்பூர்வமாக அழைப்பு விடுப்பார்.

அதை அவர் ஏற்றுக் கொண்டவுடன் மக்களுக்கு அறிவிக்கப்படும். (இ-7)

**பயங்கர விபத்து**

## மாணவிகள் உட்பட 12 பேர் உயிரிழப்பு

துருக்கியில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் பாடசாலை மாணவிகள் உட்பட 12 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

துருக்கியின் தெற்கில் உள்ள அதனா பகுதியில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. அதனா பகுதியின் 3 அடுக்கு மாடி குடியிருப்பு வீடு ஒன்றில் இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வீட்டில் உள்ள மரப் பொருட்கள் அனைத்தும் தீயில் கொளுந்துவிட்டு எரிந்தன. மின்சார கசிவு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# பாகிஸ்தானுடன் எவ்வித இரகசிய பேச்சும் இல்லை

## ரஷ்யா தெரிவிப்பு

(மொஸ்கோ)

சீனா-பாகிஸ்தான் இடையேயான பொருளாதார பாதைத் திட்டம் குறித்து பாகிஸ்தானுடன் எவ்வித இரகசிய பேச்சுவார்த்தையும் இல்லை என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

சி.பி.இ.சி. எனப்படுவது சீனா-பாகிஸ்தான் இடையேயான பொருளாதார வழிப்பாதைத் திட்டம் ஆகும். இந்த பொருளாதார வழிப்பாதையில் சுமார் 51 பில்லியன் டொலர் மதிப்பீட்டில் பல்வேறு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சி.பி.இ.சி திட்ட உருவாக்கத்தில் பாகிஸ்தானுடன் இரகசிய பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதாக அந்நாட்டு ஊடகங்களில் வெளியாகும் செய்திகளுக்கு ரஷ்யா மறுப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சீனா-பாகிஸ்தான் இடையிலான பொருளாதார வழிப்பாதைத் திட்டத்தில் ரஷ்யா பங்கெடுப்பதற்கான வாய்ப்புகள் தொடர்பாக அந்நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் உடனான பொருளாதார மற்றும் வர்த்தக ஒத்துழைப்பு உரிய மதிப்புடன் இருந்து வருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வடகொரியாவுக்கு எதிராக புதிய பொருளாதாரத் தடை

(நியூயோர்க்)

**ஏவுகணைச் சோதனைகளின் மூலம் உலக நாடுகளை மிரட்டிவரும் வடகொரியா மீது 15 உறுப்பு நாடுகளின் ஒப்புதலுடன் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நேற்று புதிய பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டது.**

கிழக்காசிய கண்டத்தின் கொரிய தீபகற்பத்தில் அமைந்துள்ள முக்கிய நாடான வடகொரியா கடுமையான பொருளாதார நெருக்கடியில் தத்தளித்து வருகிறது. இருப்பினும், கடந்த 2006ஆம் ஆண்டு முதல் உலக நாடுகளின் எதிர்ப்பினை பொருட்படுத்தாமலும் சர்வதேச ஒப்பந்தங்களை புறக்கணித்தும் அணு ஆயுத சோதனைகளை வடகொரியா தொடர்ந்து நடத்தி வருகிறது.

வடகொரியாவின் இந்த அத்துமீறலுக்கு அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையும் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தன.

ஆனாலும், மாதந்தோறும் ஒருமுறையோ, இருமுறையோ இந்த ஏவுகணை பரிசோதனைகளை மேற்கொள்ள வடகொரியா தவறுவதில்லை. வடகொரியாவின் இந்த ஆணவத்துக்கு தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையை பல நாடுகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

இதற்கான வரைவு தீர்மானம் ஒன்றையும் அமெரிக்கா, சீனா உள்ளிட்ட நாடுகள் உருவாக்கின. இந்த தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபையில் கடந்த புதன்கிழமை தாக்கல் செய்தன. இந்த தீர்மானத்தின் மீது ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலில நேற்று வாக்கெடுப்பு நடைபெற்றது.

வடகொரியாவிடம் இருந்து நிலக்கரியை இறக்குமதி செய்யக்கூடாது என பிறநாடுகளுக்கு தடை பிறப்பிப்பது உட்பட அந்நாட்டுக்கு பொருளாதார நெருக்கடியை கொடுக்கக்கூடிய பல்வேறு முக்கிய அம்சங்கள் இந்த தீர்மானத்தில் இடம்பெற்றுள்ளன.

இந்த தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை ஆதரிக்கப் போவதாக வெட்டுரிமை (வீற்றோ) அதிகாரம் படைத்த அமெரிக்கா, சீனா, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ் மற்றும் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இடம்பெற்றுள்ள 15 நாடுகளும் ஒருமனதாக முடிவு செய்துள்ளன.

வடகொரியாவின் ஒரே கனிமவளம் நிலக்கரிதான் என்பதும், நிலக்கரியை ஏற்றுமதி செய்வதன் மூலமாக மட்டும் ஆண்டுதோறும் சுமார 400 கோடி டொலர்கள் அந்நாட்டின் கருவூலத்தை நிரப்பி வருவதும், இந்தத் தொகையில் பெரும்பகுதியை ஏவுகணைகள் மற்றும் அணு ஆயுதங்களை மேம்படுத்தும் திட்டத்துக்காக வடகொரியா ஜனாதிபதி செலவிட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

வடகொரியாவின் பொருளாதாரத்துக்கு பக்கபலமாக இருக்கும் நிலக்கரி ஏற்றுமதி மற்றும் உலக நாடுகளில் இருந்து பெறப்படும் பல்வேறு அத்தியாவசியப் பொருட்களுக்கான இறக்குமதிக்கும் தடை செய்யும் ஐ.நா.சபையின் தீர்மானம் அந்நாட்டின் ஜனாதிபதிக்கு சம்மட்டி அடியாக அமையும் என சர்வதேச அரசியல் நியுணர்கள் கருதுகின்றனர். (இ-7-10)

# சிரியாவில் உச்சகட்ட உள்நாட்டுப் போர்

# ஒரேவாரத்தில் 20ஆயிரம் மக்கள் வெளியேற்றம்; ஐ.நா. அறிவிப்பு



(டமாஸ்கஸ்)

கிளர்ச்சியாளர்களின் முற்றுகைக்குட்பட்ட சிரியாவின் அலெப்போ நகரிலிருந்து கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் சுமார் 20 ஆயிரம் பொதுமக்கள் சிரிய அரசாங்கத்தினால் வெளியேற்றப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

சிரியாவில் போராளிகள் வசம் சிக்கியுள்ள அலெப்போ மற்றும் இட்லிப் மாகாணங்களை மீட்பதற்காக ரஷ்ய விமானப்படையின் உதவியுடன் அரசுப்படைகள் சமீபகாலமாக ஆவேசத் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த தாக்குதலின் எதிரொலியாக போராளிகள் பின்வாங்க தொடங்கியுள்ளதால் அரசுப் படைகள் போர் விமானங்கள் மூலம் குண்டுகளை வீசி ஆக்ரோஷ தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த தாக்குதலில் பெரும்பாலும் பொதுமக்களே அதிகம் கொல்லப்படுவதாக உள்ளூர் ஊடகங்கள் குற்றம் சாட்டி வருகின்றன.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவி ஏற்பதற்குள் அலெப்போவில் இருந்து போராளிகளை விரட்டியடிக்க வேண்டும் என்ற குறிக்கோளில் இராணுவப்படைகள் ஆவேசமான அதிரடித் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மேற்கு அலெப்போவில் அண்மைய வாரங்களில் கிளர்ச்சியாளர்கள் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன், 20 ஆயிரத்திற்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

அலெப்போவில் இருந்து வெளியேறிய சுமார் 60 ஆயிரம் பேர் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள செம்பிறை அகதிகளில் முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

அண்மைய நாட்களாக அதிகரித்துவரும் தாக்குதல்களின் எதிரொலியாக அலெப்போவில் வைத்தியசாலைகளின் செயற்பாடுகள் முடக்கப்பட்டுள்ளதுடன், உணவு பற்றாக்குறை நிலவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது என ஐ.நா. அதிகாரி தெரிவித்தார். (இ-7-10)

# 19ம் நூற்றாண்டு பாட்டிக்கு 117 ஆவது பிறந்தநாள்



இத்தாலி நாட்டைச் சேர்ந்த உலகின் மிகவும் வயதான மூதாட்டி எம்மா மோரேனோ இவர் தனது 117ஆவது பிறந்தநாளை சிறப்பாக கொண்டாடினார். உலகின் மிகவும் வயதானவராக கருதப்படுபவர். இத்தாலி நாட்டைச் சேர்ந்த இவர் 1899ஆம் ஆண்டு நவம்பர் 29ஆம் திகதி பிறந்த எம்மா, 19ஆம் நூற்றாண்டில் பிறந்து உயிர் வாழும் கடைசி நபர் இவரே. 19, 20, 21 ஆகிய மூன்று நூற்றாண்டுகளில் வாழ்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தாலியின் எம்மா மோரேனோவுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 117ஆவது பிறந்தநாள். பிறந்தநாளை முன்னிட்டு இத்தாலியின் வெர்பானியா பகுதியில் உள்ள அவரது சிறிய அடுக்குமாடி குடியிருப்பில் நண்பர்கள் முன்னிலையில் வெள்ளை நிற கேக் வெட்டி பிறந்தநாளை கொண்டாடினார்.

இவ்வளவு நாள் உடல் நலத்துடன் வாழும் எம்மா, ஒரு நாளைக்கு இரண்டு முட்டைகளும் சில பிஸ்கட்டுகள் மட்டும் தான் சாப்பிடுகிறார்.

தனது வாழ்க்கையை பற்றி எம்மா கூறியதாவது, என்னுடைய வாழ்க்கை மிகவும் அற்புதமானது. நான் என்னுடைய 65ஆவது வயது வரை ஒரு தொழிற்சாலையில் வேலை செய்தேன். நான் 26 வயதாக இருந்த போது ஒருவன் என்னை மிரட்டி திருமணம் செய்து கொண்டான்.

எங்களுக்கு 1937ஆம் ஆண்டு ஒரு குழந்தை பிறந்தது. அது பிறந்து 6 மாதங்களுக்குள் இறந்து விட்டது. இந்நிலையில் பல ஆண்டுகளாகவே தனியாக வாழ்ந்து வருகிறேன். நிறையப் பேர் என்னைப் பார்க்க வந்து கொண்டே இருக்கிறார்கள். (இ-7)

# 15 டொலருக்காக அமெரிக்காவில் ஆர்ப்பாட்டம் 100 பேர் கைது!

குறைந்தபட்ச ஊதியத் தொகை மற்றும் தொழிற்சங்க உரிமைகள் என்பவற்றை அதிகரிக்குமாறு வலியுறுத்தி அமெரிக்காவின் முக்கிய நகர்களிலும் விமான நிலையங்களிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த சுமார் 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறைந்த ஊதியம் பெறும் தொழிலாளர்களுக்கு ஒரு மணிநேரத்திற்கான குறைந்தபட்ச ஊதியத்தை 15 அமெரிக்க டொலர்கள் அதிகரிக்க வலியுறுத்தி அமெரிக்காவை தளமாகக் கொண்ட சர்வதேச அமைப்பின் வழிநடத்தலின் கீழ் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டமானது அமெரிக்காவின் முக்கிய வர்த்தக மையங்களான நியூயோர்க், சிக்காகோ மற்றும் லொஸ் ஏஞ்சல்ஸ் உட்பட சுமார் 100 நகர்களில் முன்னெடுக்கப்பட்டது.



நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் விமான போக்குவரத்து, உணவகங்கள், சுகாதாரத்துறை மற்றும் கல்வித்துறை ஆகியவற்றில் பணியாற்றும் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டிருந்தனர். (இ-7)

# ரோஹின்யா மக்கள் மீதான வன்முறை மனிதநேயத்திற்கு எதிரானவையாகும்

# ஐ.நா.சபை எச்சரிக்கை



மியன்மாரின் மேற்கு பகுதியான ரோஹின்யா மாநிலத்தில் உள்ள முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் மனித உரிமை மீறல்களானது, மனித குலத்திற்கு எதிரான குற்றங்களாக வழிவகுக்கப்படும் என ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

ரோஹின்யா மக்கள் மீதான வன்முறைகள் மனித நேயத்திற்கு எதிரான செயற்பாடாக அமையக்கூடும் என கடந்த ஜூன் மாதம் ஐ.நா. சார்பில் அறிக்கையிடப்பட்டது. இருந்தபோதிலும், குறித்த மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க மியன்மார் அரசாங்கம் தவறியுள்ளதாக ஐ.நா. அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை சர்வதேச மனிதாபிமான சட்டத்திற்கும், உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகளுக்கும் மதிப்பளிக்குமாறு ஐ.நா. மியன்மார் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

அரசாங்கம் இதனை செய்யத் தவறும் பட்சத்தில் மியன்மார் அரசாங்கத்திற்கு எதிராக சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்றும் ஐ.நா. எச்சரித்துள்ளது.

மியன்மாரின் ரோஹின்யா மாநிலத்தில் பாதுகாப்பு படைகள் மூலமான தொடர்ச்சியான வன்முறை காரணமாக நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் எல்லை தாண்டி பங்களாதேஷ் பயணித்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு தேசிய ஜனநாயக லீக் கட்சி வெற்றியீட்டி அதிகாரத்தை கைப்பற்றிய மியன்மாரின் ஆலோசகர், ஆங் சான்சூகி அதனை கையாள்வதில் பாரிய சவால்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வடக்கு-கிழக்கு இணைப்பு குறித்து எதுவித முடிவும் எடுக்கப்படவில்லை

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

**அரசியலமைப்பு சீர்திருத்தத்தின்போது இனப் பிரச்சினை தீர்வில் வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பில் எதுவித முடிவும் எடுக்கப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

தற்போதைய அரசியல் நிலைமை மற்றும் அபிவிருத்தி தொடர்பாக கடந்த திங்கட்கிழமை திருகோணமலையிலுள்ள தனது இல்லத்தில் முக்கிய சந்திப்பொன்றை நடத்தியபோதே சம்பந்தன் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக்கட்சியின் திருமலை மாவட்ட உறுப்பினர்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு சீர்திருத்தத்தில் மூன்று முக்கிய விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு வருவதாகவும் எனினும் அது தொடர்பில் இதுவரை இறுதி முடிவு எட்டப்படவில்லை எனவும் சம்பந்தன் தெரிவித்தார்.

ஆட்சிமுறை, ஒழுங்கு, சமயம் தொடர்பாக நாட்டில் இருக்க்கூடிய நிலைமை தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.


எம்மைப் பொறுத்தவரை வடக்கு- கிழக்கு இணைப்பு தொடர்பான நிலைமைகள் குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாகவும் எனினும் இதுவரை முடிவு எட்டப்படவில்லை எனவும் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இணைப்பை பொறுத்தவரையில் முடிவு எடுப்பதற்கு சில முக்கிய அம்சங்களில் உடன்பாடு எட்டப்பட வேண்டியுள்ளது. இந்த விடயத்தில் நாங்களும், முஸ்லிம் மக்களும் கலந்துரையாடி ஒரு முடிவுக்கு வரமுடியும் என நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

முஸ்லிம்களுடனான உடன்பாட்டைக் காணாது இந்த விடயத்தை நிறைவேற்றுவது கடினம். அதேவேளை எங்களுடைய இணக்கப்பாடும் எங்களுடனான ஒற்றுமையும் இல்லாது அவர்களாலும் ஒரு தீர்வைப் பெற முடியாது. இதனால் இவ்விடயத்தில் இருதரப்பும் நன்கு ஆராய்ந்து சில விட்டுக்கொடுப்புக்களுடன் முடிவொன்றை எட்ட வேண்டும் என தெரிவித்துள்ளார். இதேவேளை இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண்பதற்கு தாம் முயன்று வருவதாகவும் இந்த வருட இறுதிக்குள் இப்பிரச்சினைக்கு தீர்வொன்றை எட்ட முடியும் என எண்ணுவதாகவும இரா.சம்பந்தன் மேலும தெரிவித்தார். (இ-7)

# இலங்கையுடனான ஒத்துழைப்பு தொடரும்

## அமெரிக்க படைத்தளபதி அட்மிரல் உறுதி



(கொழும்பு)

அமெரிக்காவின் பசுபிக் வலய தளபதி அட்மிரல் ஹரிபி ஹாரிஸின் இலங்கை விஜயம் தொடர்பில் இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் ஹாரிஸ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட தலைவர்களையும் இராணுவ தளபதிகளையும் சந்தித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 27ஆம் திகதி இலங்கை வந்த அட்மிரல் ஹாரிஸ் நேற்று முன்தினம் 29 வரை இலங்கையில் தங்கியிருந்தார். இதன்போது அவர் கொழும்பில் இடம்பெற்ற கடல்வலய பாதுகாப்பு தொடர்பான காலி கலந்துரையாடலிலும் பங்கேற்றார்.

சமுத்திரங்களில் முன்னர் பல்வேறு தடங்கல்கள் இருந்த போதும் தற்போது கடல்வலய போக்குவரததுக்கள் நாடுகளை ஒன்றிணைத்துள்ளன என்று அவர் இதன் போது தெரிவித்தார்.

மேலும் பசுபிக் நாடுகள் மத்தியில் ஒத்துழைப்பை வலியுறுத்திய அட்மிரல்ஹாரிஸ் இலங்கையை பொறுத்த வரை, இந்த விடயத்தில் இலங்கை பிரதான பங்கேற்பாளராகவுள்ளது என்றும் தெரிவித்தார்.

இலங்கையைப் பொறுத்த வரை தற்போது ஐக்கிய நாடுகளின் அமைதி காப்பு படைகளில் இணைந்து லெபனான், மாலி, மத்திய ஆபிரிக்கா, தென்சூடான் ஆகிய நாடுகளில் பணியாற்றுவதை அட்மிரல் ஹாரிஸ் சுட்டிக்காட்டினார்.

தமது விஜயத்தின்போது ஹாரிஸ், வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன, இராணுவ, கடற்படை, விமானப் படை தளபதிகளுடனும் தனந்தனியே சந்திப்புக்களை நடத்தினார். இதேவேளை திருகோணமலைக்குச் சென்ற அவர், அமெரிக்கப் படையினர் இலங்கை படையினருக்கு கடல கண்ணி அகற்றல, அனர்த்த உதவி போனறவை தொடர்பில் வழங்கி வரும் பயிற்சிகளை பார்வையிட்டார்.

இந்த நிலையில் பல வருடங்களாக இடம்பெற்ற போரின் பின்னர், இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் வெளிப்படைத் தன்மை முயற்சிகள் தொடரும் நிலையில் இரண்டு நாடுகளுக்கும் நன்மை பயக்கும் வகையில் அமெரிக்காவின் ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் அட்மிரல் ஹாரிஸ் திருகோணமலையில் கருத்து வெளியிட்டுள்ளார். (இ-7-10)

# லஞ்சம், ஊழல் தொடர்பில் 8 ஆயிரம் முறைப்பாடுகள்

(கொழும்பு)

லஞ்சம் , ஊழல் பற்றிய குற்றச்சாட்டுக்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுவுக்கு, லஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய 8 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எனினும், 3 ஆயிரத்து 264 முறைப்பாடுகள் தொடர்பிலேயே. ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது என, அவ்வாணைக்குழுவின் தலைவர் நெவில் குருகே தெரிவித்தார். நாடாளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால், ஊடகவியலாளர்களுக்காக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட, லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர், மேலும் தெரிவிக்கையில்,

"எமது ஆணைக்குழுவுக்கு, லஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய 8 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

எனினும்எமது ஆணைக்குழுவுடன் தொடர்புடைய 3 ஆயிரத்து 264 முறைப்பாடுகள் தொடர்பிலேயே நாம் விசாரணையை முன்னெடுத்து வருகின்றோம். எமது ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுக்கமைய, ஒவ்வொரு விசாரணைகளை முன்னெடுப்பதற்கு மொத்தமாக 431 அதிகாரிகளை நியமிப்பதற்கான தேவை உள்ளது. எனினும், தற்போது எம்மிடம் மொத்தமாக 196 அதிகாரிகளே கடமையாற்றி வருகின்றனர். அதிலும், சில அதிகாரிகள், மற்றைய சில விசாரணைகளுக்காக சென்று விட்டால், 150 அதிகாரிகளே கடமையில் ஈடுபட்டிருப்பர்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# இன்று ஒரு தகவல்

## பெயருக்குக் கலந்து கொள்வதா?

திருமணமாகட்டும் மரணமாகட்டும் பெயருக்குத் தலைகாட்டுவது என்பது சிலரது பழக்கம்.

ஏதாவது திருமணம் என்றால் போதும் சோர்ந்து போவார்கள். ஐயோ இவ்வளவு தூரம் போயாகணுமே என்றும் ஏதாச்சும் கையில் கொடுக்கணுமே என்றும் நேரம் வீணாகுமே என்றும் இவர்கள் கவலைப்படுவார்கள்.

மரணம் என்றாலோ மனுஷன் இன்னிக்குன்னு பார்த்தா செத்துத் தொலையணும்? என்று புலம்புவார்கள்.(இவர்களுக்கு சௌகரியமான நாள் எது என்று பார்த்தா சாக முடியும்?)

போவதைத் தவிர்ப்பதா, பெயருக்குத் தலை காட்டுவதா என்று சிந்திப்பார்களே தவிர மகிழ்ச்சியுடனும் அல்லது உண்மையான சோகத்துடனும் கலந்து கொள்ளமாட்டார்கள். கடனே என உட்கார்ந்து விட்டு மானசீகமான வருகைப் பதிவேட்டில் பதிவு செய்துவிட்டு வந்து விடுவார்கள். நெருங்கியவர்களிடமே இப்படி என்றால் மற்றவர்கள் விடயத்தில் கேட்கவே வேண்டாம்.

நம்மிடம் மிகப்பிரியமாக இருப்பவர்களிடமும் நமக்கு மிக வேண்டியவர்களிடமுமாவது நாம் உண்மையாக இருக்க வேண்டாமா? இத்தகைய இதய நேசர்களிடம் கூடத் தாமரை இலைமீது தண்ணீர் போல் நடந்து கொள்வதா?வெட்கம்.

நல்லது கெட்டது எதுவாயினும் அந்த வீட்டில் முதல் இன்றியமையாத தேவை ஆள் பலம் தான். என்ன தான் குடும்ப உறுப்பினர்கள் எத்தனை பேர் இருந்தாலும் அத்தனை பேரும் பம்பரமாய்ச் சுழன்று சுழன்று வேலை பார்த்தாலும் ஆட்பலம் போதாது.எல்லோரையும் போல் நாமும் போய்க் கடைசி வரிசையில் உட்கார்ந்து கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தால் அறிமுகம் அதிகம் இல்லாதவர்களுக்கும் நமக்கும் என்ன வேறுபாடு?

மிக நெருங்கியவர்களின் இல்லத்து நல்லது கெட்டதுகளில் எவரும் நம்மிடம் வருந்திக் கேட்க வேண்டும் என எதிர்பாராமல் உடையவர்களுக்கு உதவியாகச் சிறுசிறு வேலைகளைப் பார்க்கலாம். திருமணம் என்றால் வந்தவர்களைக் கவனிக்கலாம். ஏன் வேஷ்டியை மடித்துக்கட்டிக்கொண்டு பந்தி விசாரணை செய்யலாம். இதில் ஒன்றும் கௌரவக் குறைச்சல் வந்துவிடாது. மாறாக ஆனாலும் இந்த மனிதருக்கு இவ்வளவு எளிமை கூடாது! என்று பலரும் பாராட்டும் நிலைதான் உருவாகும்.

எல்லோரையும் கவனிப்பது கடினம் என்றாலோ அதில் தயக்கம் இருந்தாலோ தெரிந்தவர்களை மட்டுமேனும் கவனிக்கலாம். இதனால் இருசாராருக்கும் திருப்தி.

அன்றைக்கென்று பார்த்து அப்படியே பக்கத்தில் சினிமா நடக்கிறது-பார்த்துவிடுவோம் எனப் புறப்பட்டு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியில் இதயபூர்வமாகக் கலந்து கொள்ளாமல் பத்தாவது நிமிடம் கழட்டிக் கொள்வதிருக்கிறதே அது கிட்டத்தட்ட ஒரு மோசடிச் செயல் போன்றது.

லீவு கிடைக்கலை;உடம்பு சரியில்லை என்றெல்லாம் பள்ளிப் பிள்ளைகள் மாதிரிக் காரணம் சொல்வதும் விரும்பத்தகாத போக்கு.

என்னிடம் எந்தப் பொறுப்பையும் ஒப்படைக்கலையே.சரிவரக் கூப்பிடலேயே! எனக்கென்ன வந்தது? என்று ஆர்வக்குறைவாகக் கலந்து கொண்டால் நாமும் பத்தோடு பதினொன்று மாறாக உருப்படியான உதவிகளைச் செய்தால் நாம் ஆயிரத்தில் ஒருவர்.

**லேனாதமிழ்வாணன்**

# தேர்தலை நடத்தக்கோரி மகிந்த அணி குழப்பம்!

(கொழும்பு)

**உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலம் தாழ்த்தப்படுவது தொடர்பில் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் மகிந்த ஆதரவு அணியினர் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தினர். மகிந்த ஆதரவு அணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒன்றாக எழுந்து நின்று ஒரே விடயத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியதால் சபையில் குழப்பநிலை ஏற்பட்டது.**

பாராளுமன்றம் நேற்று முன்தினம்செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையில் கூடியது. இதனையடுத்து இடம்பெற்ற சபாநாயகர் அறிவிப்பு, மனுக்கள் சமர்ப்பணம், வாய்மூல விடைக்கான வினாக்களைத்தொடர்ந்து மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் அறிவிப்பொன்றை வெளியிடுவார் என சபாநாயகர் தெரிவித்தார்.

இதனையடுத்து மாகாண மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா எழுந்து, கடந்த பாராளுமன்ற அமர்வின் போது ஜே.வி.பி. தலைவரும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவுமான அநுரகுமார திஸாநாயக்க 23 இன் கீழ் 2 இல் எழுப்பியிருந்த கேள்விக்கு முழுமையான பதிலளிக்க தனக்கு இன்னும் 3 வார கால அவகாசம் வேண்டுமெனக் கோரினார்.

இதன்போது எழுந்த அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. மாகாணங்களுக்குள் அரசியல் பழிவாங்கல் இடம்பெறுவதனால் எந்தவொரு அதிகாரியும் பாராளுமன்றத்துக்குக் கூட வரவில்லை என சுட்டிக்காட்டியதுடன் இனி மேலும் இந்நிலை தொடராது என்பதற்கு அமைச்சர் உத்தரவாதம் வழங்க வேண்டுமென்றும் கோரினார்.

இதற்கு அமைச்சர் பைசர் முஸ்தபா, மாகாணத்தின் அதிகாரம் ஆளுநர் வசமே உள்ளது என்றும் இதில் தலையிட அமைச்சர் என்ற வகையில் தனக்கு அதிகாரம் இல்லை என்றும் கூறினார்.

இச்சந்தர்ப்பத்தில் மகிந்த ஆதரவு அணியைச் சேர்ந்த தினேஷ் குணவர்த்தன எம்.பி.





உள்ளூராட்சி சபைத் தேர்தலகள் வேண்டுமென்றே காலம் தாழ்த்தப்படுவதாகவும் இதற்கான காரணத்தை அமைச்சர் பைசர் முஸ்தபா சபைக்கு அறிவிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதிலளிக்கையில் அமைச்சர் பைசர் முஸ்தபா, தான் திட்டமிட்டு இத்தேர்தலை காலம் தாழ்த்தவில்லை என்றும் தினேஷ் குணவர்த்தன எம்.பியின் குற்றச்சாட்டை முற்றாக மறுப்பதாகவும் தெரிவித்தார்.

எல்லைகள் நிர்ணயம் முற்றாக முடிவடைந்ததும் தேர்தல் நடத்தப்படுமென்றும் கூறினார்.

எனினும் இதற்கு உடன்படாத மகிந்த ஆதரவு அணியைச் சேர்ந்த 17 எம்.பிக்கள் எழுந்து நின்று தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென வலியுறுத்தினர். பதிலுக்கு அரச தரப்பிலிருந்த எம்.பிக்களும் கூச்சலிடவே சபையில் குழப்பநிலை ஏற்பட்டது.

தினேஷ் குணவர்த்தன எம்.பியும் அமைச்சர் பைசர் முஸ்தபாவும் தொடர்ந்தும் வாக்குவாதத்தில் ஈடுபட்ட போதும் சபாநாயகரின் கடுமையான உத்தரவுக்குப் பின்னர் இருவரும் தமது விவாதத்தை முடித்துக் கொண்டதோடு சபையில் உருவாகியிருந்த குழப்ப நிலையும் முடிவுக்கு வந்தது. (இ-7-10)

# கருணா குழுவுடன் இணைந்து பல கொலைகள் செய்தேன்

## முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் சாட்சியம்

(நேற்றைய தொடர்ச்சி)

அசித்: கடந்த 2015.2.26 அன்று நீர் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கிய வாக்கு மூலம், அதாவது நீர் உண்மைகளை மட்டுமே கூறியதாக கூறும் வாக்கு மூலத்துக்கு அமைய ரவிராஜை சாமி கொலை செய்ய தீட்டிய திட்டம் உமக்கு தெரிந்துள்ளது. அது தொடர்பில் நீர் வாக்கு மூலம் அளித்துள்ளீர்?

(இதன் போது எழுந்த சிரேஷ்ட சொலிசிட்டர் ஜெனரல் ரொஹந்த அபேசூரிய அக்கேள்விக்கு எதிர்ப்பு தெரிவித்தார். வாக்கு மூலத்தை மன்றில் வாசித்து காட்டுவதற்கும் இடம்கொடுக்கக் கூடாது என்றார்)

அசித் : ரவிராஜ் கொலை இடம்பெற்ற காலப்பகுதியில் நீர் பொலிஸ் சேவையில் இருந்தீரா?

பதில்: ஆம்

அசித்: அப்படியானால் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் உத்தியோகத்தர் ஒருவரின் பொறுப்புக்கள் உமக்கும் இருந்தது?

பதில்: ஆம்

அசித்: அப்படியானால் நீர் சாட்சியம் அளிக்கும் போது கூறினீர், ரவிராஜ் கொலையின் முக்கிய பிரதிவாதிகளான சாமி,சரண் ஆகியோர் கொழும்பில் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் தங்கியிருந்ததாக. அப்படியானால் அது தொடர்பில் நீர் உமது உயர் அதிகாரிகளுக்கு அறிவித்தீரா?

பதில்: இல்லை.

அசித்: ரவிராஜ் கொலைக்கு அவர்கள் தயாரானமை நீர் அறிந்திருந்தீர். அப்படி இருந்தும் ஒரு பாராளுமன்ற உறுப்பினரை கொலை செய்யப் போவதை ஏன் நீர் அறிவிக்கவில்லை?

பதில்: என்னிடம் புலி இயக்க முக்கியஸ்தர் ஒருவரைக் கொல்லப் போவதாகவே கூறினர்.

அசித்:இல்லை. நீர் ரவிராஜை கொல்லப் போகும் திட்டத்தை முன்கூட்டியே அறிந்திருந்தீர். ஆகவே தான் பொலிஸாருக்கு வழங்கிய வாக்கு மூலத்தில் சாமி தன்னிடம்கூறியதாக அந்த விடயத்தை கூறியுள்ளீர்?

பதில்: ஞாபகம் இல்லை.

அசித்:சரி.ரவிராஜ்கொலைக்கு முன்னர் உளவு பார்த்ததாக ஏதும் தகவல்களை சாமி கூறினாரா?

பதில்: ஆம். ரவிராஜின் வீட்டுப் பகுதியில் சோதனை நடவடிக்கை ஒன்றினை சாமி, சரண், டுசேன், பிரசாத், வஜிர,செனவிரத்ன ஆகியோர்இணைந்துமுன்னெடுத்ததாக கூறினார்.

(இதன் போதும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தமது எதிர்ப்பை முன்வைத்ததையடுத்து, நீதிபதி மணிலால் வைத்தியதிலக அந்த சோதனை நடவடிக்கையில் சாட்சியாளர் நேரடியாக பங்கேற்றாரா? என கேள்வியை தொடுத்தார். அதற்கு சாட்சியாளர் இல்லை என பதிலளித்தையடுத்து அது தொடர்பில் கேள்வி கேட்க அனுமதியளிக்க மறுத்தார்)

அசித்: உமக்கு பிறகு சாட்சியளிக்கவுள்ள 2 ஆவது சாட்சியாளரை தெரியுமா?

பதில்: ஆம்

அசித்: மூன்றாவது சாட்சியாளரை தெரியுமா?

பதில்: ஆம்

அசித்: 2006.11.09 ஆம் திகதி நீரும். ஏனைய இரு சாட்சியாளர்களும் சேர்ந்து தொழில்நுட்ப கல்லூரி சந்தியில் ரவிராஜை கொலை செய்ய முயன்ற போது அவ்விடத்தில் மோட்டார் சைக்கிளில் இருந்தீர் தானே?

பதில்: இல்லை. அதனை மறுக்கின்றேன்.

அசித்: ரவிராஜ் கொலைக்கு முன்னரேயே, கொலை செய்யப்பட்ட தினம் நீர் செலுத்திய மோட்டார் சைக்கிள் உமக்கு தரப்பட்டது.

பதில்: இல்லை.

(கேள்வி: தலைக்கவசம் கூட ஒரு வாரத்துக்கு முன்பே உம்மிடம் கொடுக்கப்பட்டது என நான் யோசனை செய்கின்றேன்.

பதில்: அதனை நிராகரிக்கின்றேன்.

அசித்: நீர் கருணா குழுவுடன் இணைந்து செய்த குற்றத்தை மறைக்க பிரதிவாதிகளுக்கு எதிராக பொய்ச் சாட்சி கூறுகின்றீர் என நான் பிரேரிக்கின்றேன்.

பதில்: நிராகரிக்கின்றேன்.

அசித்: ரவிராஜின் கொலை இடம்பெற்ற தினம் சாமி உம்மை எங்கு வரச்சொன்னார்?

பதில்:பொறளை கனத்தை அருகே.

அசித்: கனத்தை என்பது மிக விசாலமான பகுதி. அதன் முன்பாக ஒரு சுற்று வட்டம் உள்ளது. அந்த சுற்றுவட்டம் ஊடாக 5 பாதைகள் பிரிந்து செல்கின்றன?

பதில்: ஆம்

அசித்: அப்படியாயின், கனத்தை அருகே வருமாறு சாமி கூறியதும் நீர் எப்படி சரியாக, மாதா வீதிக்கு மிக அருகில் போய் நின்றீர்? ஏற்கனவே உமக்கு பாதை அறிவிக்கப்படாமல், சதி தெரியாமல் இருப்பின் எப்படி அது சாத்தியமாகும்?

பதில்: இல்லை. சாமி வரச் சொன்னதாலேயே அங்கு சென்றேன்.

அசித்: அங்கு சாமி, சரண வந்தனரா?

பதில்: ஆம். கறுப்பு முச்சக்கர வண்டியில் சாமி சரண், டுசேன் ஆகியோர் வந்தனர்.

அசித்: வேறு யார் வந்தனர்?

பதில்: பச்சை மற்றும் கிறீம் நிற முச்சக்கர வண்டிகளில் பிரதிவாதிகள் வந்தனர். கிறீம் நிற முச்சக்கர வண்டியில் கடற்படையைக் குறிக்கும் எழுத்துடன் கூடிய இலக்கத்தகடு காணப்பட்டது.

அசித்: அந்த முச்சக்கர வண்டிகளில் வந்தோர் யார்?

பதில்: ஞாபகம் இல்லை.

அசித்: ஞாபகம் இல்லை என்பது பொய். கறுப்பு முச்சக்கர வண்டி மட்டுமே வந்தது. அதில் கருணா குழுவினர் வந்துள்ளனர்?

பதில்: இல்லை மறுக்கின்றேன்.

அசித்: சாமி, சரண், டுசேன் ஆகியோர் இந்த வழக்கில் தற்போது இல்லாததால் நீர் தப்பித்துக்கொள்வதற்காக இவ்வாறு பொய்யான சாட்சியம் அளிக்கின்றீர்?

பதில்: இல்லை. அதனை மறுக்கின்றேன்.

அசித்: மட்டக்களப்பில் கருணாகுழுவினர்பலகொலைகளை செய்துள்ளனர்?

பதில்: ஆம்

அசித்: கருணா குழுவினருடன் இணைந்து நீரும் பல கொலைகளை செய்துள்ளீர்?

பதில்: ஆம்

(இதன் போது அந்த கேள்விக்கு பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கடும் எதிர்ப்பை வெளியிட்டார். புலிகள் இயக்கத்தினரையே கொலை செய்ததாகவும் பிரதிவாதியின் சட்டத்தரணியின் கேள்வி தவறானது என வாதிட்டார். இதன் போது ஏனைய பிரதிவாதிகளின் சட்டத்தரணிகளான ரசிக பாலசூரிய மற்றும் அனோஜ பிரேமரத்ன ஆகியோரும் எழுந்து அசித் சிறிவர்தனவுடன் சேர்ந்து தொடர் வாதங்களை முன்வைத்தனர். பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தேவையில்லாமல் குறுக்கீடு செய்வதாகவும் கேள்வி சரியானதே எனவும் பதிலும் கிடைத்து விட்டதாக அவர்கள் கூறினர். வாதப் பிரதிவாதம் முற்றிய நிலையில் பொதுவாக கொலைகளை செய்தீரா என எப்படி வினவ முடியும் என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் பிரதிவாதிகளின் சட்டத்தரணிகளிடம் கேட்டார்.

இதன் போது சிரேஷ்ட சட்டத்தரணி அனோஜ பிரேமரத்ன, கடத்தப்பட்ட சீனி முதலாளி, மேலும் பல தமிழ் அப்பாவிகள் யார் என கேள்வி எழுப்பினார். அதற்குள் தலையிட்ட நீதிபதி மணிலால் வைத்திய திலக வாதத்தை நிறுத்துக்கு கொண்டுவந்து சமாதானப்படுத்தினார்.

இதனையடுத்து மூன்றாவது பிரதிவாதியின் சட்டத்தரணியான அனோஜ பிரேமரத்ன சாட்சியாளரான பிரத்திவிராஜ் மனம் பேரியை குறுக்கு விசாரணைகளுக்கு உட்படுத்தினார்.

அனோஜ: சாமியின் அறிவுறுத்தல் படி போகும் போது யாரையோ ஒரு மனிதரை கொல்லப் போவதை நீர் அறிந்திருந்தீரா?

பதில்: புலிகள் இயக்க உறுப்பினர்.... என இழுக்கும் போதே

அனோஜ: புலிகள் இயக்கமோ, ஐ.எஸ். அமைப்போ, போகோஹறாமோ ஏதோ ஒரு அமைப்பை சேர்ந்த ஒரு மனிதனை கொல்லப் போவதை அறிந்திருந்தீரா?

பதில்: ஆம்.

அனோஜ: நீர் இவ் வழக்கில் மன்னிப்பு பெற விதிக்கப்பட்ட நிபந்தனையைத்தானே தற்போது இப்படி சாட்சி சொல்வது. இதனைப் பெற சட்ட மா அதிபருக்கு நீர் நன்றி தெரிவித்தீர்தானே?

(இக்கேள்வியின் போது பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மீள தமது எதிர்ப்பைத் தெரிவித்தார்)

அனோஜ: அரசுக்கு பக்கச் சார்பாக சாட்சியளிப்பதாக கூறினீர் தானே? அது தானே நிபந்தனை?

பதில்: ஆம்

(கனம் நீதிபதியவர்களே, அரசின் சார்பாக சாட்சியம் அளிப்பதாக அவர் கூறவில்லை. அரசாங்கத்துக்கு பக்கச் சார்பாக வாக்கு மூலம் அளிப்பதாகவே அவர் நிபந்தனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்)

அனோஜ: உமக்கு நிபந்தனை பிணை கடந்த 2015. 10.05 அன்று கிடைத்தது?

பதில்: ஆம்

அனோஜ: கஞ்சா தூள் 160 கிலோ விற்பனை செய்த வழக்கில் குற்றத்தை ஒப்புக் கொண்டது அதன் பின்னர் தானே?

பதில்: ஆம்

அனோஜ: குறித்த வழக்கில் இரு சாட்சிகள் விசாரிக்கப்பட்ட பின்னரேயே நீர் குற்றத்தை ஒப்புக் கொண்டீர். அதன் பின்னரேயே உமக்கு தண்டமும் 10 வருட ஒத்திவைக்கப்பட்ட தண்டனையும் வழங்கப்பட்டது. இதன் போது சட்டமா அதிபர் சார்பிலும் உமக்கு குறைந்தபட்ச தண்டனையே கோரப்பட்டது. இவையனைத்தும் இவ் வழக்கில் அரச சாட்சியாக சாட்சியமளிப்பதற்கான நிபந்தனையல்லவா?

பதில்: இல்லை.

(இதன் போது பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ரொஹந்த கடும் ஆட்சேபனை வெளியிட்டார்)

அனோஜ: நீர் கிழக்கில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஹனின் கீழ் எப்போது கடமையாற்றினீர்?

பதில்: எனக்கு ஞாபகத்தில் உள்ளதன் படி 2005 ஜனவரி முதல் டிசெம்பருக்கு உட்பட்ட காலப்பகுதியில்.

அனோஜ: 2006 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பிரபல சீனி வர்த்தகர் நடராஜா ஸ்ரீ ஸ்கந்தராஜவை கடத்தியமை தொடர்பில் நீர் 2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டீரா?

பதில்: ஆம்

அனோஜ: சட்டமா அதிபர் அது தொடர்பில் குற்றம் சாட்டியுள்ளார் தானே?

பதில்: ஆம்

(இதன் போது அது குறித்து வேறு ஒரு வழக்கு இடம் பெறுவதால் அவ்வழக்குக்கு சாட்சியாளரின் பதில் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அதில் அவர் ஒரு பிரதிவாதி என்பதால் அவருக்கு பாதக நிலைமை ஏற்படலாம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது. அதனால் அக்கேள்விகள் தவிர்க்கப்படல் வேண்டும் என பிரதி சொலிசிட்டர் ஜெனரலினால் கோரப்பட்டது. எனினும் சிரேஷ்ட சட்டத்தரணி அனோஜ பிரேமரத்ன, சாட்சிகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் தமக்கு அக்கேள்விகளை தொடுக்க முடியும் என்பதையும், அதனால் எவ்வித பாதிப்பும் இல்லை என்பதையும் எடுத்துக்காட்டி குறுக்கு விசாரணைகளை தொடர்ந்தார்). (இ-11)

## போராட்டங்களை நடத்துவோர் மீது

# தாக்குதல் நடத்த உரிமையில்லை

### நீதியமைச்சர் விஜயதாஸ கருத்து

(கொழும்பு)

**போராட்டங்களை நடத்துவோர் மீது தாக்குதல் நடத்த எவருக்கும் உரிமையில்லை என புத்தசாசனம் மற்றும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.**



வீதிப் போக்குவரத்து விதி மீறல் அபராதத் தொகை அதிகரிப்பிற்கு எதிர்ப்பை வெளியிட்டு போராட்டம் நடத்தி வரும் சாரதிகளை அடித்து விரட்ட வேண்டுமென அமைச்சர் டிலான் பெரேரா அண்மையில் வெளியிட்ட கருத்து தொடர்பில் ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது இவ்வாறு தெரிவித்தார்.

போராட்டங்களை நடத்துவோரை அடித்து வெளியேற்றுவதற்கு எவருக்கும் உரிமையில்லை. கருத்துக்களை வெளியிடும் உரிமை அனைவருக்கும் உண்டு.

சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதைகளின் மூலை முடுக்குகளில் ஒளிந்து மறைந்திருந்து கிறிஸ் பேய்களைப்போன்று தோன்றி வாகனங்களை நிறுத்துகின்றனர். வாகனங்களை நிறுத்தி சாரதி தன்னிடம் வரும் வரையில் காத்திருக்கின்றார்கள். சில அதிகாரிகள் இலஞ்சம் பெற்றுக்கொள்கின்றனர்.

மேலும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் ஆடைகளில் சிறிய கமரா ஒன்று பொருத்தப்பட வேண்டும். இவ்வாறான நிலையில் பொலிஸாரினால் குற்றச் செயல்களில் ஈடுபட முடியாது என புத்தசாசனம் மற்றும் நீதி மன்ற அமைச்சர் விஜயதாஸ ராஜபக்‌ஷ மேலும்தெரிவித்தார். (இ-7-10)

## பல்கலை.மாணவர்கள் மீது கண்ணீர்ப்புகை பிரயோகம்



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் தண்ணீர் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

பேரணியாகச் சென்ற மாணவர்கள் ராஜகிரிய - பொல்தூவ பாலத்திற்கு அருகிலிருந்து நாடாளுமன்ற சுற்றுவட்டத்தை நோக்கிச் சென்ற வேளை, பொலிஸார் கண்ணீர்ப்புகை பிரயோகம் மேற்கொண்டுள்ளனர். எனினும் பொலிஸாரின் தடையை தகர்த்தெறிந்து மாணவர்கள் மீறிச் செல்ல முற்பட்டபோது பொலிஸார் தண்ணீர் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

மாலபே தனியார் வைத்திய கல்லூரியை மூடுமாறு வலயுறுத்தி அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று முன்தினம் ஆரப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியிருந்தது.

களனி பல்கலைக்கழகத்தில் ஆரம்பமான இந்தப் பேரணி பொரளை இராஜகிரிய ஊடாக நாடாளுமன்றத்தை சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்தப் பேரணி காரணமாக ராஜகிரிய, பொரளை உள்ளிட்ட சில பகுதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தது.

ராஜகிரிய - கொட்டா வீதியூடாக பொல்துவ பாலம் வரையான வீதி சில மணித்தியாலங்கள் மூடப்பட்டிருந்ததாக போக்குவரத்துப் பிரிவின் பொலிஸ்மா அதிபர் பாலித பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்நிலையில் மாணவர்கள் நாடாளுமன்ற வளாகத்தை நோக்கிச் செல்ல முற்பட்ட சந்தர்ப்பத்தில் பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் தண்ணீர் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்(இ-7-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 915

**டிலக்‌ஷி**

நேர்மை என்பது
மிக அரிதான
பொக்கிஷம்...
அதை, கீழ்த்தரமான
மனிதர்களிடம்
எதிர்பார்க்காதீர்கள்...
ஏமார்ந்து போவீர்கள்...

**சிந்து**




**தனு**




**கமல்**




**தர்மா**




**ஜெனோஜன்**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உலகில் இலங்கையைப் போன்று நல்ல நாடு இருக்க முடியாது

## முன்னாள் நீதிபதி வசந்தசேனன் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

அனைத்து மக்களுக்கும் சமமான உரிமையை அரசு வழங்கினால் உலகத்திலே இலங்கையை போன்ற நல்ல நாடு இருக்க முடியாது என ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி இ.வசந்தசேனன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசிய சமாதானப்பேரவையின் ஏற்பாட்டிலும் யாழ்.மன்னர், புத்தளம், மட்டக்களப்பு சர்வமதக் குழுவின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற வடமாகாண உண்மையைக் கூறும் குழுமத்தின் அமர்வு நேற்று முன்தினம் யாழ்.சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

இக் குழுமத்தின் தலைவராக கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தமது வாழ்க்கையில் நடைபெற்ற துயரம், துன்பச் சம்பவங்களை பகிர்ந்து கொள்வதற்காக இங்கு பலர் வந்துள்ளார்கள். அவர்களின் கருத்துக்களில் பொய் இருக்க முடியாது

இதில் கலந்து கொண்டவர்களின் முதலாவது கோரிக்கை காணமற் போனவர்களை மீண்டும் தம்மிடம் ஒப்டையுங்கள் என்பதேயாகும். காணாமல் போனவர்களை மீட்டுத் தருவார்கள் என்ற எதிர்பார்ப்பு அவர்களிடம் இருக்கும்.

அதாவது சட்ட ரீதியாக இவ்வளவு காலத்துக்கு பின்பு காணாத ஒருவரை மீண்டும் அவரது குடும்பத்துடன் இணைப்பது என்பது சாத்தியமாகுமா என்பது கேள்விக்குறியாகத்தான் உள்ளது.

கடத்தப்பட்டு ஒரு இடத்தில் வைக்கப்பட்டிருந்தால் அதற்கு அரசு தான் பதில் பொறுப்பு கூற வேண்டும்.

ஆனால் பாதிக்கப்பட்டவர்களின் கருத்தின் படி ஏற்கனவே உரிய இடத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் இதுவரை எந்த முடிவும் இல்லை, என்ன நடந்தது என்ற கேள்விக்குறியாக உள்ளது என தெரிவித்துள்ளார்கள்.

அது எப்பவும் கேள்விக்குறியாகத்தான் இருக்கும் என்பது எனது கருத்து.

எமது குடும்பத்தில் இழப்பு வந்தால் மனவேதனை நிச்சயமாக உண்டு. ஆனால் அதையே நினைத்து எமது எஞ்சிய வாழ்க்கையை வீணாக்கக்கூடாது.

பல்வேறு கோரிக்கைகளை எம்மால் நிறைவேற்ற முடியும். பொருளாதார ரீதியில் உதவி மற்றும் பாதுகாப்பு என்பவற்றை செய்ய முடியும். ஆனால் காணாமல் போய்விட்டார்கள், அல்லது இறந்து விட்டார்கள். அவர்களை மீண்டும் ஒப்படைக்க முடியுமா? என்பது யோசிக்க வேண்டிய விடயம்.

காணாமல் போனவர்கள தொடர்பாக தற்போதைய அரசு தமக்கு தெரியாது என்றும் எங்கே போனார்கள் என தெரியாது என்றும் கூறிலால் அது கேள்விக்குறியான விடயம்.

மேலும் மரணச் சான்றிதழ் கிடைக்கவில்லை என தெரிவிக்கிறார்கள். உரிய முறைப்படி விண்ணப்பித்தால் மரணச்சான்றிதழகளை பெற்றுக்கொள்ள முடியும். உயிருடன் இருக்கிறாரா? இல்லையா? எனச் சந்தேம் இருக்கும் போது மரணச் சான்றிதழ் எடுப்பது கடினம். அது தொடர்பாக ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இங்குள்ள மக்களிடம் இனி போர் நடக்கக்கூடாது என்ற எண்ணம் உறுதியாக உள்ளது. நாம் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள். இன, மத, பேதம் வரக்கூடாது. சிறுவர்களுக்கு மனித விழுமியங்களை சொல்லிக்கொடுக்க வேண்டும்.

அனைவரையும் சகோதரர்களாக நினைத் தால் சமாதானம் வரும்.

நாட்டில் உள்ளவர்கள் மத்தியில் மனமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். தனி ஒருவரால் போரை நிறுத்த முடியாது.

அனைவரது மனதிலும் நல்ல மனமாற்றம் தேவை. மதத்தை மட்டும் போதிப்பதை விடுத்து மனதிலே மதத்தின்படி வாழவைப்பது தான் இந்த நாட்டில் போர் வராமல் தடுப்பதற்கு நல்ல மார்க்கம் ஆகும்.

சமாதானப் பேரவை ஊடாக என்னை தொடர்பு கொண்டால் பொருளாதார ரீதியாக உதவிகள் செய்ய தயாராக உள்ளேன். சேவை ஊடாகத்தான் இறைவனை அடைய முடியும். தற்போது மக்கள் சேவைசெய்ய ஆட்கள்இல்லை.

அரசியலைப் பற்றி பேசாது மக்களின் துன்பங்களைக் களைய முற்பட வேண்டும். எமது சமூகத்தை நெறிப்படுத்து வதற்கும் வழிப்படுத்துவதற் கும் பெரியவர்கள் தவறி விடுகிறார்கள். வன்முறை பகைமையை இளம் சமூகத்துக்கு விற்றுக்கொண்டு வருகிறோம்.

சமாதானம் மிக்க சமூகத்தை உருவாக்க அனைவரும் முன்வர வேண்டும். அப்போது தான் நாட்டில் மீண்டும் போர் ஏற்படாமல் தடுக்க முடியும் . அனைத்து மக்களுக்கும் சமமான உரிமையை அரசு வழங்கினால், நல்ல வழியை காட்டினால் உலகத்தில் இலங்கையை போன்ற நல்ல நாடு இருக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# 'ஐ.எஸ்' அமைப்பு குறித்து 'றோ' எச்சரிக்கவில்லை

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையர்கள் இஸ்லாமிய தேசம் எனப்படும் 'ஐ.எஸ்' அமைப்பில் இணைந்து கொண்டமை தொடர்பாக இந்தியப் புலனாய்வுப் பிரிவான 'றோ' எந்த எச்சரிக்கை அறிக்கையையும் வழங்கவில்லை என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் இது குறித்து எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த, பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

"சிரியா, ஈராக்கில் செயற்படும் 'ஐ.எஸ்' அமைப்பில் இலங்கையர்கள் இணைந்து கொண்டமை தொடர்பான எந்த தகவலையும் 'றோ' வழங்கவில்லை.

இருந்தாலும் ஐ.எஸ் அமைப்பின் நடவடிக்கைகள் தொடர்பாக, இலங்கை புலனாய்வு அமைப்புகள் அதிக பட்ச விழிப்பு நிலையில் இருக்கின்றன" என்று தெரிவித்தார்.

இலங்கையைச் சேர்ந்த நன்கு படித்த குடும்பங்களைச் சேர்ந்த 32 பேர், 'ஐ.எஸ்' அமைப்பில் இணைந்து கொண்டுள்ளதாக அண்மையில் இலங்கையின் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தகவல் வெளியிட்டிருந்தார்.

அவரது இந்தக் கருத்துக்கு முஸ்லிம்கள் பலத்த எதிர்ப்பை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)


**சைவ வித்தியா விருத்திச் சங்க கருணை இல்லம்**

**புதிய கட்டட நிர்மாணத்துக்கான கூறுவிலை கோரல்**

பலாலி வீதி உரும்பிராயில் உள்ள எமது சைவ வித்தியா விருத்திச் சங்க கருணை இல்லத்தில் புதிய கட்டட நிர்மாணத்துக்கான கூறுவிலை கோரப்படுகிறது.

எமது பணிமனையில் காலை 9 மணிக்கும் பிற்பகல் 5 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1000/- ஐச் செலுத்தி படிவத்தை பெற்று முத்திரையிடப்பட்ட கூறுவிலையை நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ 16.12.2016 அன்று பிற்பகல் 5 மணிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

தொடர்புகளுக்கு:-021 223 0778

சைவ வித்தியா விருத்திச் சங்க கருணை இல்லம்
பலாலி வீதி ,உரும்பிராய்.

தி.செல்வமனோகரன்
செயலாளர்.

(இ/6523)



அன்பு வாசகர்களே!

உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

நீங்கள் அறிந்த
◆ செய்திகள்
◆ புகைப்படங்கள்
◆ நிகழ்வுகள்
◆ பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல

076 636 3378

Viber



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா:25செவ் 4 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:BSc/ QSகட்டார்<br>தொ.இ: B/6554 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 78<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:HNDA/தனியார் தொழில்<br>தொ.இ: G/6550 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 72செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/Lலண்டன் NOT PR<br>தொ.இ: B/6555 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் செவ் 1 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>தொ.இ: G/6551 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 24செவ் 2 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:O/L இத்தாலி PR<br>தொ.இ: B/6556 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 5'6"<br>தகைமைதொழில்:முகாமைத்துவ பட்டதாரி/ முகாமையாளர<br>தொ.இ G/6552 |
| பிறப்பு 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 30செவ் 7 இல்<br>உயரம். 5'3"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ. B/6558 | பிறப்பு. 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 35 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:HNDE, BA, MA/ ஆசிரியர்<br>தொ.இ: G/6557 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
அலுவலக நேரம் காலை 9.00-5.00 மணிவரை
ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினமாகும்




# தப்பியோடிய படையினருக்கு மீண்டும் பொதுமன்னிப்பு!



முப்படைகளில் இருந்தும் தப்பிச் சென்றவர்கள் மீண்டும் படைகளில் இணையவும் சட்ட ரீதியில் தம்மை நீக்கிக்கொள்ளவும் இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து 31ஆம் திகதி வரையில் பொது மன்னிப்புக்காலம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்பின்னர் பொதுமன்னிப்புக் காலம் வழங்கப்படாது என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பொதுமன்னிப்புக் காலத்தில் அடையாளப்படுத்திக்கொள்ளாத படைவீரர்கள் அதன் பிற்பட்ட காலத்தில் கைதுசெய்யப்படுவதுடன் அவர்களுக்கு இராணுவச் சட்டத்தின் பிரகாரம் தண்டனை வழங்கப்படும் எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி மேற்கண்டவாறு தெரிவித்தார்.(இ-7-10)

# உரிமை கோராத சடலம்

யாழ். போதனா வைத்தியசாலையில் 25.11.2016ஆம் திகதி மாலை 4.40 மணியளவில் பெயர், வயது, முகவரி தெரியாத 45-55 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் யாழ்ப்பாண புகையிரத நிலையத்திலிருந்து புகையிரத பாதுகாப்பு உத்தியோகத்தரால் கொண்டுவரப்பட்டு வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இவரது சடலம் இதுவரை எவரும் உரிமை கோராத நிலையில் காணப்படுகின்றது.

எனவே அச்சடலத்தை உறவினர் / உரித்துடையோர் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 | 90 | 120 | 70 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 95 | 110 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 50 | 80 | 50 | 80 | 50 | 100 | 80 |
| தக்காளி | 50 | 80 | 45 | 80 | 60 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 40 | 60 | 60 | 60 | 60 |
| கோவா | 40 | 80 | 45 | 80 | 60 | 60 | 50 |
| கரட் | 80 | 120 | 90 | 120 | 80 | 160 | 100 |
| பூசணி | 40 | 30 | 30 | 40 | 30 | 60 | 40 |
| புடோல் | 100 | 60 | 40 | 80 | 50 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 35 | 60 | 40 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 120 | 90 | 100 | 120 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 80 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 160 | 200 | 130 | 200 | 140 | 200 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 | 80 | 80 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 60 | 120 | 60 | 60 | 70 | 100 | 60 |
| பயற்றங்காய் | 140 | 140 | 100 | 160 | 100 | 160 | 120 |
| லீக்ஸ் | 100 | 150 | 90 | 120 | 120 | 120 | 80 |
| பீற்றூட் | 60 | 60 | 60 | 60 | 50 | 80 | 60 |
| கறிமிளகாய் | 160 | 150 | 120 | 180 | 120 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 140 | 100 | 90 | 200 | 80 | 100 | 140 |
| போஞ்சி | 200 | 250 | — | 240 | 180 | 240 | 220 |
| கத்தரிதம்பள்ள | 60 | 50 | 70 | 60 | — | 80 | 70 |
| கீரை - 1பிடி | 30 | 50 | 30 | 30 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 350 | 500 | 400 | 450 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 20-30 | 50 | 35 | 25-35 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | 160 | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | — | 50 | 120 | — | 80 | 50 |
| பொன்னாங்காணி | 35 | — | 10 | 30 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 15 | — | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | — | — | 60 | 80 | — | — |

# இருட்டறையில் எனது வாழ்வு

## 25 வருடங்கள் சிறையிலிருக்கும் நளினியின் வலிகளைச் சுமந்த நெடுந்தொடர்..... 01

"ஈழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தமிழகத்தின் பல ஊர்களில் தங்கியிருந்தார்கள். அப்படி போராளிகளுக்கு ஆதரவாக நின்ற இளைஞர் பட்டாளத்தில் என் தம்பி பாக்கியநாதனும் ஒருவன். சென்னையில் பிரபலமாக இருந்த சுபா சுந்தரம் போட்டோ ஸ்ரூடியோவுக்கு பாக்கியநாதன் போய் வருவான்."



### நளினி சொல்லும் ராஜீவ் கொலைக்களம்

"ராஜீவ் கொலை:- மறைக்கப்பட்ட உண்மைகளும் பிரியங்காவின் சந்திப்பும்" என்ற தலைப்பில் நளினி முருகன், தனது எண்ணங்களைப் புத்தகமாக ஆக்கி உள்ளார். பத்திரிகையாளர் பா.ஏகலைவன் இந்தப் புத்தகத்தைத் தொகுத்து எழுதி உள்ளார்.




இது கால் நூற்றாண்டைத் தாண்டி இருட்டறைக்கு உள்ளாக ஒலித்துக் கொண்டிருக்கும் என் மனசாட்சியின் குரல். இப்போது, சிறைக் கொட்டடியைத் தாண்டி உங்களின் இதயத்தைத் தட்டப் போகிறது.

எனக்கான கனவுகளோடு அந்த வசந்தகால நடைபாதையில் எல்லோரையும் போல நானும் இளமையைச் சுமந்து கொண்டு காத்திருந்தேன். திடீரென ஒரு வெடிகுண்டுச் சத்தம், என் கனவுகளை எல்லாம் சிதைத்துவிட்டுப் போகும் என்று நினைத்துக்கூடப் பார்த்ததில்லை.

இப்போது 26 ஆண்டு காலம், நீண்ட நெடிய சிறைவாசத்தை அனுபவித்தபடி நிற்கிறேன். இதில் பாதிக்காலம், 'நாளை என் உடல் தூக்கில் தொங்குமோ', என்ற மிரட்சியில் கழிந்தது. எப்போது விடுதலை கிடைக்கும் என்ற ஏக்கத்தில் என் கணவரையும், குழந்தையையும் பிரிந்த துயரில் கண்ணீரில், கவலையில் என் மீதி வாழ்க்கை கழிந்து கொண்டிருக்கிறது.

### தாஸ் தங்குவதற்கு ஓர் இடம்!

ஈழ விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தமிழகத்தின் பல ஊர்களில் தங்கியிருந்தார்கள். அப்படி போராளிகளுக்கு ஆதரவாக நின்ற இளைஞர் பட்டாளத்தில் என் தம்பி பாக்கியநாதனும் ஒருவன். சென்னையில் பிரபலமாக இருந்த சுபா சுந்தரம் போட்டோ ஸ்ரூடியோவுக்கு பாக்கியநாதன் போய்வருவான்.

அங்குதான் பேரறிவாளன், ஹரிபாபு, முத்துராஜ் உள்ளிட்ட பலரும் புகைப்படக் கலைப் பயிற்சி கற்றுக் கொண்டிருந்தார்கள். அப்படியான நண்பர்கள் பட்டியலில் புதிதாக வந்து சேர்ந்தவர்தான் தாஸ் என்ற முருகன்.

தாஸ் தங்குவதற்கு ஓர் இடம் வேண்டும் என்று தம்பி பாக்கியாவிடம் பேசியிருக்கிறார்கள். 'வேறு வாடகை வீடு பார்த்துக் கொள்ளும் வரை என் வீட்டில் இருந்துகொள்' என்று தாஸை வீட்டுக்கு அழைத்து வந்திருக்கிறான் தம்பி. 1991 பெப்ரவரி 8ஆம் திகதி முருகனை முதன் முதலாக சந்தித்தேன்.

ராயப்பேட்டையில் சபரி காலேஜ், தியாகராய நகரில் விவேகானந்தா காலேஜ் என இரண்டு டுடோரியல் கல்லூரிகளில் சேர்ந்து ஆங்கில வகுப்புக்கு தினமும் காலையிலும் மாலையிலும் தவறாமல் போய் விடுவார்.

வெளிநாடு சென்று வேலை பார்ப்பதற்காக அவரை அவரது அப்பா, ஒரு ஏஜென்ஸியைப் பிடித்து படகு மூலம் தமிழகத்தின் வேதாரண்யத்துக்கு அனுப்பி வைத்து விட்டார்.

அப்படி வேதாரண்யம் வந்த இடத்தில் தான் ஒற்றைக் கண் சிவராசன் வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்பி வைக்கும் ஏஜென்ட்டாக அறிமுகமாகியிருக்கிறார். நாங்கள் இருவரும் சம்பந்தமில்லாமல் நிறையப் பேசிக்கொண்டோம்.

எங்கள் மனதைப் புறக்கணித்துவிட்டு இதயங்கள் இரண்டும் தமக்குள்ளே பேசிக்கொள்ளத் தொடங்கிவிட்டன. 1991 ஏப்ரல் 21ஆம் திகதி திருப்பதி கோயிலுக்குப் புறப்பட்டுச் சென்றோம்.

(வலிகள் தொடரும்...)

# யாழில் கேரளக் கஞ்சா பாவனை அதிகரிப்பு!

## பொலிஸார் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தற்போது கேரளக் கஞ்சா பாவனை அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ள யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன குற்றச்செயல்களை கட்டுப்படுத்த பொலிஸார் நேர்மையான சேவையை வழங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் சிறந்த சேவையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

யாழ்.தலைமைப் பொலிஸ நிலையத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பிரதிப பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரத்ன மற்றும் யாழ்.பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லஸ் கலந்து கொண்டதுடன், பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பரிசில்களை வழங்கி கௌரவித்தனர்.

இந்த நிகழ்வில் திறமைகள் மற்றும் சேவை அடிப்படையில் அவர்களுக்கு பணத் தொகை வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் உரையாற்றிய பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவிக்கையில்,

இந்த கௌரவிப்பு நிகழ்வு கடந்த செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி நடத்தவிருந்தது. ஆனாலும் யாழ்.நகரில் கடநத காலமாக இருந்த சூழல் காரணமாக குறித்த திகதியில் நடத்த முடியாது போனது. ஆனாலும் இன்று (நேற்று) இந்நிகழ்வினை நடத்துவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பொலிஸ்மா அதிபரின் சுற்றுநிருபத்தில் கூறியவாறு மூன்று மாதங்களுக்கொரு முறை உங்களுடைய சேவையின் அடிப்படையில் பரிசில்களை வழங்குமாறு கூறியிருந்தார்.

அவ்வாறு விசேட பரிசில்கள் பெறுவோரை பொலிஸ்மா அதிபர் நேரடியாக கொழும்பில் பொலிஸ் தலைமையகத்திற்கு வரவழைத்து அவரின் கையால் பரிசில்கள் வழங்குவதற்கு ஏற்றவாறு திட்டமிட்டுள்ளார்.

இந்த பரிசளிப்பு நிகழ்வு ஏன் நடத்தப்படுகின்றது என்றால் பொலிஸார் ஆகிய உங்களுடைய சிறந்த சேவையின் அடிப்படையில் தான். இவ்வாறு நிகழ்வில் மட்டுமல்லாது அவரவர் சிறந்த சேவையினை பாராட்டும் வகையில் அவ்வப்போது பரிசில்கள் வழங்கப்படும்.

உயர் பதவியில் இருக்கலாம். கொஸ்தாபலாக இருக்கலாம். உங்களுடன் வேலை செய்யும் சக ஊழியராக இருககலாம். உங்களுக்கு தெரியும் யார் வேலை செய்கிறார்கள்? யார் வேலை செய்யாமல இருக்கிறார்கள் என்று.

அதேபோல் யார் பரிசு பெறுகிறார்கள், யார் பரிசு பெறவில்லையென்று.

நீங்கள் செய்யும் அதியுயர் சேவையின் நிமித்தம் பணப்பரிசில் மட்டுமல்லாது விசேட பரிசில்களும் வழங்கப்படும்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது குற்றச்செயல்களோடு கேரளக் கஞ்சாவின் பாவனையும் அதிகரித்துள்ளது. இவை தவிர அனுமதியின்றி இயங்கும் மதுபான சாலைகளும் தற்போது அதிகரித்துள்ளன.

இவற்றை கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் பொலிஸாருக்கு உண்டு. உங்கள் உறவினர்கள் வெளி மாவட்டங்களில் வசிக்கும் நிலையில் அவர்களுக்கான சிறந்த சேவையை வெளி மாவட்டத்தை சேர்ந்தோரே வழங்குகின்றனர்.

எனவே யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களுக்கு ஊழல் அற்ற சிறந்த சேவையை வழங்க வேண்டிய பொறுப்பு உண்டு. இலஞ்சம் பெற்று கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஒரு போதும் பதவி உயர்வுகளையும் கௌரவிப்புக்களையும் பெறப்போவதில்லை. எனவே நேர்மையான சேவையை மக்களுக்கு வழங்குங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)




# ஆசிரியை உயிரிழப்பு

வீதி விபத்தில் படுகாயமடைந்த ஆசிரியை சிகிச்சை பலனின்றி 3 நாட்களின் பின்னர் யாழ்.போதனா வைததியசாலையில் உயிரிழந்துள்ளார்.

மன்னார் முருங்கன் பகுதியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தாயாரான மகேஸ்வரன் சோதிமலர் (வயது - 55) என்பவரே உயிரிழந்தவராவார்.

மன்னார் மதவாச்சி வீதியில் கடந்த 26 ஆம் திகதி காலை 8 மணியளவில் குறித்த ஆசிரியை மோட்டார் சைக்கிளில் பாடசாலை நோக்கி சென்றுள்ளார். வலப்பக்கத்தில் இருந்து இடது பக்கமாக இவர் திரும்பிய போது மதவாச்சியில் இருந்து வேகமாக வந்த வான் ஒன்று அவரை மோதித்தள்ளி விட்டு சென்றுள்ளது.

குறித்த விபத்தில் படுகாயமடைந்த ஆசிரியை உடனடியாக முருங்கன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மன்னார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

மேலதிக சிகிச்சைக்காக கடந்த 27 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது. இருப்பினும் அவர் கடந்த 28 ஆம் திகதி முற்பகல் 11 மணியளிவில் சிகிச்சை பலனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமாரினால் மரண விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ-9)

# மோட்டார் சைக்கிள்கள் விபத்து இரு இளைஞர்கள் படுகாயம்

(கரணவாய்)

மோட்டார் சைக்கிள்கள் இரண்டு ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர்கள் இருவர் படுகாயங்களுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் பருத்தித்துறை கிராமக்கோட்டு சந்தியில் இடம்பெற்ற இவ்விபத்தில் ஜெ.நிருசன் வயது-24), இ.பாலராம் (வயது-25) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

இரண்டு மோட்டார் சைக்கிள்களும் ஒன்றுடன் ஒன்று மோதிய போதிலும் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே படுகாயமடைந்தனர். (இ-60)

# விபத்தில் இருவர் படுகாயம்

(கரணவாய்)

மோட்டார் சைக்கிள் ஒன்றும் துவிச்சக்கரவண்டி ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் பருத்தித்துறை-யாழ்ப்பாண வீதியில் உள்ள மந்திகை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகாமையில் இடம்பெற்ற இவ் விபத்தில் துவிச்சக்கரவண்டியில் சென்ற அல்வாய் மேற்கைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை வெற்றிவேல் (வயது-63), மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த கரணவாய் கிழக்கைச் சேர்ந்த தேவராசா கபிலன் (வயது-25) ஆகிய இருவரும் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-60)



தேவரையாளி இந்துக் கல்லூரியின் 2016 ஆம் ஆண்டிற்கான பரிசில் தினம் அண்மையில் இடம்பெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண சபை கல்வி அமைச்சர் த.குருகுலராஜா உள்ளிட்ட விருந்தினர்களை பாடசாலை அதிபர் கி.இராசதுரை அழைத்து வருவதையும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று பாடசாலை மட்டத்தில் முதலாமிடத்தினைப் பெற்ற செல்வன் ராதா ஜனுசன் என்ற மாணவனுக்கு பிரதம விருந்தினர் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

# தெல்லிப்பழையில் இன்று விசேட நடமாடும் சேவை

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு யு.என்.டி.பி. நிறுவனத்தின் அனுசரணையுடன் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தினால் நடமாடும் சேவை ஒன்று இன்றைய தினம் காலை 9 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் பிறப்பு, இறப்பு, விவாகச்சான்றிதழ் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் திருத்தங்கள், திருமணப்பதிவுகள், காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவுகள், தேசிய அடையாள அட்டை பெறுதல் போன்ற சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் இதில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்குட்பட்ட சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் வசிக்கும் எவரும் மேற்படி விடயங்கள் தொடர்பான சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# அடையாளம் காணல்

(கரணவாய்)

கல்லுண்டாய் வெளியில் வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்த நபர் அடையாளங்காணப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் தாமரைக்குளத்தடி, துன்னாலையைச் சேர்ந்த நடராசா சந்திரதாசன் என அடையாளங் காணப்பட்டுள்ளார்.

கடந்த 15 ஆம் திகதி வீட்டில் தகராறில் ஈடுபட்டுவிட்டு வெளியேறியவர் வீடுதிரும்பாததையடுத்து 22 ஆம் திகதி அவரைக் காணவில்லை என நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந் நிலையில் வெட்டுக் காயங்களுடன் வைத்தியசாலையில் உயிரிழந்த நபரை அடையாளம் காணுமாறு மானிப்பாய் பொலிஸாரால் வெளியிடப்பட்ட தகவலின் அடிப்படையிலேயே அவர் அடையாளம் காணப்பட்டார். (இ-60)

# கிராம முன்னேற்றம் குறித்து கலந்துரையாடல்

(கரவெட்டி)

துன்னாலை தக்கு சம்பாதி பிரதேசத்தினைச் சேர்ந்த இளைஞர்கள் வடக்குமாகாண சபை உறுப்பினரைச் சந்தித்து தமது கிராம முன்னேற்றம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

மேற்படி பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் குழு ஒன்று கடந்து ஞாயிற்றுக் கிழமை வடமாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகத்தினை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடலை மேற்கொண்டிருந்தது.

இதில் அப் பகுதிக்கு ஒரு சனசமூக நிலையமோ விளையாட்டு மைதானமோ இல்லை எனவும், இது சம்பந்தமாக கரவெட்டி பிரதேச சபையோ அல்லது பிரதேச செயலகமோ கவனிப்பாரின்றி இருப்பதாகவும் இக் கலந்துரையாடலில் தெரிவித்தனர். (இ-60)

# இரத்ததானம் வழங்கல்




இலங்கை சமிக்ஞைப்பிரிவு இராணுவத்தின் 6 ஆவது படையணியால் இரத்ததான நிகழ்வு ஒன்று யாழ். நகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 35 இற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர். (இ-9)

# 2030 இற்குள் எயிட்ஸ் நோய்க்கு முற்றுப்புள்ளி இடுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம்!

இலங்கையில் எயிட்ஸ் நோய்க்கு இலக்கானவர்களின் எண்ணிக்கை 2,502 ஆக உயர்ந்துள்ளது. எயிட்ஸ் நோய்க்கு இலக்கானவர்கள் 15 வயது முதல் 25 வயது வரையுள்ள பிரிவைச் சேர்ந்தவர்களே அதிகளவில் இலக்காவதாக பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் நோய் தேசிய ஒழிப்புத் திட்டத்தின் பணிப்பாளரான டாக்டர் சிசிர லியனகே மூலம் தகவல் அறியப்படுகிறது. இலங்கையில் எயிட்ஸ் நோயாளர்கள் 4,100 ஆக இருக்கலாம் என எயிட்ஸ் சம்பந்தமான ஒரு கருத்தரங்கில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால குறிப்பிட்டுள்ளார். எயிட்ஸ் நோயானது உலகில் வருடா வருடம் 6 சதவீதம் குறைவடைந்து வருகிறது. ஆனால் இலங்கையில 2010 ஆம் ஆண்டு தரவுகளை 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் 94 சதவீதம் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதாக டாக்டர் நிரோஷா திஸநாயக்க ஒரு கருத்தரங்கில் கூறியுள்ளார். மேலும் இலங்கையின் இந்த வருடத்தின் கடந்த பத்து மாதங்களில் மட்டும் 34 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் 405 புதிய எயிட்ஸ் நோயாளிகள் உருவாகியுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும், இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 9 இலட்சத்திற்கும மேலானவர்கள் எயிட்ஸ் தொடர்பான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் அதிகமானோர் தாய்மார்கள் எனவும் பாலியல் நோய்கள் மற்றும் எயிட்ஸ் நோய் தேசிய ஒழிப்பு திட்டத்தின் பணிப்பாளர் மேலும் சுட்டிக்காட்டுகிறார்.

எயிட்ஸ் நோய் உலகிற்கு ஓர் அச்சுறுத்தல். இந் நோயானது வெகுவிரைவில் மரணத்தை சம்பவிக்கக்கூடியது. இந் நோய் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதன் மூலமே முற்காப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லலாம் என உணரப்பட்டு, எயிட்ஸ் பற்றிய உலக மகாநாடு 1994 டிசெம்பர் முதலாம் திகதி பாரிஸில் நடைபெற்றது. இத்தினமே எயிட்ஸ் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

"2030' ஆம் ஆண்டில் எயிட்ஸ் நோயை பூச்சிய நிலைக்கு கொண்டு வருதல்" எனும் தொனிப்பொருளில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலக்கு ஊடகவியலாளர்களுக்கு அறிவூட்டும் விசேட கருத்தரங்கு கொழும்பு, ரமடா ஹோட்டலில் எயிட்ஸ் கட்டுப்பாட்டுத்திட்டத்தின் பணிப்பாளர் சிசிர லியனகே தலைமையில அண்மையில் நடைபெற்றது.

உலக சுகாதார அமைப்பினால் எயிட்ஸ் நோய் உலக பரவு நோயாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது தேடிப்பெற்ற நிர்ப்பீடனக குறைபாடு நோய்த்தொகுதி என்பதாகும். HIV என்னும் வைரஸ் மூலமே இந்நோய் உருவாகிறது. எச்.ஐ.வி. வைரஸ் உடலினுள் புகுந்து வெண்குருதிக் கலங்களைத் தாக்கி நோய் எதிர்ப்பு சக்தியைப் பலவீனப்படுத்துகிறது. இதனால் எயிட்ஸ் பீடிக்கப்பட்ட ஒருவர் விரைவில் மரணத்தைத் தழுவுகிறார்.

எச்.ஐ.வி. வைரஸ் 3 வழிகளில் ஒருவருக்குக் கடத்தப்படலாம. அவையாவன 1. நோயுறறவர்களுடன் பாதுகாப்பற்ற முறையில் உடலுறவு கொள்ளுதல், 2. நோயாளரின் குருதியை மற்றையவருக்கு மாற்றுவதன் மூலம் அல்லது நோயாளி பாவித்த ஊசியை வேறொருவருக்கு பயன்படுத்துவதன் மூலம், 3. நோயுள்ள தாய் தன் கருவிலுள்ள குழந்தைக்குக் கடத்தல். இந்நோயின் பாதிப்பிலிருந்து சிறுவரைப் பாதுகாக்க பாலியல் கல்வி மூலம் அறிவு வழங்கப்டுகிறது. அதேவேளை பெற்றோருக்கும் இது பற்றிய விழிப்புணர்வு அவசியம்.

இலங்கையில் முதலாவது எய்ட்ஸ் நோயாளி 1987 ஆம் ஆண்டு தொழில் நிமித்தம் நைஜீரியா சென்று நாடு திரும்பிய பேருவளை வாசி ஒருவரை இனம் காணப்பட்டதை அடுத்து இலங்கை தம்மை உசார்படுத்திக் கொண்டது. அன்று தொடக்கம் 31.10.1997 வரை 76 பேர் எயிட்ஸ் நோய்க்கு இலக்காகி 61 பேர் இறந்தனர். இவர்களில் ஆண்கள் 46 பேர, பெண்கள் 15 பேர் ஆகும். 2012 ஆம் ஆண்டில் இலங்கையில் எயிட்ஸ் தொற்றினால் 1597 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 22 பேர் மரணமடைந்துள்ளதாகவும் தேசிய பாலியல் நோய் எயிட்ஸ தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

2010 இன் புள்ளிவிபர முடிவுகள் படி உலக சனத்தொகையில் கிட்டத்தட்ட 3 கோடி 40 இலட்சம் மக்களுக்கு மேல் எச். ஐ. வி. தொற்றுடன் வாழ்ந்து வருகின்றார்கள். உலகத்தில் தென் ஆபிரிக்காவே அதிகளவில் எச்.ஐ.வி. நோயாளிகளைக் கொண்டிருக்கின்றது. இதைத் தொடர்ந்து நைஜீரியாவும் இந்தியாவும் உள்ளன. எச்.ஐ.வி எயிட்ஸ் உடன் வாழ்வோரைக கொண்ட 162 நாடுகளில் இலங்கை 129 ஆவது இடத்தில் உள்ளது. எச்.ஐ.வி. தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளவோ அல்லது முழுமையாக மீள்வதற்கோ இன்னமும் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப் படவில்லை என்ற போதும், உயிரியல் விஞ்ஞானிகள் அதற்கான தீர்வை நோக்கி வேகமாக பயணித்து வருகிறார்கள். எச்.ஐ.வியை எதிர்க்கும் திறன் கொண்ட நோய் எதிர்ப்பாற்றல் குருதியணுக்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பிரபல நோபல பரிசு பெற்ற மருத்துவவியலாளர் டேவிட் பல்டிமோர், தமது பரிசோதனைகளை எலிகளில் நிகழ்த்திய போது அனுகூலங்களான முடிவுகள் பெறப்பட்டதாக கூறுகிறார்.

பாலியல் தொழிலாலும் ஓரினச் சேர்க்கையாலும் இலங்கையில் எயிட்ஸ் நோய் பரவுகின்றன. கடந்த காலங்களை விட இந்த வருடம் 15,16,17 வயது மாணவர்கள் அதிகளவில் விபச்சாரத்தில் ஈடுபட்டதாக தகவல் தெரிவிக்கிறது. எதிர்காலங்களில் மாணவர்கள் மத்தியில் அதிகளவு எயிட்ஸ் நோயாளிகள் உருவாகும் அபாயம் தோன்றியுள்ளது எனவும் அதிர்ச்சியான தகவல்கள் தெரிவிக்கின்றன. எனவே பெற்றோர்கள் இது விடயத்தில் கூடிய கவனம் எடுக்குமாறு வேண்டப்படுகின்றனர். சிறுவர்கள் ஆபாசப் படங்களைப் பார்ப்பதனால்தான் விபச்சாரத்திற்கு தள்ளப்படுகின்றனர். பெற்றோர்களும் ஆசிரியர்களும் மதவழிபாட்டு போதகர்களும் ஆபாசப் படங்களைப் பார்ப்பதிலிருந்து மாணவர்களைப் பாதுகாப்பதற்கான புத்திமதிகளை எடுத்துக் கூறி மாணவர் சமுதாயத்தை பாதுகாக்க முன்வர வேண்டும்.

விபச்சார தரகர்கள் சூசகமான முறையில் ஹோட்டல், லொட்ஜ், அதைத்தாண்டி புதிய முறையில் மாணவர்களை பாலியல் வாடிக்கையாளர்களாக ஆக்குகின்றனர். வாகன தரிப்பிடங்களில் விபச்சாரத்திற்கென்றே கறுப்புக் கண்ணாடி வாகனங்களில் ஒன்று அல்லது இரண்டு பெண் பாலியல் தொழிலாளர்களை வைத்து பொலிஸ வலையில் சிக்காமல் சூசகமான முறையில் விபச்சார தொழிலை மேற்கொள்கின்றனர். வாகனங்களில் விபச்சாரத்தில் ஈடுபடுவது அதிகமாக மாணவர்கள் என அறியப்படுகிறது. எனவே, வாகனத் தரிப்பிடங்களில் பொலிஸ் திணைக்களம் கூடிய தேடுதல் நடத்த வேண்டும்.

பாலியல் உறவை திருமண வாழ்க்கைக்குள் மாத்திரம் வரையறுத்து எயிட்ஸ் நோயிலிருந்து பாதுகாப்பு பெறுவோம். பாலியல் தொழிலைக் கட்டுப்படுத்துவதன் மூலம் எயிட்ஸ் நோய் இல்லாத மனித சமுதாயத்தை உருவாக்கலாம்.

**அல்ஹாஜ் எம்.எப். எம்.இக்பால் (ஜே.பி)**
**யாழ்ப்பாணம்.**

# தமிழ் சினிமா வரலாறு

## லலிதாவுக்கு திருமணம்

## மணமகன் - வக்கீல் சிவசங்கரன் (23.01.1957)

312

••ஐந்து நிமிடத்தில் மணமகள் லலிதாவும் மேடைக்கு அழைத்து வரப்பட்டார். அவர் கையில் ஒரு ரோஜா மாலை கொடுக்கப்பட்டது. அதை வாங்கிக் கொண்ட லலிதா மேடை அருகே அமர்ந்திருந்த மணமகனின் தகப்பனாரை வணங்கி ஆசி பெற்றார். பிறகு மண மேடையை மூன்று முறை சுற்றி வந்து மணமகன் கழுத்தில் மாலை அணிவித்தார்.

மணமகனும் லலிதாவுக்கு மாலை அணிவித்தார். பிறகு மணமக்கள் மோதிரம் மாற்றிக்கொண்டனர்.

ஒரு தட்டில் சிவப்பு நிற பட்டுப்புடைவை, ரவிக்கைத் துண்டு ஆகியவற்றை வைத்து லலிதாவிடம் மாப்பிள்ளை கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்ட லலிதா மற்றொரு மாலையை மாப்பிள்ளை கழுத்தில் போட்டார். உடனே மாப்பிள்ளை தங்கக் காசு மாலை ஒன்றை லலிதாவின் கழுத்தில் அணிவித்தார்.

கூடியிருந்தவர்கள் மணமக்கள் மீது பூக்களை தூவி வாழ்த்தினார்கள். இத்துடன் திருமணச்சடங்குகள் நிறைவடைந்தன.

### கவர்னர்

கவர்னர் ஜான், அமைச்சர் பக்தவச்சலம், ஐகோர்ட்டுக்கு தலைமை நீதிபதி ராஜமன்னார், நீதிபதி ஏ.எஸ். பி.அய்யர், சி.பி.ராமசாமி அய்யர், மேல்சபைத் தலைவர் வைத்தியர் செரியன் ஆகியோர் திருமணத்துக்கு நேரில் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினார்கள்.

ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் பிரதமர் நேரு, இந்தியாவின் பழைய கவர்னர் ஜெனரல் மவுண்ட் பேட்டன் பிரபு, முதலமைச்சர் காமராஜர் ஆகியோர் வாழ்த்துச் செய்தி அனுப்பி இருந்தார்கள்.

### எம்.ஜி.ஆர்., சிவாஜி வாழ்த்து

எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன், கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், என்.டி. ராமராவ், ஏ.நாகேஸ்வரராவ், சகஸ்ரநாமம், கே.ஏ.தங்கவேலு, நடிகைகள் பானுமதி, அஞ்சலி தேவி, சாவித்திரி, குமாரி கமலா, பிரபல இந்தி நடிகர் ராஜ்கபூர் உட்பட நடிகர், நடிகைகள் பெருந்திரளாக வந்திருந்து மணமக்களை வாழ்த்தினார்கள்.

அப்போது நடிகர் சங்கத்தலைவராக எம்.ஜி.ஆர். இருந்தார். அவர் நடிகர் சங்கத்தின் சார்பில் லலிதாவுக்கு வாழ்த்துப் பத்திரம் வாசித்தளித்தார்.



லலிதா – சிவசங்கரன் திருமண வரவேற்பின்போது, மணமக்களை வாழ்த்துகிறார், ஜெமினி எஸ்.எஸ்.வாசன்.

### பரிசுகள்

லலிதாவுக்கு ஏராளமான பரிசுகள் குவிந்தன.

வெள்ளியினால் செய்யப்பட்ட தொட்டில் ஒன்றை ஒரு உறவுப்பெண் வழங்கினார். அதை வெட்கத்துடன் லலிதா பெற்றுக்கொண்டார்.

திருமணம் முடிந்ததும் லலிதாவை நடிகைகள் சூழ்ந்து கொண்டு வேடிக்கையாகப் பேசியும் கிண்டல் செய்தும் கல்கலப்பு உண்டாக்கினார்கள்.

என்னம்மா! மூக்கணாங்கயிறு போட்டாச்சா? என்று பானுமதி கூற மற்ற நடிகைகள் கலகல என்று சிரித்தார்கள்.

மூக்கணாங்கயிறு போடவில்லை. தங்கக்காசு மலையால் கட்டிப்போட்டு விட்டார்கள் என்று டி. ஏ.மதுரம் கூற மீண்டும் சிரிப்பு.

### பாட்டுக்கச்சேரி

திருமணத்தையொட்டி அன்று மாலை எம்.எல் வசந்தகுமாரியின் பாட்டுக் கச்சேரி நடந்தது.

திருவாங்கூர் ஆஸ்தான வித்துவான் பி.எஸ். வீருசாமி பிள்ளையின் நாதஸ்வரக் கச்சேரி, ஏ.கே.சி. நடராஜனின் கிளாரினெட் இசை நிகழ்ச்சி ஆகியவையும் இடம்பெற்றன.

### செந்தாமரை

திருமணம் நிச்சயமான போது செந்தாமரை என்ற படத்தில் சிவாஜி பத்மினியுடன் லலிதாவும் நடித்துக் கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)

உனக்கும் பேபே... உன் அப்பனுக்கும் பேபே...
– யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அரசியல் தீர்வு விடயத்தில் தமிழனை தமிழன் ஏமாற்றும் வரலாறு நடக்கும்

2016ஆம் ஆண்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்து விடும் என்று அறுதியிட்டுக் கூறிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் இப்போது 2017ஆம் ஆண்டில் அரசியலமைப்புச் சீர்திருத்தம் வந்துவிடும் எனத் தாம் நம்புவதாகக் கூறியுள்ளார்.

2016ஆம் ஆண்டின் இறுதிக்குள் எல்லாம் நடந்துவிடும் என்று கூறியவர் இப்போது 2017ஆம் ஆண்டுக்குள் தீர்ந்துவிடுமென நம்புவதாகக் கூறியுள்ளார்.

2016 டிசம்பர் முதலாந் திகதி இன்று ஆரம்பமாகின்ற வேளையில் டிசம்பர் 31ஆம் திகதிக்குள் இனப்பிரச்சினை தீர்ந்துவிடும் என்ற உத்தரவாதத்தில் இருந்து முன்பிணை எடுத்துக் கொள்வதற்கான ஒரு நடவடிக்கையாக இதைக் கருதிக் கொள்ள முடியும்.

பரவாயில்லை, 2016 டிசம்பருக்குள் தீர்வு கிடைத்துவிடும் என்று கூறப்பட்ட உத்தரவாதம் ஏதோ நடந்தேறவில்லை. அதனால் 2017இல் நம்பிக்கை கொள்வதில் தவறில்லை என்று நியாயப்படுத்தலாம்.

அந்த நியாயப்படுத்தல் ஏற்புடையதுதான். எனினும் தேர்தல் பிரசாரத்தின் போது 2016 டிசம்பர் 31இற்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வு கிடைத்து விடும் என்று இரா. சம்பந்தர் கூறியதுதான் தவறு.

இத்தகைய உத்தரவாதங்களை தேர்தல் காலங்களில் கூறி அது நடைபெறாமல் போகும்போது மக்களை நம்பவைத்து ஏமாற்றியதாக நிலைமை முடியும்.

ஆக, 2016 டிசம்பர் 31இற்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிடும் என நம்புகிறேன் என ஒரு அனுமானிப்பை கூறியிருந்தால் அது சாத்தியப்படாத போது அதனை மாற்றி 2017இல் தீர்வு கிடைக்குமென்றோ அல்லது அடுத்த தீபாவளிக்குள் தீர்வு சாத்தியமாகுமென்றோ சொல்லித் தப்பித்துக் கொள்ளலாம்.

மாறாக நம்புங்கள் 2016 டிசம்பர் 31இற்குள் தீர்வு கிடைத்துவிடும் என்று அறுதியிட்டுக் கூறியதுதான் சிக்கலை ஏற்படுத்தியது.

சரி இதை ஒருபுறம் ஒதுக்கி வைத்துக் கொண்டால் புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் மூலம் தமிழ் மக்களுக்கு கிடைக்கக்கூடிய தீர்வு எப்படியாக இருக்கும். இந்தத் தீர்வு தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுமா என்ற கேள்விகள் எழுவது நியாயமானதே.

ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்பதற்குத் தமிழ்த் தலைவர்களும் இணங்கியுள்ளனர் என்ற சந்தேகங்கள் தமிழ் மக்களிடம் வலுவடைந்து வருகிறது.

சமஷ்டி என்ற தமிழ் மக்களின் கோரிக்கைக்கும் ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்ற இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டுக்கும் இடையில் தாறதைத் தந்து விடு. தமிழ் மக்களைச் சமாளிப்பது எங்கள் பொறுப்பு என்பது போல தமிழ் அரசியல் தலைமை நடந்து கொள்வது தெரிகிறது.

எனவே, அரசியலமைப்புச் சீர்திருத்தம் என்பது புதிய சொற்களைத் தாங்கி புது உருவம் எடுத்து தமிழ் மக்களுக்கான தீர்வு இதுதான் இதற்குள் எல்லா உரிமைகளும் இருப்பதாகக் கதை முடிக்கப்படும்.

இதில் வேடிக்கை என்னவெனில் முன்பெல்லாம் சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் அரசியல் தலைமைகளை ஏமாற்றினர்.

ஆனால், இப்போது சிங்கள ஆட்சியாளர்களுடன் தமிழ்த் தலைமை இணைந்து கொண்டு தமிழ் மக்களை ஏமாற்றப் போகிறது என்பதுதான் உண்மை.

ஒட்டுமொத்தத்தில் தமிழ் மக்களை தமிழ் அரசியல் தலைமை ஏமாற்றியது என்ற புதியதோர் வரலாறு பிறக்கப் போகிறது. இந்தப் பிறப்பு புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் வருகை ஊடாக நடந்தேறும்.

என்ன செய்வது! தமிழ் மக்களின் தலைவிதி இதுவென்றாகினால் என்ன செய்ய முடியும்? நடப்பதைக் கண்டு கொள்வோம்.

# சமஷ்டிக்கு இங்கு இடமில்லை ஒற்றையாட்சிக்கே முன்னுரிமை

### இலங்கை அரசு திட்டவட்டம்

புதிய அரசியலமைப்பில் சமஷ்டிக்கு இடமில்லை. ஒற்றையாட்சிக்கே முன்னுரிமை கொடுக்கப்படும் என்று இலங்கை அமைச்சரும், நாடாளுமன்ற சபை முதல்வருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இது குறித்துக் கருத்து வெளியிட்ட அவர்,

சமஷ்டி குறித்து சிலர் பொய்யான பயத்தை நாட்டில் ஏற்படுத்தி இனவாத, மதவாத, அரசியல் நடத்த முனைகின்றனர். இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அடிப்படைவாதத்திலிருந்து விடுபட்டு, தமிழ்த் தரப்பினர் புதிய அரசியலமைப்பு தொடர்பில் நடுநிலையாக செயற்பட இணைந்துள்ளமை வரவேற்புக்குரியது.

புதிய அரசியலமைப்பில் சமஷ்டிக்கு இடமில்லை. ஒற்றையாட்சிக்கே முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

1987 இல் மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட போது, நாடு பிரியும், வடக்கு கிழக்கு இந்தியாவின் மாநிலங்களாக மாறும், இங்குள்ளவர்கள் வடக்கு, கிழக்கு செல்வதற்கு நுழைவிசைவு எடுக்க நேரிடும் என அச்சுறுத்தினார்கள்.

அதனை மீறி மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. எனினும் எதுவுமே இன்றுவரை நடக்கவில்லை.

ஐ.தே.க , ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. மற்றும் கூட்டு எதிரணி என்று அனைவரது கருத்துக்களும் பெறப்பட்டே அரசியலமைப்பு உருவாக்கப்படவுள்ளது. எனவே பொய்யான அச்சம் தேவையில்லை. இனவாதத்தையும் மதவாதத்தையும் பரப்பி நாட்டைத்தீவைத்துக்கொளுத்தக் கூடாது. இதில் அரசியல் குளிர் காயக்கூடாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# வெளிநாட்டில் தொழில்புரிபவர்களுக்கு ஜனவரிமாதம் முதல் ஓய்வூதியத்திட்டம்

வெளிநாட்டில் தொழில் புரிபவர்களுக்கு ஜனவரி முதல் ஓய்வூதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார். அத்துடன் பயிற்றப்பட்டவர்களை வெளிநாட்டு தொழிலுக்கும் அனுப்பும் வேலைத்திட்டத்தையும் ஆரம்பிக்கவிருக்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சினால் அடுத்த ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தும் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. இதில்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வெளிநாட்டில் தொழில் புரிபவர்களுக்கு ஓய்வூதிய திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி தேர்தலின்போது தெரிவித்திருந்தார். அதனடிப்படையில் எதிர்வரும் ஜனவரி முதல் ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத்த திட்டமிட்டுள்ளோம். பங்களிப்பு முறையிலான இந்த ஓய்வூதிய திட்டத்தில் ஊழியர்களிடம் இருந்து 2வருடங்களுக்கு 50ஆயிரம் ரூபா பங்களிப்பாக பெற்றுக் கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## பட்டதாரி ஆசிரியர்கள் 269 பேருக்கு நியமனம்

தொழில்நுட்பம் மற்றும் கல்விமாணி பட்டம்பெற்ற நாடகமும் அரங்கியல் பட்டதாரி ஆசிரியர்கள் 269 பேருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று கல்வி அமைச்சில் நடைபெற்றது.

இவர்களில் 29 தமிழ் மொழி மூலமான ஆசிரியர்களும் 240 சிங்கள மொழி மூலமான ஆசிரியர்களும் அடங்குகின்றனர்.

இந்த ஆசிரியர்களில் மாகாண பாடசாலைகளுக்கு 137 பேரும தேசிய பாடசாலைகளுக்கு 132 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்விற்கு விருந்தினர்களாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் உட்பட அமைச்சின் செயலாளர்கள், அதிகாரிகள், நியமனம் பெறும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (இ-7-10)

## சந்திப்பால் சர்ச்சை

இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன், லோறனட் நடத்திய பேச்சுவார்த்தை, அந்த நாட்டில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பெல்ஜியம் நாட்டின் நடைமுறைகளைப் பின்பற்றாமல் இந்தச் சந்திப்பு இடம் பெற்றதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

கடந்த மாதம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெலஜியத்துக்கு மேற் கொண்ட பயணத்தின் போதே, அந்த நாட்டின் இளவரசர் லோறன்டை சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக பெல்ஜியம் நாட்டின் வெளிவிவகார அமைச்சுக்கு முன்கூட்டியே தகவல் தெரிவிக்கப்படவில்லை.

சந்திப்பு நடந்த பின்னரே, பெல்ஜியம் வெளிவிவகார அமைச்சுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இது அந்த நாட்டின் சட்டதிட்டங்களை மீறிய செயல் என்று சர்ச்சைகள் எழுந்துள்ளன. (இ-7-10)

## சிசுதிரிய புலமைப்பரிசில் வழங்குதலும் உத்தியோகத்தர்கள் கௌரவிப்பும் நாளை

கரவெட்டி பிரதேச செயலக வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் நடத்தும் சிசுதிரிய புலமைப் பரிசில் வழங்குதலும் உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு நிகழ்வும் நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணியளவில் மூத்த விநாயகர் திருமண மண்டபத்தில் நடைபெறும்.

கரவெட்டி பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்வி அலுவலக வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், யாழ். மாவட்ட செயலக வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் க.மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

## குடிநீர் விநியோகத்திற்கு வடக்கு சபையால் நிதியுதவி

அல்வாய் மற்றும் அல்வாய் வடக்கு ஆகிய இரண்டு பகுதிகளுக்கான குடிநீர் விநியோகத்திற்கு வடமாகாண சபையால் 5 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் உள்ள மக்கள் குடிநீரினைப் பெறுவதற்கு பல கிலோ மீற்றர்கள் தூரம் நடந்து செல்லவேண்டிய நிலை காணப்படுவதாக வடமாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகனின் கவனத்திற்கு அப்பகுதி மக்கள் கொண்டு வந்தனர்.

இதனையடுத்து வடமாகாண சபையின் நிதியிலிருந்து இரு பகுதிகளுக்கும் தலா 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் நிதியொதுக்கீடு செய்யப்பட்டு குடிநீர் விநியோகத்திற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ-60)

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
JSAC
யாழ்.சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
16
ஆணோ, பெண்ணோ அவர்களை ஆரோக்கியமாக பெற்றெடுப்பவள் பெண். அவளின் ஆரோக்கியம் குடும்பத்தினை மட்டுமல்ல சமூகத்தினையும் வலுவூட்டும்.

## சத்திய தரிசனம்



### மறந்தும் கேடு செய்யாதீர்கள்

❖ பிறரை ஏமாற்றி பொருள் சேர்ப்பதற்காக மட்டுமே அறிவைப் பயன்படுத்தக் கூடாது. நமக்கெல்லாம் மேலான தெய்வம் என்று ஒன்று உலகில் இருக்கிறது என்றுணரவே. அது நமக்குப் பயன்பட வேண்டும்.

❖ தலையில் நீர்க்குடத்தை வைத்திருக்கும் பெண் வேடிக்கையாக பேசிக் கொண் டே வந்தாலும் பானை மீது கவனம் கொண்டு பாதையில் நடந்து வருவாள். அதைப் போலவே, நாமும் உலக நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுக் கொண்டு வந்தாலும் ஆன்மீக விடயத்தில் நம் கவனத்தை பதித்திட வேண்டும். மனிதன் மறந்தும் பிறருக்கு கேடு செய்யக்கூடாது. அடுத்தவர்களுக்கு தீங்கு நினைப்பவன் தனக்கே தீங்கினைத் தேடிக் கொண்டவன் ஆவான். நாய் நன்றியுள்ள பிராணி. நாயைத் தடியால் அடித்தால் அது கடிக்கத் தானே செய்யும். ஆனால், அன்போடு அரவணைத்து, உணவிட்டால் உன்னைச் சுற்றி வரும். பாதுகாப்பாக வீட்டைக் காக்கும்.

❖ சாம்பார் தயாரிக்க காய், பருப்பு, புளி, மிளகாய் என எல்லாம் இருக்கலாம். ஆனால் சமைக்கும் பாத்திரம் சுத்தமில்லாமல் இருந்தால் சாம்பார் கெட்டுவிடும். அது போல், ஜபம், பூஜை, பஜன் என்று எல்லாம் இருந்தும் மனம் தீய சிந்தையுடன் இருந்தால் ஒரு நன்மையும் இல்லை. உலகிலுள்ள அனைத்துப் பொருள்களும் ஏதோ ஒரு பயன்பாட்டுக்காகவே இருக்கின்றன. பயனற்ற பொருள் என்று ஒன்றை கடவுள் படைப்பதில்லை.

கிளிநொச்சி

# பிறிமியர் லீக் கிரிக்கெட்போட்டி மத்திய தீர அணி சம்பியன்

வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட கிளிநொச்சி பிறிமியர்லீக் போட்டியில் கிளி நொச்சி மத்திய தீர அணி சம்பியனாகியது.

கிளிநொச்சி மாவட்டத்தில் முதல்முறையாக கிளிநொச்சி பிறிமியர்லீக் K.P.L.) இருபது-20 கடினப்பந்து சுற்றுப் போட்டி நடத்தப்பட்டது.













இப்போட்டியில் வடமாகாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 12 அணிகள் கலந்து கொண்டன. இதன் இறுதிப் போட்டி கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் கிளிநொச்சி புதிய பாரதி அணியை எதிர்த்து கிளிநொச்சி மத்திய தீர அணி மோதியது.

புதிய பாரதி அணியினர் நணைய சுழற்சியில் வெற்றி கொண்டு முதலில் துடுப்பாட்டத்தை மேற்கொண்டது. அவ்வணி 16 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக் களையும் இழந்து 112 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மத்திய தீர அணி 17.5 ஓவரில் 8 விக்கெடடுக்களை இழந்து 116 ஓட்டங்களை பெற்று 2 விக்கெட்டுக்களினால் வெற்றியை தனதாக்கிக்கொண்டது.

போட்டியின் தொடர் ஆட்டநாயகனாக கிளிநொச்சி புதிய பாரதி அணியின் மதுசன் தெரிவு செய்யப்பட்டார் . இவர் K.P.L. தொடரில் 129 ஓட்டங்கள் மற்றும் 10 விக்கெட்டுக்களையும் வீழ்த்தியுள்ளார். சிறந்த பந்து வீச்சாளராக கிளிநொச்சி மத்திய தீர அணியை சேர்ந்த அஜித் K.P.L. தொடரில் பதினொரு விக்கெட்டுக்களை வீழ்த்தியமைக்காக தெரிவு செய்யப்பட்டார்.

சாதனைகளை படைத்துள்ளவர்களுக்கு காவேரிகலா மன்றத்தின் பணிப்பாளர் வணபிதா ஜேசுவா மற்றும் கிளிநொச்சி மாவட்ட மலேரியா தடுப்பு பிரிவின் வைத்தியர் ஜெயராசா ஆகியோர் சாதனையாளர்களுக்கும் வெறறியீட்டிய அணிக்கும் வெற்றிக் கிண்ணங்களை வழங்கி வைத்தார்கள். (க-312)





## பருத்தித்துறை ஐக்கிய வி.கழகம் நடத்தும் மின்னொளியிலான கபடிச் சுற்றுப்போட்டி







வடமராட்சி கபடி சங்கத்தின் அனுமதியுடன்! பருத்தித்துறை நகர அபிவிருத்தி சங்கம் சுவிஸ் அனுசரணையில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் திக்கமுனை மைதானத்தில் மின்னொளியில் லீக் முறையில் நடத்தும் கபடிச் சுற்றுப் போட்டித் தொடர் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டியில் "A" பிரிவில் ஐந்து கழகங்களும் "B" பிரிவில் ஐந்து கழகங்களும் போட்டியிடுகின்றன.

28.11.2016 அன்று இரவு 8மணிக்கு ஆரம்பமாகிய போட்டியில் கபடியில் வடக்கின் வல்லவர்கள் என்னும் பெயரை தமதாக்கி கொண்டுள்ள பருத்தித்துறை-முனை சென். தோமஸ் "A" அணி, பருத்தித்துறை ஐக்கியம் "B" அணியை எதிர்த்து களம் புகுந்தது. மிக இலகுவாகவே வெற்றி பெற்று விடுவோம் என்று களம் புகுந்த சென். தோமஸ் "A" அணிமைதானத்தில் எதிரணியிடம் பலத்த சவாலையெதிர்கொள்ள நேர்ந்தது.

இதனால் விறுவிறுப்புக்கு பஞ்சமே இல்லாது ஆரம்பித்த போட்டி இறுதி வரை விறுவிறுப்பாகவே சென்றது. போட்டியில் எதிரணியினரின் வியூகங்களை நன்கு ஆராய்ந்து அதற்கு ஏற்றால் போல் தமது நுட்பங்களை மாற்றி கொண்டு சென். தோமஸ் "A" அணியினர் போனஸ்முறையில் புள்ளிகளை பெறுவதில் தமது கவனங்களை செலுத்தத் தொடங்கினர். இதனால் முதற்பாதி ஆட்டத்தை சென். தோமஸ் "A" அணி 27:11 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் முன்னிலையுடன் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் முனை சென். தோமஸ் "A" அணி தங்கள் விளையாட்டு வியூகங்களை மாற்றி அமைத்துக் கொண்டே மைதானத்தில் கால்பதித்தது. தாங்குதல்-தற்காப்பு போனஸ் புள்ளிகள் பெறுதல் என்னும் மும்முனை நுட்பங்களையும் ஒரே நேரத்தில் முனை சென். தோமஸ் 'A' பிரையோகிக்க நிலை குலைந்த ஐக்கியம் 'B' அணி நிதானமடைவதற்கு போட்டியின் நிலைமைகள் இடம்கொடுக்கவே இல்லை என்று தான் செல்லவேண்டும். இறுதியாக போட்டி முடிவுக்கு வரும்போது சென். தோமஸ் "A" அணி 60:27 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இத்தொடரில் தொடர்ந்து தான் விளையாடிய நான்கு போட்டிகளிலும் வெற்றிபெற்றதனால் 16 புள்ளிகளுடன் "A" பிரிவில் பருத்தித்துறை-முனை சென். தோமஸ் "A" அணி முன்னிலை வகித்துக் கொண்டிருக்கிறது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக பருத்தித்துறை-முனை சென். தோமஸ் "A" அணியின் நட்சத்திர நாயகன் நந்தன் (ஆருண்ராஜன்) தெரிவு செய்யப்பட்டார். (சு)

## தேசிய கிரிக்கெட் வீரர்கள் உள்ளூர் போட்டியில் விளையாடலாம்

### தளர்ந்தது தடை

தேசிய அளவிலான கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்கும் இலங்கை அணி வீரர்கள் உள்ளூர் போட்டிகளிலும் தாராளமாக பங்கேற்கலாம் என அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது. இலங்கை கிரிக்கெட் வாரியம் வெளியிட்டுள்ள ஒரு முக்கிய அறிவிப்பில், தேசிய போட்டிகள் நடைபெறும் அதே காலகட்டத்தில் உள்ளூர் போட்டிகளும் நடைபெறுமேயானால் இரண்டிலும் இலங்கை அணி வீரர்கள் பங்கேற்க தடை ஏதுமில்லை. இந்த புதிய விதி முறையை நிர்வாகம் கொண்டு வர முக்கிய காரணம் பல இளம் திறமையான இலங்கை வீரர்கள் பல வாய்ப்புகளை முன்பு இழந்திருக்கிறார்கள். இனி இந்த புதிய விதிமுறையால் அப்படி நடக்காது. இளம் வீரர்கள் நன்றாக விளையாடி தங்கள் திறமைகளை நிரூபிக்கலாம. மேலும் இப்படி செய்வதால் இலங்கை கிரிக்கெட் அணியின் தரம் உயரும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆனாலும் எல்லாமே விதிமுறைகளுக்கு உட்பட்டதாகவே நடக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது.

## இன்றைய போட்டிகள்

ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர் கிங் பட்டத்திற்கான உதைபந்தாட்ட போட்டியில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு மின்னொளியில் நடைபெறும் போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழகமும் இரவு 8 மணி க்கு நடைபெறும் போட்டியில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இளவாலை சென்.ஹென்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (சு)

## இலங்கை அணியிலிருந்து ஓரங்கட்டப்பட்டதால் அமெரிக்காவில் சாதித்துக் காட்டிய வீரர்

இலங்கை அணியின் தலைவரான மத்யூஸ் காயம் காரணமாக ஓய்வு பெற்று வருகிறார்.

இவருக்கு பதிலாக டெஸ்ட் அணியின் தலைவராக ஹேரத்தும், ஒரு நாள் அணியின் தலைவராக உபுல் தரங்காவும் தற்போது செயற்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இலங்கை அணியின் முன்னாள் வீரரான தில்காரா லொகுஹெட்டிகே அமெரிக்காவில் நடைபெற்ற இருபது ஓவர் கிரிக்கெட் போட்டியில் தன்னுடைய திறமையை நிரூபித்து காட்டியுள்ளார்.

அமெரிக்காவில் அண்மையில் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இதில் இறுதி ஆட்டத்திற்கு அமெரிக்க ஒல்ச்டார் அணியும் ஆப்கானிஸ்தான் அணியும் மோதின. அமெரிக்க ஒல்ச் டார் அணிக்கு தில்காரா லொகுஹெட்டிகே தலைவராக செயற்பட்டார.



இப்போட்டியின் போது அவர் காலில் காயம் ஏற்பட்டுள்ளது. அதையும் மீறி இவர் தன்னுடைய அணிக்காக சிறப்பாக விளையாடியுள்ளார்.

அதன்படி 20 பந்துகளை சந்தித்த இவர் 54 ஓட்டங்கள் குவித்தார். அதுமட்டுமின்றி 13 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்து ஒரு விக்கெட்டும் வீழ்த்தியுள்ளார். இவர் தலைமையிலான அமெரிக்க அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது.

மேலும் இலங்கை கிரிக்கெட் தேர்வு குழுவினர் மற்றும் மத்யூஸ் ஆகியோர் தில்காரா லொகுஹெட்டிகே மீது தொடர்ந்து குற்றம் சாட்டியதாகவும் அதனாலேயே ஒருநாள் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றதாகவும் கூறப்படுகிறது.

# இன நல்லிணக்கத்தைப் பற்றி...

கமும் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்து வதற்கான வேலைத்திட்டங்களை முன் னெடுக்கவில்லை. ஆனால் தற் போதைய அரசாங்கம் கடந்த இரண்டு வருடங்களாக இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயற் திட்டங்களை முன்னெடுப்பது போன்று தெரி கின்றது.

நீங்கள் என்னிடம் கேட்கலாம் 11 வரு டங்கள் நீங்கள் ஜனாதிபதியாக இருந்தீர்கள் தானே நீங்கள் என்ன செய்தீர்கள் என கேட் கலாம்.

நான் அதிகாரத்திற்கு வந்தவுடனயே நான் சமாதானத்திற்கான வேலைத்திட் டத்தினை நல்லிணக்கத்திற்கான கருத்தின்னை யும் பேசினேன். அப்போது சில சிரேஷ்ட அமைச்சர்கள் அவ்வாறு இன நல்லிணக்கத் தைப்பற்றி பேச வேண்டாம் உங்களுக்கு வாக்கு குறைந்து விடும் என்று கூறினார்கள்.

ஆனால் நான் வடக்கிலிருந்து தெற்கு கிழக்கிலிருந்து மேற்கு வரைக்கும் இன நல்லிணக்கத்தையும் சமாதானத்தையுமே பேசினேன். எனக்கு அதன் மூலம் மக்கள் பெருமளவிலான ஆதரவினை தந்தார்கள்.

சமாதானம் சம்பந்தமான கருத்தினை இலங்கை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார் கள் என்ற கருத்து பொய் என்பதை எனக்கு கிடைத்த வாக்குகளை வைத்து நான் நிரூ பித்தேன்.

சிங்கள தமிழ் முஸ்லிம் மக்கள் எனக்கு அதிகமாக வாக்களித்தார்கள். வடக்கில் அன்றைய சூழ் நிலையில் தமிழீழ விடு தலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் வாக் களிப்பதை தடுத்திருந்தார். எனினும் கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் முஸ்லிம் மக்கள் 85 வீதம் எனக்கு வாக்களித்தார்கள்.

எனது அரசாங்கம் 1994ஆம் ஆண்டு ஆட்சியமைத்த பிறகு வெண்தாமரை எனும் இயக்கத்தை ஆரம்பித்து நான் சமாதானம் நல்லிணக்கம் வேலைத்திட்டத்தினை மேற் கொண்டதுடன் பல்வேறு சமாதான செயற் திட்டங்களையும் முன்னெடுத்தேன்.

அப்போது விடுதலைப்புலிகளை பேச்சு வார்த்தைக்கு அழைத்தோம். என்றாலும் அவர்கள் கேட்கவில்லை. இருந்தாலும் தமிழ மக்கள் மத்தியில் மாற்றத்தினை கொண்டு வரவேண்டுமென நான் முயற்சி செய்து அதற கான நடவடிக்கை எடுத்த போது அதற்கு பயந்து என்னை கொலை செய்ய புலிகள் எத்தனித் தார்கள். சில இன வாதிகளும் என்னை விமர சித்தார்கள்.

சமாதானத்தையும் நல்லிணக்கத்துக்காக அன்றும் சிலர் உழைத்தார்கள் இன்றும் சிலர் உழைப்பவர் இருக்கின்றார்கள். தற் போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமர் இந்த நல்லிணக்க செயற்பாட்டை மேற்கொள் வதில் அக்கறையோடு செயற்படுகின்றனர்.

இந்த அரசாங்கத்தை நான் கொண்டு வரு வதற்கு நான் கணிசமான பங்களிப்பு செய்த வள் என்ற வகையில் பல் வேறு பதவிகளை யும் எனக்கு தருவதற்கு முன்வந்தார்கள். ஆனால் அவைகளை நான் பொறுப்பெடுக்க வில்லை எனினும் இந்த நாட்டில் நல்லிணக் கத்தை உருவாக்குவதற்காக நல்லிணக்கம் தொடர்பான ஒரு பொறுப்பை எடுத்தேன்.

அந்த வகையில் தேசிய நல்லிணக்க செயல கத்தின் மூலம் இந்த நல்லிணக்க வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். இன்று ஜனாதிபதியும், பிரதமரும் பொது வான அடிப்படையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென ஒரே நோக்கத்தின் அடிப்படையில் செயற்பட்டுக்கொண்டிருக் கின்றார்கள்.

ஒருவர் இன்னொருவருக்கு உதவி செய்து கொண்டு பொதுவான சிந்தனை அடிப் படையில் நாட்டைக் கொண்டு செல்கின்றார் கள். விஷேடமாக நல்லிணக்கம் என்ற ரீதி யில் இவ்விருவரும் ஒரே கருத்துடன் இந்த நாட்டை ஆட்சி செய்கின்றார்கள்.

எதிர்காலத்தில் இவ்வாறான மாணவர் களின் மூலம் இந்த நாட்டில் இளம் பராயத் திலிருந்தே நல்லிணக்கம் புரிந்துணர்வு என்பவற்றை ஏற்படுத்துவதற்கு இவ்வாறான நல்லிணக்க செயற்திட்டங்கள் வெற்றியளிக் கும் என நம்புகின்றேன் என்றார். (செ-11)

## தப்பித்த ‘குடு பேபி’...

அண்மையில் 180 மில்லி கிராம் குடுவு டன் கைதான குடுபேபி என அழைக்கப்படும் சந்தேக நபரே தப்பியோடிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக வைத்து கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட குறித்த நபரே முன்ன தாக நேற்று புதன்கிழமை காலையில் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவற்காக யாழ்.நீதிமன்ற சிறைக் கூடத்தில் இருந்து மன்றிற்குஅழைத்துச் செல்லும் சிறு தூரத் தில் பொலிஸாரை ஏமாற்றி விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இவ்வாறு தப்பிச் சென்றவரை தேடிய போது, [illegible]தேக நபர் மாலை 4 மணியளவில் யாழ். மத்திய பஸ் தரிப்பிடத்துக்கும் யாழ். போதனா வைத்தியசாலைக்கும் இடையில் வைத்து பொலிஸாரால் மீளவும் கைது செய்யப்பட் டுள்ளார். (செ-4)

## ஆயுதக்குழு உறுப்...

சாட்டுகளைச் சுமத்தப் போவதில்லை என்று பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் நீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, சட்டமா அதிபர் திணைக் களத்தின் அறிவுறுத்தலுக்கமைய பயங்கர வாத தடைச்சட்டத்திலிருந்து பணச்சலவை சட்டத்தின் கீழ் அவர்கள் மீது குற்றச்சாட்டு கள் சுமத்தப்படும் என்றும் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இதையடுத்து, இவர்களை ஒரு மில்லி யன் ரூபாய் பெறுமதியான இரண்டு பேரின் பிணையில் செல்வதற்கு கொழும்பு மேலதிக நீதிவான் அருணி ஆட்டிக்கல அனுமதி அளித்தார்.

அதேவேளை, இவர்களை நாட்டை விட்டு வெளியேற தடைவிதித்த கொழும்பு மேலதிக நீதிவான் அருணி ஆட்டிக்கல, ஒவ்வொரு மாதமும் இரண்டாவது ஞாயிற் றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள பயங் கரவாத தடுப்புப்பிரிவில் முன்னிலையாக வேண் டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்.

இந் நிலையில் இவ் வழக்கு விசாரணை மே மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது. (செ-9)

## ரணில், கருணாவுடன்...

பில் கருத்துத் தெரிவித்த அஸாத்சாலி, நாட்டின் பிரச்சினையையும் கலவரத்தையும் உண்டுபண்ணி ஆட்சியை மாற்றுவதற்கு அலிபாபாவும் 40 திருடர்களும் திட்டமிட்டு செயற்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

பொதுபலசேனா, ராவணா பலய, ராவய, சிங்கலே போன்ற அமைப்புக்கள் இந்த நாட்டை புரட்டிப் போடுவதற்கு, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் சேர்ந்து திட்டமிட்டுவருகின்றனர்.

இதனை விளங்கிக் கொள்ளாத அர சாங்கம் எஸ்ரீஎப்பின் முன்னாள் தலைவர் சரத் சந்திர மற்றும் கருணா அம்மான் ஆகி யோரை கைது செய்து வருகின்றது.

கருணா அம்மான் வாகனத்தை பாவித் தமைக்காக கைது செய்யப்பட்டார் என்றால் அந்த வாகனத்தை பாவிக்க கொடுத்தது யார்? என்பதைக் கண்டுபிடிக்குமாறும் நான் அர சாங்கத்தை கோருகின்றேன்.

அத்தோடு சிறிய சிறிய களவுகளைச் செய்பவர்களை விட்டுவிட்டு பெரிய களவு களைச் செய்த வர்களை கைது செய்யுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் ஏற்பட்டு இரண்டு வருடாங்கள் கடந்தும் வீதியில் நடமாடித் திரிவதற்கு மக்கள் பயப்படுவதாகக் குறிப்பிட்ட அவர், மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் கொல்லப்பட்ட 17 ஊடகவியலாளர்களில் 7 ஊடகவியலாளர்கள் தமிழர்கள் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

## நட்டஈடு வழங்...

கம்பஹா மாவட்டத்தில் அமைந்துள்ள கிரிபத்கொட பிரதேசத்தில் வசிக்கும் அசித நாணயக்கார எனும் நபர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பான தீர்ப்பை நேற்று வழங்கிய போதே நீதிபதிகள் இந்த உத்தரவைப் பிறப்பித்தனர்.

கடந்த 2010ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் உத்தர வின்படி தனது வீட்டின் ஒரு பகுதி இடிக்கப் பட்டதாக மனுதாரர் நீதிமன்றத்தில் தெரி வித்தார்.

இந்த நடவடிக்கைகளுக்கு கிரிபத்கொட பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியும் தனது ஒத்துழைப்பை வழங்கியதாக மனு மூலம் குற்றம்சாட்டப்பட்டது.

இதன் மூலம் பிரதிவாதிகள் தனது மனித உரிமைகளை மீறியுள்ளதாகத் தீர்ப்பளிக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்த மனு தொடர்பான தீர்ப்பை அறி வித்த நீதிபதிகள் இந்த நடவடிக்கையின் மூலம் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா மற்றும் கிரிபத்கொட பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி மனித உரிமை களை மீறியுள்ளதாக தெரிவித்தார்.

இதன் படி முன்னாள் அமைச்சர் மேர் வின் சில்வா தனது சொந்த பணத்திலிருந்த நான்கு இலட்ச ரூபாயை மனுதாரருக்கு நஷ்டஈடாக வழங்க வேண்டுமென்று நீதி மன்றம் உத்தரவிட்டது.

அதே போன்று பொலிஸ் பொறுப்பதிகாரி 50 ஆயிரம் ரூபாயும் அரசாங்கம் ஒரு இலட்ச ரூபாயும் நஷ்ட ஈடாக வழங்க வேண்டு மென்று இந்தத் தீர்ப்பில் மேலும் உத்தர விடப்பட்டுள்ளது. (செ-11)

## விடுதலைப் புலிகளின்...

இலங்கையையும் தமிழீழ விடுதலைப் புலிகள் கைப்பற்றி கட்டுப்படுத்திக் கொண்டிருக கின்றார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக கூட்டு எதிர்க்கட்சி சந்தேகம் வெளியிட்டுள்ளது.

முன்னாள் பிரதியமைச்சர் கருணா அம்மான் கைது செய்யப்பட்டமை தொடர் பாகவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சி தனது கடும் எதிர்ப்பையும் இன் நேற்றையதினம் வெளியிட்டது.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர்களான டளஸ் அழகப் பெரும, உதய கம்மன்பில, ரஞ்சித் சொய்ஸா உள்ளிட்டோர் கலந்துகொண்ட ஊடகவிய லாளர் சந்திப்பு நேற்றையதினம் கொழும் பில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப் பினர் உதய கம்மன்பில “விநாயக மூர்த்தி முரளிதரன் என்ற கருணா அம் மான் அரச வாகனத்தை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சா ட்டில் கைது செய்யப்பட்டார்.

யார் இந்த கருணா அம்மான்? அன்று அங்குலிமாலா, கெப்பட்டி பொல போன்ற வர்களைப் போன்று இருளிலிருந்து வெளிச் சத்திற்கு வந்தவர். பிழையான வழியிலி ருந்து சரியான வழிக்கு வந்தவர். கிழக்கு மாகாணத்தை கைப்பற்றிக் கொள்ளும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரயத்தனத் தில் கருணா அம்மானும், பிள்ளையானும் முக்கிய பங்காற்றினர். இன்று நாம் அனுப விக்கும் சுதந்திரத்தின் பங்காளர்களில் ஒரு வராக கருணா இருக்கின்றார்.

இன்றைய அரசாங்கத்தில் அவர் நல்லி ணக்க ஆலோசகராகவும், குறைந்த பட்சம் வெளிவிவகார அமைச்சருக்கு நெருக்க மான உருத்ரகுமாரனைப் போன்றவர்களைப போல வரப்பிரசாதங்களை அனுபவித்தி ருக்கலாம். தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து அரசாங்கத்துடன் இணைந்து கொண்டதாலேயே கருணா அம்மான் இன்று சிறை வைக்கப்பட்டுள்ளார். கடந்த வாரம் விசேட அதிரடிப்படையின் முன்னாள் பிரதானியும் வாகன முறைகேட்டுப் பாவனை குற்றத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறி யலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஆனால் விடுதலைப் புலிகளின் தாக்குதல் கள் மற்றும் இதர விடயங்களில் ஈடுபட்டு பாரதூர தண்டனைகளை பெறுவதற்கு ஈடான வர்களுக்கு வழக்கு தொடராமல் விடுதலை செய்வதற்காக சட்டமா அதிபர் நடவடிக்கை எடுத்துவரும் நிலையில்தான் விசேட அதி ரடிப் படையின் முன்னாள் பிரதானியும், கருணா அம்மானும் கைது செய்யப்பட்டனர எனக் குற்றம்சாட்டியுள்ளார். (செ)


## அரசாங்க அறிவித்தல்
## கேள்வி அறிவித்தல் - 2017

யாழ். மாவட்ட செயலகத்தால் பின்வரும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

1. சுத்திகரிப்புச் சேவை (மலசலகூடம் மற்றும் சுற்றுப்புறம்)
2. புகைப்படப் பிரதி இயந்திரப் பராமரிப்பு (Photo Copy Machine)
3. உள்ளகத் தொலைபேசித் தொகுதி பராமரிப்பு
4. வாகனச் சுத்திகரிப்புச் சேவை
5. பாதுகாப்புச் சேவை
6. மின் / நீர் இணைப்பு பொருத்துநர் சேவை

மேற்படி விடயம் தொடர்பான மேலதிக தகவல்களையும், விண்ணப்ப படிவத்தினையும் செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் 2016.12.01ஆம் திகதியிலிருந்து அலுவலக நாட் களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 2.00 மணி வரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபாய் 500.00 உம், மீளளிக்கக் கூடிய வைப்புப் பணமாக ரூபாய் 5,000.00 உம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம் செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக்கொண்ட விபரங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்படிவங்களை ரூபாய் 5,000.00 செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியுடன் “தலைவர், பெறுகைக்குழு, மாவட்டச் செய லகம், யாழ்ப்பாணம்” எனும் முகவரியிட்ட, கடித உறையின் இடது பக்க மேல் மூலை யில் குறிப்பிட்ட சேவையினுடைய விபரத்தினைக் குறிப்பிட்டு 2016.12.15ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அல்லது நேரடி யாகச் செயலக நிதிக்கிளையிலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் அன்றைய தினம் மு.ப. 11.00 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன் போது விண் ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

நா. வேதநாயகன்
மாவட்டச் செயலர், யாழ்.மாவட்டம்.

## அரசாங்க அறிவித்தல்

**பதிவு செய்யப்பட்ட சமூக மட்ட அமைப்புக்களைக் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வேலைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக பதிவு செய்தல். யாழ்.மாவட்டம்**

மேற்படி விடயம் தொடர்பாக யாழ்.மாவட்டச் செயலகம் மற்றும் யாழ் மாவட்டத்திலுள்ள பதினைந்து பிரதேச செயலகங்களின் ஊடாக 2017ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட வுள்ள கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வேலைகளினை ஒப்பந்த அடிப்படையில் நிறை வேற்றி ஒப்படைப்பதற்கு விருப்பமுள்ள சமூக மட்ட அமைப்புகளினை பதிவு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ் விண்ணப்பப் படிவங்களை மாவட்டச் செயலக களஞ்சிய நலன்புரிக்கிளை மற்றும் மாவட்டத்திலுள்ள பதினைந்து பிரதேச செயலகங்கள் என்பவற்றில் அலுவலக நேரங்களிலும், மாவட்டச் செயலக www.Jaffna.dist.gov.lk இணையத்தளத்தில் இருந்தும் தரவிறக்கம் செய்து பெற்றுக்கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் 28.12.2016 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக் கக் கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “கட்டுமானமும் பராமரிப்பும் தொடர்பான சமூக மட்ட அமைப்புக்களைப் பதிவு செய்தல் - 2017 ” எனக் குறிப்பிட்டு “அரசாங்க அதிபர், களஞ்சிய நலன்புரிக்கிளை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்” என்னும் முகவரிக்கு அல்லது தங்கள் வதிவிட பிரதேசத்திற்குரிய பிரதேச செயலாளர்களுக்கு முகவரியிட்டு நேரடியாகவோ கடிதமூலமாகவோ சமர்ப்பித்தல் வேண்டும்.

நா. வேதநாயகன்
மாவட்டச் செயலர், யாழ்.மாவட்டம்.

(C-6529)

**உயர் கணக்கியல் கல்லூரி H.A.C**

**சித்தன்கேணி**

தரம்-06 முதல் O/L வரை
கல்வியாண்டு 2017
தமிழ், ஆங்கில மொழி மூலமான வகுப்புக்கள்

**ஆசிரியர் குழாம்**

| | |
|---|---|
| விஞ்ஞானம் | திரு.R.இராஜமுகுந்தன் |
| | திரு.T.யதுஷன் |
| | திரு.S.சச்சிதானந்தம் |
| | செல்வி.K.ஆரணி |
| கணிதம் | திரு.M.R.பிரதீப் |
| | திரு.K.டினேஸ் |
| | திரு.S. ஜெகஜீவன் |
| | திருமதி R.லோஹினி |
| தமிழ் | திரு.R.இராஜகோபால் |
| | செல்வி N.நிஷா |
| வரலாறு | திரு.S.S.தாஸ் |
| | திரு.K.புவிராஜ் |
| சுகாதாரம் | திரு.S.முகுந்தன் |
| | திரு.S.ஸ்ரீகுமார் |
| புவியியல் | திரு.S.பிரபா |
| | திரு.V.ஜனகன் |
| ஆங்கிலம் | திரு.J.பஸ்ரியன் |
| | திரு.U.ஹரிகரன் |
| சமயம் | க.பார்த்தீபன் |
| | திரு.அ.குகதாஸ் |
| | திரு.S.நிரோச் |
| குடியுரிமை | திரு.S.கஜுந்தன் |
| ICT | திரு.S.விதுஷன் |
| சித்திரம் | திரு.V.வித்தி |
| வணிகக்கல்வியும் கணக்கீடும் | திரு.A.நாகதீபன் |
| சிங்களம் | திருமதி J.பூபதி |
| சங்கீதம் | திருமதி S.கலா |

ஒவ்வொரு பிரிவிலும்
40 மாணவர்களுக்கு அனுமதி.
ஆரம்பம்:-03.12.2016
பி.ப 3.00 மணி
(சி-6533)



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



**புலமைப்பரிசில் பரீட்சையின் பின்**
**புதிய ஆரம்பம்**

தரம் 06 இற்கான புதிய வகுப்பு டிசம்பர் 05இல் ஆரம்பம். அனுமதிகள் வழங்கப்படுகின்றன புலமைப்பரிசில் பரீட்சையில் 150க்கு மேல் புள்ளி பெற்ற மாணவர்களுக்கு அனுமதிக்கட்டணம் இலவசம்.

**The Express Institute**
Irupalai Junction, Kopay
(சி-6524)



**சிறுநீரகம் தேவை**

யாழ் நகரில் வசிக்கும்
ஒருவருக்கு **A** அல்லது **O**
இரத்த வகையிலுள்ள
சிறுநீரகம் தேவை.
**0775026827**
**0775723236**
(6704)



**யாழ்** Register now!
**Start web designing classes with practicals**
weekdays 9-11am 7-9 pm
weekends 9-12am 8-9.30 pm
HTML CSS jQuery JavaScript Bootstrap
0777861677
(6680)



வவுனியாவில்.......
04.12.2016 பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ள BA (EXTERNAL) 2016 மாணவர்களின் போட்டிப் பரீட்சைக்கான செயலமர்வுகள்
02, 03-12-2016 வெள்ளி, சனி ஆகிய தினங்களில்
காலை 09.00 முதல் பி.ப 03.00 வரை

| | |
|---|---|
| நுண்ணறிவு: | J.ஜெனிற்றன் SLAS |
| பொது அறிவு: | S.அன்ரன் வெரோ ADR |
| தகவல் மையம்: | R.தமிழழகன் PGD IT |

விபரங்கட்கு:S.தேவதாஸ் (நிர்வாகி CDC) 0773211233, 0242223228

**கேம்பிறிஜ் பட்டப்படிப்புக் கல்லூரி**
8ஆம் ஒழுங்கை வைரவர் கோவில் வீதி, வைரவபுளியங்குளம், வவுனியா
(6757) (கொக்கோலோ கம்பனிக்கு முன்பாக)



**அன்பொளி கல்வியகம்**
**யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மைதான வீதி**
நவீன கற்பித்தல் சாதனங்கள் மூலமான
மகிழ்ச்சிகரமான கற்றல்
2017இல் தரம் 1, 2, 3, 4 மாணவர்களுக்கான வகுப்புக்கள்
ஆரம்பமாகின்றன.
**காலம்-03.12.2016 சனிக்கிழமை**
தினமும் பி.ப 3.00 தொடக்கம் பி.ப 5.00 மணிவரை
அனுமதிகளை பெற்றுக் கொள்ளலாம்.
(6526)



"ஓம் சச்சிதானந்த பரப்பிரம்மா புருஷோத்தம பரமாத்மா ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ"

**தரம் 6 முதல் O/L ற்கு** **யாழ் நகரின் NO : 1**

# எடிசன் அக்கடமி

INTENT + EFFORT + GRACE = SUCCESS

யாழ்ப்பாணம் | கலட்டி | நல்லூர் | கொக்குவில்

**புதிய கல்வி ஆண்டு 2017**

# தரம் 6

English Medium / தமிழ் மொழி மூலமான வகுப்புக்கள்

**எமது சலுகைகள்**
**புலமைப் பரிசில் பரீட்சையில்**

- மாவட்டத்தில் முதல் 10இடம் பிடித்தோருக்கு தரம் 6 முதல் O/L வரை இலவசக் கல்வி
- 170 புள்ளிகளும் அதற்கு மேலும் பெற்றவர்களுக்கு December 2017 வரை இலவசக் கல்வி
- 160 புள்ளிகளும் அதற்கு மேலும் பெற்றவர்களுக்கு August 2017 வரை இலவசக் கல்வி
- 150 புள்ளிகளும் அதற்கு மேலும் பெற்றவர்களுக்கு April 2017 வரை இலவசக் கல்வி
- 150 இலும் குறைந்த புள்ளி பெற்றவர்களுக்கு April 2017 வரை 1/2 கட்டணம்

**தரம் 6**
ஆரம்பம் : 04/12/2016 ஞாயிறு

| | |
|---|---|
| யாழ் எடிசன் | → மு.ப 09.00 மணி |
| நல்லூர் எடிசன் | → மு.ப 10.30 மணி |
| கொக்குவில் எடிசன் | → பி.ப 03.00 மணி |

**கணிதம்**
திரு. B.P.பாஸ்கரன்

**தரம் 7 முதல் O/L வரை**
ஆரம்பம் : 05/12/2016 திங்கள்

| | |
|---|---|
| யாழ் எடிசன் | → மு.ப 08.00 மணி |
| கலட்டி எடிசன் | → மு.ப 09.30 மணி |
| நல்லூர் எடிசன் | → மு.ப 11.30 மணி |
| கொக்குவில் எடிசன் | → பி.ப 12.30 மணி |

**தொடர்பு : 077 77 37 926**

பெற்றோர்களே உங்கள் குழந்தைகளை எங்களிடம் ஒப்படையுங்கள் ! அவர்களையும் சாதனையாளர் ஆக்குங்கள் !!



## Group and Personal Class

புதிய பிரிவுகள் ஆரம்பம்
**English and Tamil Medium**
ஆண்டு 6 - 11 வரை

ஆரம்பம் 04.12.2016 7.00 மணி

யாழ் நகர்புற முன்னணி ஆசிரியர்கள் தற்போது
கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் பழனியாண்டவர் கோவிலடியில்

தமிழ்
திரு.சி.ரகுபதி (யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர்)

ஆங்கிலம்
திரு.R.போகன் (தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரியர்)
திரு.P.மதன் (தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரியர்)

வரலாறு
திரு.ஜெயகணேஸ் (யாழ் பிரபல முன்னணி ஆசிரியர்)
திரு.T.விக்கி (யாழ் பிரபல முன்னணி ஆசிரியர்)

விஞ்ஞானம்
திரு.V.சண் (Tamil Medium)
(30 வருடம் அனுபவம் வாய்ந்த யாழ் பிரபல முன்னணி ஆசிரியர்)
திரு.A.கஜேந்திரன் (English Medium)
(யாழ் பிரபல முன்னணி ஆசிரியர்)

கணிதம்
திரு.அ.ஜெயம் (Tamil Medium)
(30 வருடம் அனுபவம் வாய்ந்த யாழ் பிரபல முன்னணி ஆசிரியர்)
திரு.P.N.மதன் (English Medium)
(யாழ் பிரபல முன்னணி ஆசிரியர்)

குடியுரிமைக்கல்வி புவியியல்
திரு.T.ரூபசிங்கம் (English Medium)
(யாழ் இந்துக் கல்லூரி ஆசிரியர்)
திரு.K.துஷ்யந்தன் (யாழ் பிரபல முன்னணி ஆசிரியர்)

Advance Maths and Olymphiad
திரு.P.N.மதன் (யாழ் பிரபல முன்னணி ஆசிரியர்)

Olymphiad Science
திரு.V.சண்

அனுமதிகளை முற்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
வரையறுக்கப்பட்ட அனுமதிகளே வழங்கப்படும்.

இருபாலை வீதி, பழனியாண்டவர் கோவிலடி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
இயக்குனர் R. போகன் T.P : 077 0459855
(6751)



SCIENCE ACADEMY NALLUR ARIYALAI JAFFNA

# சயன்ஸ் அக்கடமி

**நல்லூர்** (முருகன் ஆலயம் அருகாமை) **அரியாலை** (ஸ்ரான்லிக் கல்லூரி அருகாமை)

**தரமான கல்வியை வழங்கும் என்றும் முதற்தர கல்வி நிறுவனத்தின்**

# புதிய கல்வியாண்டு - 2017

**30 வருடங்களுக்கு மேலான கல்விப் பாரம்பரியத்தில் என்றும் முன்னணியில் திகழும் எமது நிறுவனம்**
**அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க புதிய கல்வியாண்டில் மாணவர்களை இணைத்துக்கொள்கின்றது.**
நிகரற்ற சிறப்பான நிர்வாகக் கட்டமைப்பின்கீழ் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலில்

**தமிழ்மொழி மூல வகுப்புக்கள்**
தரம் 6 முதல் **O/L** வரை

**English Medium Classes**
**Gr. 6 - O/L**

**வெற்றித்தேர்வு ஆரம்பக் கல்விப்பிரிவு**
**தரம் 1 முதல் தரம் 5 வரை**
வாராந்தம் வெற்றித்தேர்வு பரீட்சைகளோடு
**அனுமதிகள் வழங்கப்படுகின்றன.**

**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**

**03.12.2016**
**சனிக்கிழமை**
**பி.ப 3.00 மணி**

தொடர்புகளுக்கு: 0775388471, 0773126807


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.